விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 29 சனிக்கிழமை (15.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 301

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே


லசந்த

# ‘லசந்தவை நானே கொலை செய்தேன்’

## கடிதம் மூலம் ஒப்புதல் அளித்த இராணுவ அதிகாரி தற்கொலை


எதிரிசிங்க

(கேகாலை)

சண்டே லீடர் வாராந்த ஆங்கிலப் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை தாமே படுகொலை செய்ததாக கடிதமொன்றை எழுதி வைத்து விட்டு ஓய்வுபெற்ற உயர்மட்ட முன்னாள் புலனாய்வு அதிகாரியொருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## 130 கிலோ கேரள கஞ்சா மீட்பு



(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதகல் கடற்பரப்பினூடாக 130 கிலோக்கிராம் நிறையுடைய ஒரு கோடியே 30இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா பொதிகள் வெளி மாவட்டம் ஒன்றுக்கு கடத்தப்பட இருந்த நிலையில் அதனை புலனாய்வுத்துறை பொலிஸார் முறியடித்துள்ளனர்.

நேற்றைய தினம் அதிகாலை கஞ்சா கடத்தல் ஒன்று இடம்பெறவு

24ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸ் தடுப்பிலிருந்த நபர் உயிரிழப்பு

## கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிந்திக்க கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக 2011ஆம் ஆண்டளவில் பணியாற்றி வந்து தற்போது கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக உள்ள சிந்திக்க பண்டார கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த போது பொலிஸ் தடுப்பு காவலில் இருந்த நபர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு சுன்னாகம் பொலிஸார் திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பிலான விசாரணையின் போது இளைஞர் ஒரு

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி இன்று இந்தியா பயணம்

(கொழும்பு)

பிராந்திய அமைப்புகளின் ஒத்துழைப்பில் புதியதோர் தோற்றத்தைக் குறிக்கும் வகையில் நடைபெறும் பிரிக்ஸ்-பிம்ஸ்ரெக் மாநாட்டில் பங்கு பற்றுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று இந்தியா பயணமாகவுள்ளார்.

8ஆவது தடவையாக நடைபெறும்

23ஆம் பக்கம் பார்க்க....

## மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் பரிதாப மரணம்



23ஆம் பக்கம் பார்க்க....

## மலையக உறவுகளுக்கு ஆதரவளித்து

## யாழ்.பல்கலையில் நேற்று போராட்டம்



(யாழ்ப்பாணம்)

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துபவர்கள் வாழ்வில் உயர்வில்லையா? என்ற கோசத்துடன் ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு வழங்கக் கோரி மலையக தேயிலை தோட்ட தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், அவர்களுடைய கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற கோரி

23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையின் முன்னேற்றத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவும்

### ஜனாதிபதியிடம் புதிய தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

குறுகிய காலப்பகுதியில் புதிய அரசாங்கத்தின் கீழ் இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு வியப்பாகவுள்ளதாக இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய தூதுவர் ராங் லாய் மாகி தெரிவித்தார். மேலும் நல்லிணக்கம், பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான அரசாங்கத்தின் திட்டங்களு

23ஆம் பக்கம் பார்க்க....



## இ.போ.ச பேருந்துடன் மோ.சைக்கிள் விபத்து

### குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நீர்வேலிக்கும் சிறுப்பிட்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். உரும்பிராயை தெற்கை சேர்ந்த தம்பிராசா பாலேந்திரன் (வயது 55) என்ற குடும்பஸ்தரே இதில் உயிரிழந்தவராவார்.

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புதிய அதிபர் நியமனம் இரத்து; பாதிக்கப்பட்ட அதிபர்கள் முதலமைச்சருக்கு கடிதம்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளில் புதிதாக அதிபர் நியமனம் பெற்று நியமனம் இரத்துச் செய்யப்பட்ட 84 அதிபர்கள் தமக்கு இழைக்கப்பட்ட பாதிப்பினை எடுத்து கூறும் வகையில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஏனைய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட அதிபர்களிடையேயான கலந்துரையாடல் நாளை மறுதினம் 17-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். நல்லூர் முன்றலில் இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை நியமனம் பெற்று பாதிக்கப்பட்டோர் அமையம் என்ற பெயரில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் வருமாறு,

வட மாகாணத்தில் அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்ற அதிபர்களில் முறைப்படி கோரப்பட்ட விண்ணப்பம் மற்றும் நேர்முகத் தேர்வின் ஊடாக தெரிவு செய்யப்பட்டு பாடசாலைகளில் நியமிக்கப்பட்ட 84 அதிபர்களின் நியமனம் இரத்து செய்யப்பட வேண்டும் என்ற தங்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய எமது பதவி இரத்துச் செய்யப்பட்டு முன்னைய பாடசாலைகளுக்கு செல்ல வேண்டும் என கடிதம் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் நாம் மிகுந்த வேதனை, கவலை, மனவிரக்தி என்பவற்றினால் பாதிக்கப்பட்டு தங்களிடம் வந்துள்ளோம். சமூகத்தில் நாம் மிகப் பெரிய அவமானத்தை எதிர்கொண்டு வருகின்றோம்.

தாங்களும் தங்களின் கீழான அதிகாரிகளும் திட்டமிடாது முன்னெடுத்துவரும் செயற்பாடுகளினால் இடையில் பகடைக்காய்களாக அகப்பட்டு அவமானப்படுகின்றோம். நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் தகுந்த நடவடிக்கை எடுக்காது அதிகாரிகள் நியமனம் வழங்கிய பின்னர் இரத்துச் செய்வது எந்தவகையில் நியாயமாகும் என மனவேதனை அடைகின்றோம். எனவே தெளிவாக நாம் வேண்டுவது யாதெனில்,

01. நாம் எவரும் முன்னைய பாடசாலைக்கு செல்ல முடியாத நிலையிலும் பல நடைமுறைச் சிக்களிலும் உள்ளதால் 84 பேரில் எவரும் பழைய பாடசாலைக்கு செல்வதற்கு தயாரில்லை என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

02. நியமிக்கப்பட்ட பாடசாலையிலேயே தற்காலிக இணைப்பு வழங்கி எல்லோருக்கும் ஒரே தினத்தில் நியமனம் வழங்க வேண்டும். அத்தினத்தில் எமக்கும் நியமனத் திகதியை வழங்கலாம். மேலும் எதிர்கால நியமனங்களின் போது எமக்கு அதே பாடசாலையில் நியமனம் வழங்க வேண்டும் என தயவுடன் வேண்டுகின்றோம்.

மேலும் இவ்விடயம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 17.10.2016 பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் முன்றலில் நடைபெறும் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ)

# ஊடக அடக்குமுறை யாழில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் நீதியான விசாரணை கோரி யாழில் எதிர்வரும் பதினெட்டாம் திகதி செவ்வாய்கிழமை போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ். ஊடக அமையம் ஏற்பாடு செய்துள்ள இந்த போராட்டத்தில் வடக்கு கிழக்கை சேர்ந்த அனைத்து ஊடக தரப்பும் கலந்து கொண்டு நீதியான விசாரணையை வலியுறுத்தவுள்ளனர்.

மேலும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல் இன்றி பணியாற்றுவதற்கு அனைத்து மட்டங்களிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், தகவலறியும் உரிமை சட்டத்தை உடனடியாக அமுல்ப்படுத்தல் என்ற கோரிக்கைகளும் இதன்போது முன்வைக்கப்படவுள்ளது. இந்த மாதம் பதினெட்டாம் திகதி யாழ் பஸ் நிலையம் முன்பாக நடைபெறவுள்ள போராட்டத்திற்கு தென்பகுதி ஊடக அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடங்களுக்கு மேலாகிவிட்ட நிலையில் தென்னிலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் மட்டுமே விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் கடந்த காலங்களில் கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் இதுவரை எந்த விசாரணையும் நடைபெறவில்லை.

அவர்களுக்கான நீதி என்பது தொடர்ந்தும் மறுக்கப்பட்டு கொண்டே உள்ளது. இந்த நிலையில் தான் புதிய அரசின் காலத்தில் தமிழ ஊடகவியலாளர்கள் தொடர்பில் சர்வதேச தரத்திலான நீதியான விசாரணை ஒன்றை கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (செ-4-9)

## கேள்வி கோருதல்

### மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

01. தலைவர், மாவட்ட செயலக பெறுகைக் குழு சார்பில் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளிற்கான, தற்போது தகுதி உடையவர்களிடம் இருந்தும் தகைமை பெற்றவர்களிமிருந்தும் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளை கோருகின்றனர்.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), வீதி நிர்மாணிப்பதற்கு C-7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தினை கொண்டிருப்பதோடு, பொது நிதி சுற்றறிக்கை, இல. 04/2016 ற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வட மாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

04. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களை மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் (தொலைபேசி இல. 021 222 2427) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதிக்கலாம்.

05. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரண தொகுதி ஒன்றினை **மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.** என்ற முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பித்து 15.10.2016 முதல் 28.10.2016 வரை 09.00 மணியில் இருந்து 15:00 மணிவரையிலான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபாய் ஆயிரம் (ரூபாய் 1000.00) பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

06. கேள்விகள் 31.10.2016 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்ட பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் வருகை தந்த கேள்விதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்படி முகவரியில் கேள்விகோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்.

07. கேள்வி தொடர்பான முற்கேள்விச் சபைக் கூட்டம் மாவட்ட செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 25.10.2016 அன்று 15:00 மணிக்கு நடைபெறும்.

| இல. | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | தேவையான தரம் (CIDA) | கேள்விப் பிணை விபரம் | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும்காலம் | |
| 01. | JF/DPS/Pro./Tour-ism/VI/15/2016-I | மண்டைதீவு ரேடியோ சிலோன் வீதி - கட்டம் I | 6.52 | C7 | 65,200.00 | 25.02.2017 | 120 days |
| 02. | JF/DPS/Pro./Tour-ism/VI/15/2016-II | மண்டைதீவு ரேடியோ சிலோன் வீதி - கட்டம் II | 6.50 | C7 | 65,000.00 | 25.02.2017 | 120 days |

**நா.வேதநாயகன்,**
**அரச அதிபர்/ மாவட்டச் செயலாளர்,**
**யாழ்.மாவட்டம்.**

(C-6118)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி இளைப்பாறிய ஓவிய ஆசிரியர்
அமரர் மாற்கு அவர்கள்,

எமது கல்லூரி இளைப்பாறிய ஆசிரியர்
அமரர் பொன்னையா சபாரட்ணம் அவர்கள்,

எமது கல்லூரி புகழ்பூத்த பழைய மாணவன்
அமரர் டாக்டர் தம்பு குமாரசாமி அவர்கள்

இறைபதம் எய்திய செய்தி கேட்டு எமது கல்லூரியின் கண்ணீரஞ்சலியை காணிக்கையாக்குவதோடு அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி-௭௰)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
## ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம் :- 13
ஆதன இல :- 59 (புதிய பதிவு)
வீதி :- அரசடி ஒழுங்கை
கிராமசேவையாளர் பிரிவு :- J/141 சண்டிலிப்பாய்

வட்டாரம் 13, அரசடி ஒழுங்கை, ஆதன இல 59 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாகியப்பிட்டி இறையும் மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய் இறையும் "அரிசிக்குலவன் தறைக்காடு" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 04 1/2 கொண்ட இவ்வாதனம் யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த இரத்தினசிங்கம் இரவீந்திரன் பெண் புவனேஸ்வரி ஆகிய இவர்களால் அதேயிடத்தைச் சேர்ந்த நவரத்தினம் பூமிநாதன் பெண் சுதர்சினி என்பவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. P.சுந்தரலிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 847 ஆம் இலக்க 09.08.2003 ம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு S.பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 2016/03/256 ஆம் இலக்க 2016.07.09 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்ஆதனமானது "அரிசிக்குலவன் தறைக்காடு" நிலப்பரப்பு 04 குளி 1.56 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பத்திரிகை பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நவரத்தினம் பூமிநாதன் பெண் சுதர்சினி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

(6337)

# ஜனாதிபதியின் கருத்து ஆச்சரியமளிக்கிறது!



## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்து ஆச்சரியமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

சிங்களப் பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனை தெரிவித்தார்.

புலனாய்வுப் பிரிவினர், நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் மற்றும் இலஞ்ச ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணை ஆணைக்குழு ஆகியன அரசியல் நோக்கில் செயற்பட்டால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். ஜனாதிபதியின் இந்தக் கருத்து எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. எவ்வாறெனினும் காலம் தாழ்த்தியேனும் இந்த விடயத்தை ஜனாதிபதி புரிந்து கொண்டமை முக்கியமானது.

இன்று நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் மற்றும் வாழ்க்கைச் செலவு பிரச்சினைகள் குறித்து மக்கள் நன்றாக தெளிவடைந்துள்ளனர்.

எனினும் நாட்டை ஆட்சி செய்யும் தரப்பினருக்கு இது பற்றி போதியளவு விளக்கம் கிடையாது.

மட்டக்களப்பிற்கு விஜயம் செய்திருந்த போது மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் பற்றி கூறியிருந்தனர்.

அதேபோன்று நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள மக்கள் தங்களது பிரச்சினைகள் குறித்து கூறியுள்ளனர்.

எனினும் நாட்டை ஆட்சி செய்யும் தரப்பினர் இதுபற்றி தெரிந்து கொள்ளாமல் இருப்பது ஆச்சரியத்திற்குரியது என மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். இ-7-10)

# ஜனாதிபதி-ராஜபக்ஷக்களுக்கிடையில் இரகசிய ஒப்பந்தம் எதுவும் இல்லை

## மைத்திரியை புகழ்ந்துரைத்து கோத்தபாய விளக்கம்





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ராஜபக்ஷக்களுக்கு இடையில் எதுவித இரகசிய ஒப்பந்தங்களும் இல்லை என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடற்படை அதிகாரிகள் மூவரை நீதிமன்றத்திற்கு அழைத்தமை தொடர்பில் அதிருப்தி வெளியிடுவதற்கு முன்னர் ஜனாதிபதி, தன்னுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளவில்லை என கோத்தபாய தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் கோத்தபாய இந்த தகவலை வெளியிட்டார்.

நிதி குற்ற விசாரணை பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களம் தொடர்பில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்து தொடர்பில் கோத்தபாய கருத்து வெளியிட்டார்.

தற்போதைய ஜனாதிபதி இந்த சம்பவம் தொடர்பில் உண்மையை உணர்ந்து கொண்டமை குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இதேபோன்று பல்வேறு நபர்களின் நிகழ்ச்சி நிரலின் அழுத்தங்களுக்கு அடி பணியாமல், அவரது செயற்பாடுகளில் நேரடியாக செயற்படுவார் என நான் நினைக்கின்றேன்.


எப்படியிருப்பினும் தங்களுக்கு பாரிய ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளமையினால் நாட்டில் உள்ள சட்டத்திற்கமைய அதனை விசாரிப்பது பிழையா? என கேள்வி எழுப்பப்பட்ட போது.

நான் எந்தவொரு விசாரணைகளையும், புறக்கணிக்கவில்லை. பல்வேறு நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளும் இந்த விசாரணைகள் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய மேற்கொள்ளப்படுகிறது என்பதை நாங்கள் கடந்த இரண்டு வருடங்களாக தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளோம்.

தற்போது ஜனாதிபதி அதே முறையில் சுட்டிக்காட்டியுள்ளார் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# பசில் ராஜபக்ஷவின் காணி பகிரங்க ஏல விற்பனைக்கு

## நீதிமன்றம் நேற்று உத்தரவு



முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு சொந்தமானது எனக் கூறப்பட்ட காணியின் உரிமையாளர் தான் அல்ல என்று பசில் ராஜபக்ஷ கூறியிருப்பதனால், மல்வானை பிரதேசத்தில் உள்ள அந்தக்காணியையும் அங்கு அமைந்துள்ள வீட்டையும் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பூகொடை நீதவான் டீ. ருவான் பத்திரண இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை பூகொடை நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மல்வானை, கங்கபட வீதியில் அமைந்துள்ள 16 ஏக்கர் நிலப்பரப்புடனான வீடு, பசில் ராஜபக்ஷவினால் தவறான வழியில் பெற்றுக் கொள்ளப்பட்டதாக குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கில், அந்த காணியும் வீடும் தன்னுடையதல்ல என்று பசில் ராஜபக்ஷ தரப்பால் கூறப்பட்டுள்ளதையடுத்து, அது உரிமையாளர் அற்ற சொத்தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்தக் காணியையும் அங்கு அமைந்துள்ள வீட்டையும் பகிரங்க ஏல விற்பனை செய்யுமாறும், வழக்கு மீண்டும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-7-10)

# ஆர்ப்பாட்டத்தின் மீது துப்பாக்கிச்சூடு குற்றம்

## நீதிமன்றம் அறிவிப்பு

கடந்த 2013 ஆம் ஆண்டு குடிநீருக்கான ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட ரத்துபஸ்வெல பொதுமக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டமை குற்றம் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் கம்பஹா நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்தநிலையில், ரத்துபஸ்வெல துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பிலான அறிக்கையை நேற்று குற்றப்புலனாய்வு பிரிவு கம்பஹா நீதவான் நீதிமன்றில் சமர்ப்பித்த போதே இந்த சம்பவம் "குற்றமாகும்" என்று கம்பஹா நீதவான் நீதிமன்ற நீதவான் கவிந்திர நாணயக்கார அறிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்தின் போது மூவர் பலியானதுடன் 30 பேர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# தேசிய அரசாங்கத்தில் ஏற்படும் பிளவுகள் 1815-ல் ஏற்பட்ட அழிவையே ஏற்படுத்தும்

## அமைச்சர் கிரியெல்ல வருத்தம்



தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரு பிரதான கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் மற்றும் பிளவுகளை களைந்து அனைவரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டியது அவசியம் என ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவுமான அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல வலியுறுத்தியுள்ளார்.

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தரப்பினரிடையே பிளவுகள் ஏற்பட்டால் 1815 ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடம் அப்போதைய கண்டிய மன்னராட்சி வீழ்ந்தது போல் பேராபத்துக்களை சந்திக்க நேரிடும் என்றும் அமைச்சர் கிரியெல்ல எச்சரித்துள்ளார்.


தற்போதைய ஆளும்கூட்டணிக் கட்சிகளிடையே கடும் பிளவுகள் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே நேற்று கண்டி தந்துரே பகுதியில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்ட அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7-10)

யா/வடமராட்சி துன்னாலை

# அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமிகோவில்

# தீர்த்தோற்சவ சிறப்பிதழ் 15.10.2016





## பிரதம குருமார்களின் நல்லாசிகள்

**இந்திரியாணிமநோ புத்திரஸ்யாதிஷ்டாநமுச்யதே!**
**ஏதைர் விமோஹத்யத் யேஷஜ்ஞாநமாவ்ருத்யதேஹிநம்!**
**40**

புலன்கள், மனம் புத்தி இவையெல்லாம் இந்தக் காமத்தின் இருப்பிடம் என்று சொல்லப்படுகிறது. இந்தக் காமம் தான் மனம், புத்தி புலன்களைக் கொண்டு ஞானத்தை மறைத்து ஜீவாத்மாவை மோஹத்திற்கு உட்படுத்துகிறது.

**அன்புடையீர் எல்லாம் வல்ல**
**வல்லிபுர மாயவன் தாழ்பணிந்து!**

இன்றைய தினம் மிகவும் சிறப்பு வாய்ந்த புனிதமான நன்நாளாகும். வரலாற்றுச் சிறப்பு மிக்க ஸ்ரீவல்லிபுர சக்கர ரூபமாயவனின் சமுத்திர தீர்த்த தினமாகும். மாலைவேளையில் வங்கக்கடலில் பொன்மயமாக அவதரித்துச் சக்கர வடிவாக மாறி வல்லிபுர ஆலயத்தில் குடிகொண்டிருந்து அருள்பாலிக்கும் மாயவனின் சிறப்பு வாய்ந்த தினமாகும்.

கடந்த செப்ரெம்பர் 30ஆம் நாள் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான எம்பெருமானின் இரதோற்சவம் (ஒக்ரோபர் 14ஆம் நாள்) நேற்றைய தினம் இடம்பெற்றது.

எல்லாம் வல்ல வல்லிபுரச் சக்கரமாயவனின் நல்லருளாசிகளையும் எமது நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் அனைத்து மக்களுக்கும் இதன்மூலம் கூறிக் கொள்கின்றோம். சகல மக்களும் சமத்துவமாக வாழப் பிரார்த்திப்போம்!

நன்றி சுபம்

"வீணாகான குருபீடம்"
ஸ்ரீவல்லிபுரக் கோவில்
புலோலி P. O

பிரம்மஸ்ரீ ச.க சுதர்சனக் குரு J. P
பிரம்மஸ்ரீ ச. க புருஷோத்தமக்குரு
பிரம்மஸ்ரீ சுதர்சன கணபதீஸ்வரக் குரு
பிரதான குருமார்கள்

## பறந்தோடி வருவாய் நீயே

கருநீல நிறமேணிக் கண்ணா என்று
காத்தருளும் தெய்வமுனைப் போற்றுகின்றோம்
பெருமானே வல்லிபுரப் பதியில் நின்று
பாம்பணையிலே துயின்று படியளக்கும்
திருமாலை அலங்காரப் பிரியனான உந்தன்
நீராடுங்காட்சிதனைக் காண விரும்பும்
பாருளோர் மகிழ பரந்தாமா!
பாற்கடல் வண்ணா!
பறந்தோடி வருவாய் நீயே

கலாபூசணம்
மு. தணிகாசலம், கற்கோவளம்.

**அவதாரமாய் அவதரித்து அருளாட்சி செய்கின்ற**
**அச்சுதனே அவதார புருஷனே வணங்குகின்றோம்**

சரித்திர பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமியின் கொடியேற்றம் கடந்த செப்டெம்பர் 30ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்திருவிழாக்களில் முக்கியமானதும் சிறப்பானதாகவும் விளங்குவது சமுத்திர தீர்த்த திருவிழாவாகும்.

சரித்திர வரலாற்று ரீதியான இத்திருவிழாவுக்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் கூடுவார்கள். அத்தோடு தமிழர்கள் மட்டுமல்ல பல இன மக்களும் பக்தியோடும் பரவசத்தோடும் இத்திருவிழாவில் கலந்து கொள்வர். இத்திருவிழா இன்று மாலை நடைபெறுகின்றது. பக்தர்கள் சூழ்ந்திருக்க மாயவன் சக்கரத்தை கற்கோவளம் பக்தர்கள் தோளிலே காவிக்கொண்டு சங்கு சக்கரம், மாயவா, கேசவா, வைகுந்தா, நாராயணா, கண்ணா, கோவிந்த மலையை கையிலே கொண்டு கற்கோவளத்தில் மச்சவதாரம் என கோஷங்கள் எழுப்பியவாறு காவிச் செல்வார்கள் எம்பெருமான் பக்தர்கள் புடைசூழ கற்கோவளம் கடற்கரைக்கு தீர்த்தமாடுவதற்கு செல்வார்.

கற்கோவளம் கடலில் சந்திரன் உதயமாகும் போது மாயவனின் சமுத்திர தீர்த்தம் நடைபெறும். இக்கண்கொள்ளாக் காட்சியை காண்பதற்கு மக்கள் சமுத்திரம் திரண்டிருக்கும். சமுத்திர தீர்த்தத்துக்கும் வல்லிபுர சுவாமி கோயில் தோன்றியமைக்கும் சரித்திர வரலாறு கூறுவதாவது கற்கோவளம் பாற்கடலில் அதிசய மீன் ஒன்று துள்ளி விளையாடி அதிசயங்கள் செய்து கொண்டிருந்தது. இக்காட்சியை ஆனந்தத்தோடு மக்கள் பார்த்து மகிழ்ந்தனர். அவ் இடத்தில் லவல்லி எனும் வல்லிநாச்சி அம்மையார் தனது நாக சாபம் நீங்க இறைவன் கட்டளைப்படி கரையில் நீண்டகாலம் தவமிருந்தாள். அப்போது அந்த அதிசய மீன் அம்மையாரின் மடியில் துள்ளிக்குதித்து குழந்தையாக மாறியது. லவல்லிபுரம் சந்தோசமடைந்து அப்பிள்ளையை அணைத்தபடி ஒரு மர நிழலில் அமர்ந்து இருந்தார்.

பின்னர் ஒரு பல்லக்கில் வைத்து லவல்லி எனும் வல்லி நாச்சியுடன் அப்பிள்ளையை தாங்கிச் சென்றனர். களைப் படைந்த அவர்கள் களைப்பாறுவதற்கு ஒரு இடத்தில் பல்லக்கை இறக்கி வைத்தார்கள். சிறிது நேரம் கழித்து மீண்டும் செல்வதற்காக பல்லக்கை தூக்கியபோது பல்லக்கை தூக்க முடியவில்லை அவர்கள் பல்லக்கை ஆச்சரியத்துடன் பார்த்தபோது குழந்தை சக்கரமாக காட்சியளித்தது. எல்லோரும் மாயவனின் சக்கரத்தை வணங்கினார்கள். அன்று தொட்டு இன்றுவரை இந்நிகழ்வை குறிக்கும் முகமாக சமுத்திர தீர்த்தத் திருவிழா கற்கோவளம் மக்களால் நடத்தப்படுகின்றது.

"சாமஸ்ரீ தேசமானிய"
Lion **த.ஜெயரூபன்** சமாதான நீதவான்,
கணக்காய்வாளரும் வருமானவரி ஆலோசகரும்
மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு மற்றும்
அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் உறுப்பினர்
சமூக சேவையாளர் கற்கோவளம்.

## வட மாகாண இறைவரி ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பரப்பிரம்மமானதும் பரமாத்மாவாகவும் இருக்கும் பரம்பொருளை ஏதாவது ஒரு உருவத்தில் வழிபடுவது சனாதன தர்மத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். இந்த வகையில் ஸ்ரீ வல்லிபுரத்தின் சக்கரத்தாழ்வாரின் ஆலயம் சிறப்புப் பெறுகின்றது. வல்லிபுரத்தில் பகவான் மகா விஷ்ணு சுதர்சன ரூபத்தில் அமைந்துள்ளார். காத்தற்கடவுளான பகவான் வல்லிபுரத்தின் சுதர்சன வடிவத்தில் அமைந்தாலும் மச்சமாகத் தோன்றி பின் சுதர்சனமாக மாறியதாக கர்ண பரம்பரை கதையொன்று உண்டு.

கலியுகத்தில் ஜீவராசியின் குறைகளைப் போக்கி அவர்களை நிறையுடன் வாழ வைத்ததற்கான லீலா அவதாரங்கள் பல இருந்தாலும் வல்லிபுரத்தில் சக்கர வடிவிலான அர்ச்சா அவதாரம் முக்கியமானதாகும். தன்னை நம்பிக்கையுடன் வழிபடுவர்களுக்கு அருள்பாலிப்பதுடன் தன்னை நம்பி வாழ்பவர்களை வாழ்வாங்கு வாழ வைத்து வருகின்றார். வல்லிபுரத்தில் அமைந்திருப்பதால் இவரை வல்லிபுர ஆழ்வார் என்றும் அழைப்பர்.

பகவான் மகா விஷ்ணுவுக்கு பல ஆயிரம் பெயர்கள் இருந்தாலும் இத்தலத்தில் இவரை மாயவன் என்றே அன்புடன் அழைப்பர். இவ் ஆலயம் பாமரர் தொட்டு சான்றோர் வரை சகல மக்களாலும் மிக்க பக்தியுடன் போற்றப்படுவது மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

ஓர் ஆன்மிகத் தலம் சிறப்புப் பெற வேண்டுமாயின் அங்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறப்பாக அமைய வேண்டும். இங்கு அம் மூன்றுமே சிறப்புடன் அமைந்திருப்பது ஒரு பெரும்பேறாகும். இதற்கு ஞாயிறு தோறும் அங்கு கூடும் மக்கள் தொகையே சான்று. இந்த வகையில் சகல விதத்திலும் சிறப்புப்பெற்ற இந்தத் தலத்தில் ஸ்ரீமன் நாராயணை போற்றி வழிபட்டால் நாமும் பிறவிப்பயனை அடையலாம் என்பது திண்ணம்.

பௌர்ணமி நிலவில் அந்திசாயும் வேளையில் வல்லிபுர ஆழ்வாரின் சமுத்திரத் தீர்த்த நிகழ்வை காண்பது மிகவும் அற்புத நிகழ்வாகும். இத்தீர்த்த உற்சவத்தில் கலந்து மாயவனின் அருளைப் பெற்று பக்தர்கள் இவ்வுலகில் சகல செல்வங்களும் பெற்று வாழ்வதற்கு நானும் பிரார்த்திக்கின்றேன்.

கோவிந்த நாம சங்கீர்த்தனம்

பாலசுந்தரம் சிவாஜி
ஆணையாளர்
இறைவரித் திணைக்களம்,
வட மாகாணம்.

## இன்று வங்கக்கடலில் நீராடி வரும் மாயவனின் அருள் பார் எங்கும் கிடைக்க வேண்டி நிற்போர்


அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு
சரவணா மகாலட்சுமி
தங்கமாடம்
இல. 93, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே. 021 321 4577

தரமான 22 கரட் தங்க
நகைகளுக்கு
ஜனனி நகை மாடம்
ம. ம. வி. வீதி, நெல்லியடி.
தொ. பே.- 077 850 7383
கிளை I: கிசோனி
நகைமாளிகை
பிரதான வீதி, நெல்லியடி.

தரமான 22 கரட் தங்க
நகைகளுக்கு
நாடவேண்டிய இடம்
வைஷ்ணவி
நகைப்பூங்கா
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.-
021 226 4519

யாழ் பீச் ஹோட்டல்
யாழ்.பிரதான வீதி,
வல்வை.
தொ.பே -
021 226 1567
Room,
Hall A/C Facility
Conference Hall
with 200 Seating
Capacity

நவீன வடிவமைப்புக்களில்
தரமான 22 கரட் நகைகளுக்கு
நாட வேண்டிய இடம்
சுசீலா ஆபரண மாளிகை
இல. 258, பிரதான வீதி,
பருத்தித்துறை.
தொ.பே.-021 226 3064
கிளை I நியூ சுசீலா
ஆபரண மாளிகை
இல. 228, பிரதான வீதி,பருத்தித்துறை.
தொ.பே.- 021 226 4154

சிறீரங்கம்
ரெக்ஸ் ரைஸ்ஸ்
பிரதான வீதி,
நெல்லியடி,
NTB
வங்கிக்கு அருகில்
கிளை I
வதிரி வீதி,
உடுப்பிட்டி


அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு
நாடவேண்டிய ஒரேஇடம்
காஞ்சனா
நகைமாடம்
பிரதான வீதி,
பருத்தித்துறை.
தொ.இல. 077 188 2119

# தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விசேட செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும்

## பொலிஸ்மா அதிபர் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**பொதுமக்களின் ஒத்துழைப்புடன் தேசிய பாதுகாப் பினை உறுதிப்படுத்தும் விசேட செயற்றிட்டம் ஒன்றை முன்னெடுக்க வுள்ளதாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.**



பொலிஸ் திணைக்களத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றைய தினம் யாழ்.கோட்டைக்கு அருகாமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண் டவாறு தெரவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

பொதுமக்களின் ஒத்துழைப்புடன் பொலிஸ் திணைக்களத்தின் இந்த ஆண்டு விழாவினை யாழ்ப்பாணத்தில் நடத்தி வருகின்றோம். இதற்கு பொதுமக்களும் சிறந்த ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

இந்த ஆண்டு நிறைவு விழாவில் கலாசார நிகழ்வுகள் மட்டுமின்றி. மாணவர்களின் கல்வியை ஊக்கப்படுத்தும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. கல்வி அமைச்சின் அனுசரணையுடன் இந்த நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. இதற்கு பாடசாலை மாணவர்களினதும் ஒத்துழைப்பும் அவசியம். இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைவரும் கலந்து கொண்டு, இங்கு தெரிவிக்கப்படும் சட்டம் ஒழுங்கு தொடர்பான பூரண தகவல்களை பெற்றுக் கொண்டு அதற்கு ஏற்ப செயற்பட முயல வேண்டும். இதன் மூலம் வடக்கில் முழுமையாக குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியும். மேலும் பிரதானமாக நாட்டின் தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில், பொது மக்களோடு இணைந்த செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன.

இது தவிர கிராம மக்களோடு பொலிஸார் சிரமதானங்களில் ஈடுபடவுள்ளனர். நாட்டில் உள்ள 454 பொலிஸ் நிலையங்கள் ஊடாக இந்த பொலிஸார் சிரமதானங்களில் ஈடுபட வுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-4)

## அக ஒலிகள் என்ற தலைப்பில் மனோரஞ்சன ஹேரத் உரை

(கொழும்பு)

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக்காப்பகத்தின் 38 ஆவது நிகழ்வாக அக ஒலிகள் என்ற தலைப்பில். மனோரஞ்சன ஹேரத் உரை நிகழ்த்தவுள்ளார். உருவ. பகுதி அரூப மீயதார்த்தப் பண்புகளையுடைய சிற்பங்களூடாக அரசியல் வெற்றிடத்தையும் அதிகாரத்துக்கான ஆசையையும் பேசுவதாக இவரது உரை அமையும்.

மேற்படி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை 16 ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரை சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப் புக்கான ஆவணக் காப்பகம், 199, கோவில் வீதி, நல்லூரில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கலை ஆர்வலர்கள் சிற்பிகள் அனைவரும் கலந்து பயன்பெறுமாறு அழைப்பு விடப்பட்டுள்ளது. (இ-7)

## வாழ்வகத் தலைவரின் வாழ்த்துச் செய்தி




உலகெங்கிலும் பரந்து வாழும் விழிப்புல வலுவிழந்த உடன்பிறப்புக்களே, உங்களோடு சில நிமிடங்கள் உரையாடுவதற்கான இந்த அரிய வாய்ப்பினை வழங்கிய ஊடகத்துக்கு முதற்கண் எனது உளமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

அறிவே இன்றைய உலகின் ஆதாரமாயுள்ளது. அதுவே அனைத்தையும்விட மேலான மூலதனமாயுமுள்ளது. நமது அறிவானது விசாலிக்கின்றபோது நம் முன்னாலிருக்கின்ற அனைத்துத் தடைகளும் தகர்ந்து தவிடுபொடியாகிவிடும் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. நாம் சார்ந்துள்ள துறை எதுவானாலும் அதில் உயர்மட்ட அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு எப்போதுமே நாம் முயற்சிக்க வேண்டும். அதற்காகக் கடுமையாக, மிகக் கடுமையாக உழைக்கவும் தயாராக இருக்கவேண்டும். அப்போதுதான் நாம் தற்துணிவுள்ளவர்களாய், தற்சார்புடையவர்களாய்த் தலைநிமிர முடியும். யாராவது எமக்கு உதவமாட்டார்களா என்று எண்ணியெண்ணி ஏங்குகின்ற இழிநிலை இனியும் எமக்கு வேண்டாம். உதவி பெறுபவர்கள் என்ற நிலையிலிருந்து உதவி புரிபவர்கள் என்ற நிலைக்கு நாம் ஏன் உயரக்கூடாது? பிறர்க்கு உதவி புரிகின்றபோது கிடைக்கின்ற மன நிறைவையும் மகிழ்வையும் ஏன் நாமும் அனுபவிக்கக்கூடாது? இந்த வினாக்களை ஒரு கணம் உங்கள் உள்ளங்களில் ஒலிக்கவிடுங்கள். மீண்டும் மீண்டும் ஒலிக்கவிடுங்கள். தெளிவு கிடைக்கும்வரை ஒலிக்கவிடுங்கள்.

உடன்பிறப்புக்களே, புதிய புதிய துறைகளில் நமது அறிவாற்றல்களை வளர்த்துக் கொள்வதன் மூலம் நம்மை வலுப்படுத்திக்கொள்ளும் முயற்சியில் நாம் அயராது ஈடுபடவேண்டும். இம் முயற்சியில் இறங்கும் வழி தெரியாது தவிக்கின்ற நமது உடன்பிறப்புக்களுக்காக ஒரு சில நிமிடங்களையேனும் ஒதுக்கி நாம் பாடுபடவேண்டும். அப்போதுதான் ஒட்டுமொத்தமாக நமது நிலை மேம்படும். குப்பி விளக்கை அணைத்துவிடுகின்ற அதே காற்றுத்தான் கொழுந்துவிட்டு எரிகின்ற தீயை வளர்த்துவிடுகின்றது. இதேபோலத்தான் நலிவுற்ற நிலையில் சூழல் நம்மை நசுக்கிவிடும். அதே சூழல் வலிவுற்ற நிலையில் நம்மை வளர்த்துவிடும் வாழ வைக்கும்.

அனைவருக்கும் என் உள்ளம் நிறைந்த வெள்ளைப் பிரம்பு தின வாழ்த்துக்கள்.

ஆறுமுகம் ரவீந்திரன்
தலைவர். வாழ்வகம்.

## ஆண்டைந்து அகன்றும் ஆறாத துயரில்... அம்மா

அமரர் வரதலக்ஷ்மி-புஸ்பராஜா

தோற்றம் 30.06.1951 — மறைவு 11.10.2011



படு மழையெனப் பொழியும்
பாசத்தின் உறை
நெடு நீரெனப் பரந்தோடும்
ஈகையில் நிறை
செந் நிலம் செழிக்கும்
சாமத்தின் சுயித்தியம்
தன்னுயிர் தந்தெமை
தெறிகெட வைத்து
விண் சென்றின்று
ஆண்டைந்து அகன்றும்
ஆறாத் துயரோடு நாம்...
அம்மா! அம்மா!!

(6330)

6, இராஜேஸ்வரி வீதி,
அரியாலை.

என்றும் உம் நினைவுடன்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இராசி பலன்

15.10.2016
(புரட்டாதி 29, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 12.38 மணிவரை
உத்திரட்டாதி பிற்பகல் 2.00 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
பூரணை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரம், உத்தரம் | | |
| | | | ராகு |
| செவ் | சனி<br>சுக் | | குரு<br>சூரி<br>புதன் |

**மேடம்:** மன அமைதி கூடும் நாள், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், தொழில் ரீதியாக புதிய பொறுப்புகள் வந்து சேரலாம், சுப காரியச் செலவுகள் கூடும் நாள்.

**இடபம்:** பாராட்டும் புகழும்கூடும் நாள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மிதுனம்:** பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள்; குடும்பத்தினர் உங்களின் கருத்தை ஏற்று நடப்பர், போசன சுகமுண்டு.

**கடகம்:** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**சிம்மம்:** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், நட்பொன்று பகையாகலாம்.

**கன்னி:** பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் நிறைவேறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், கற்பனை மிகுதியான நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்:** தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல்நலன் சீராகும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், போசன சுகமுண்டு.

**மகரம்:** சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், சிலர் தொழில் ரீதியாக உதவிகள் கேட்கலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**மீனம்:** திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடம் முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மாலை நேரப் பயணம் மகிழ்ச்சி தரும்.

# யாழ்.கல்வி வலயம் நடத்தும் முழுநிலை கலைவிழா இன்று

வடமாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். கல்வி வலயம் நடத்தும் முழுநிலா கலைவிழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறும். யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் என். தெய்வேந்திரராஜா தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன், சிறப்பு விருந்தினராக கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் வெள்ளைப்பிரம்பு தினம் நாளை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் லயன்ஸ் கழகமும் வாழ்வக சமூகமும் இணைந்து நடத்தும் வெள்ளைப் பிரம்பு தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் நா.தயாரூபன், வாழ்வகத் தலைவர் லயன் ஆ.இரவீந்திரன் ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வு. காலை 8 மணிக்கு சுன்னாகம் பலநோக்குச் சங்க முன்றிலில் இருந்து வெள்ளைப் பிரம்பு ஊர்வலம் ஆரம்பமாகி சுன்னாகம் பேருந்து தரிப்பு நிலையத்தை வந்தடைந்து வாழ்வக கேட்போர் கூடத்தில் விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கொட்டகேனா கிழக்கு லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் பி.மகேந்திரன், லயன் சீமாட்டி சங்கீதா மகேந்திரன் ஆகியோர் பிரதம விருந்தினராகவும் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.செல்வக்குமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வின் இறுதியில் பிரதம விருந்தினரால் வாழ்வகச் சிறுவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்களும் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற வாழ்வகத்தின் உயர்தர மாணவனுக்கு அன்பளிப்பு வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும். (இ-7-10)

# தேசிய மட்ட குறுநாடகப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் 5 விருதுகளைப் பெற்று சாதனை



அரச ஊழியர்களுக்கிடையிலான குறுநாடக ஆக்கப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் 5 விருதுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது. உள்நாட்டு அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சு நடத்திய அரச ஊழியர்களுக்கிடையிலான குறுநாடக ஆக்கப் போட்டியில் "ஒரு நதி அழுகின்றது" என்னும் அரச நாடக போட்டியில் பங்கேற்றே கடந்த 2 திகதி கொழும்பு அபயகமவில் உள்நாட்டு அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சர் எஸ்.பி.நாவின்ன தலைமையில் நடைபெற்ற தேசிய கலை விழாவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஐந்து விருதுகளைப் பெற்றது. தயாரிப்பு, தயாரிப்புக்கான நடன ஆற்றுகை, ஒப்பனை ஆகியவற்றுக்கான 3 தேசிய விருதுகளை சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூகசேவை பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்மினி றஜீபன் சிறந்த பெண் நடிகைக்கான விருதை அதே நாடகத்தில் பங்கேற்ற பொது முகாமைத்துவ உதவியாளர் சுகன்யா அன்ரன் மரியதாஸ் மற்றும் இந்நாடகத்திற்கான ஒளியமைப்பு விருதை மானிப்பாய் இந்துக்கல்லூரி நாடக ஆசிரியர் தவராசா அருள்குமரன் ஆகியோர் பெற்றனர்.

இந்நாடகத்தில் செபமாலைநாதன் றொபின்சன், திருமதி. நிமலன் மணிமொழி ஆகியோரின் குரல் இசையிலும் ஆசிரியை கிருபாமேரியின் ஓகன் இசையிலும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் சுவேந்திரராசா காசிராசா மற்று அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான யாழினி யோகேஸ்வரன், செபஸ்தியாம்பிள்ளை ஜாம்சன் வெனி, கனகரட்ணம் ஓங்காரரூபன், கலாசார உத்தியோகத்தர் திருமதி தாட்சாயினி செல்வக்குமார் ஆகியோர் நாடக கலைஞர்களாக பங்கேற்றனர். இந்நாடகத்திற்கான கையெழுத்து பிரதியினைதிருமதி தர்மினி எழுத்தியிருந்தார். மேற்படி குறுநாடகப்போட்டியில் 6 நாடகங்கள் பங்கேற்றன. மேற்படி போட்டியில் கவிதைக்கான 3 ஆவது இடத்தையும் தர்மினி பெற்றிருந்தார். (இ)

# பெண்களுக்கான தற்காப்பு பயிற்சி நவம்பர் மாதம் யாழில் ஆரம்பம்



யாழ்.மாவட்டத்தின் பெண்களுக்கான தற்காப்பு பயிற்சி எதிர்வரும் நவம்பர் மாதம் 2,3,4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட செயலக சிறுவர், பெண்கள் பிரிவு அறிவித்துள்ளது.

பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழுக்கூட்டம் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள் என்பன கலந்துரையாடப்பட்டதுடன் அதற்கான தீர்வுகளும் குறித்த அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டன.

அந்த வகையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பதற்கு போதைப் பொருள் பாவனையே காரணமாக இருப்பதாகவும் வீட்டு வன்முறை அதிகரிப்பதற்கும் முக்கிய காரணமாக மதுபான பாவனையே காணப்படுவதாக அதிகாரிகளால் சுட்டிக் காட்டப்பட்டது.

அத்துடன் குடும்ப வன்முறையின் போது பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பெண்கள் தான் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு பதிவு செய்ய வேண்டும் என காத்திருக்காது பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் எவரேனும் முறைப்பாடு செய்யும் பட்சத்தில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் சிறுவர், பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களை தடுப்பதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றாக சேர்ந்து செயற்பட வேண்டும் எனவும் அரச அதிபரால் வலியுறுத்தப்பட்டது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள வன்முறைக்கு எதிரான வாரத்தில் யாழ்.மாவட்டத்தில் உள்ள கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் இருந்து 60 பெண்களை தெரிவு செய்து அவர்களுக்கான தற்காப்பு பயிற்சி எதிர்வரும் நவம்பர் மாதம் 2,3,4 ஆம் திகதிகளில் வழங்கப்படவுள்ளதாகவும் குறித்த கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

## சிறுவர் தின நிகழ்வு

நெடுந்தீவு பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

நெடுந்தீவு பிரதேச செயலர் எஸ்.ஜெயகாந்த் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் கே.பிரபாகரமூர்த்தி கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு கோட்டக் கல்வி பணிப்பாளர் திருமதி எஸ்.கிருஸ்ணதாஸ், நெடுந்தீவு பிரதேச சபை செயலாளர் எஸ்.தம்பிராசா, கௌரவ விருந்தினராக நெடுந்தீவு ஓய்வு நிலை கிராம அலுவலர் என்.நடராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## மகாசமாதி குருபூசை

ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 37 ஆவது சமாதிக்குருபூசை இன்று சனிக்கிழமை சுத்த சிவ சமரச சன்மார்க்க சாதுகுருபீடம் மறவன்புலோவில் நடைபெறும். (இ)

# தொழில் வெற்றிடங்களை நிரப்ப ஆட்சேர்ப்பு நேர்முகத்தேர்வு யாழில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையமானது தொழிலுக்காக காத்திருக்கும் இளைஞர். யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்காக நாடு முழுவதிலும் கிளைகளைக் கொண்டுள்ள முன்னணி தனியார் கம்பனியிடமிருந்து 500 வரையான தொழில் வெற்றிடங்களைப் பெற்றுள்ளது.

இவ் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வு ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நேர்முகத் தேர்வுக்கு க.பொ.த. உயர்தரம் மற்றும் க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்ற 27 வயதிற்கு மேற்படாத ஆண்களும் 24 வயதிற்கு மேற்படாத பெண்களும் தோற்றலாம்.

நேர்முகத்தேர்விற்கு தோற்ற விரும்புவோர் முக்கியமாக தங்கள் கல்விச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், கிராம அலுவலரின் சான்றிதழ் என்பவற்றோடு அவசியமான ஏனைய சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்.

இவ் அரிய வாய்ப்பினைத் தவறவிடாது பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் மேலதிக விளக்கங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை 021 221 9359 இலக்க மாவட்ட பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலைய அலுவலக தொலைபேசி ஊடாகவோ அல்லது பொது மக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தில் நேரடியாகவோ பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

# இலவச வைத்திய ஆலோசனை

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கருத்துரையும் இலவச வைத்திய ஆலோசனைகளும் சேவைகளும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை கொக்குவில் பொது நூலக மண்டபத்தில் இடம்பெறும்.

நல்லூர் பிரதேச சபை செயலாளர் திருமதி. தி.அன்னலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் 'போதையற்ற சமுதாயத்தை உருவாக்கிவாசிப்பு சமூகத்தை உருவாக்குவோம்' எனும் தலைப்பில் வைத்தியர் யதுநந்தன் கருத்துரையை வழங்கவுள்ளார்.

வைத்திய ஆலோசனையை பெற வரும் பொதுமக்கள் 12 மணித்தியாலம் உணவைதவிர்த்து வருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-9)

# குற்றச்செயல்களுடன் தொடர்புடையோரை பாதுகாப்பது தலைமைக்கு உகந்ததல்ல

## காணாமற்போனோரை தேடியறியும் குழு சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர்களை பாதுகாக்கும் ஒரு நடவடிக்கை தற்போதைய நல்லாட்சியின் தலைமைக்கு உகந்ததல்ல என காணாமற்போனோரைத் தேடியறியும் குழு தெரிவித்துள்ளது.**

இவ் விடயம் தொடர்பாக காணாமற் போனோரைத் தேடியறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

அண்மையில் ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளை கைது செய்து நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றது தவறான விடயம் என கூறியிருப்பதும் அவர்கள் தொடர்பான விசாரணைகள் எவ்வளவு காலத்தில் நிறைவு பெறும் என்று கேட்பதோடு CID,FCID போன்ற நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கூறுவது முன்னைய ஆட்சிக் காலத்தில் அவர்கள் செய்த ஊழல், மோசடிகள், ஆட்கடத்தல், கொலைகளுடன் தொடர்புபட்டவர்களை பாதுகாக்கும் ஒரு நடவடிக்கையாக இது இருப்பதாக காணாமற் போனோரைத் தேடியறியும் குழு எண்ணுகின்றது.

இது வெறுமனே பாதுகாப்பு தரப்பை பாதுகாக்கும் நடவடிக்கை மாத்திரம் அல்ல. இதன் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் பெற வேண்டிய நீதி நியாயங்கள், உரிமைகள் அனைத்தும் பறிபோகும் நிலைமை காணப்படுகின்றது.

அரசியல் கைதிகள், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகவும் இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலங்களை மீளப் பெறமுடியாத நிலை உருவாகக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றன.

எனவே இந்த செயற்பாட்டை நாம் கண்டிக்கின்றோம். சர்வதேச மனித உரிமை பேரவைக்கு தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் வழங்குவோம் எனக் கூறிக்கொண்டு மறுபுறத்தில் தமிழ் மக்களுக்கு அநீதி இழைத்த அதிகாரிகள் மீது நீதியான விசாரணை நடத்தும் போது ஜனாதிபதி தலையிட்டு அவ்வாறான நடவடிக்கைகளை வேண்டாம் என்ற நிலையை உருவாக்குவது தமிழ் மக்களது எதிர்பார்ப்புக்களை கலைக்கும் செயற்பாடாகும்.

முன்னைய ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாட்டை போன்றே இவருடைய செயற்பாடும் உள்ளது போன்று தோன்றுகின்றது. இது நல்லாட்சியின் தலைமைக்கு உகந்த நடவடிக்கை அல்ல. மீண்டும் பேரினவாத ஆட்சியை நினைவுகூருவதற்கு சமமான செயற்பாடாகும். எனவே இதனை காணாமற் போனோரைத் தேடியறியும் குழு வன்மையாக கண்டிக்கின்றது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)


**கணித வகுப்பு**

தரம் 6 முதல் 11 வரையான கணித வகுப்பு வீடு வந்து கற்பிக்கப்படும்

(விசுவமடு, தர்மபுரம் பகுதிகளுக்கு அண்மையாக)

T.P-077 817 5794


## வைத்தியசாலையை தரமுயர்த்தக்கோரி நெடுந்தீவில் கவனயீர்ப்புப் போராட்டம்






நெடுந்தீவில் பாடசாலை மாணவியொருவர் மாரடைப்பால் உயிரிழந்ததனை அடுத்து நெடுந்தீவு வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தக் கோரி நேற்றுமுன்தினம் மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர். (இ-4)

### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

### குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

01. பாலசிங்கம் முருகரவி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி, தற்போது
UNTER WORBEN, ST5 3252,
WORBEN, SWITZERLAND.
தனது தத்துவக்காரன் முருகேசு
பாலசிங்கம் மூலம் தோற்றம்;
முருகேசு பாலசிங்கம்,
மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரி.

02. முருகேசு பாலசிங்கமும்,

03. பெண் சந்திரபாக்கியமும்,
இருவரும் மட்டுவில் வடக்கு, சந்திரபுரம்
சாவகச்சேரி.

-வழக்காளிகள்

வழக்கு இல:-
தம்பிக்கைச் சொத்து/11/2014

எதிராக

01. இராசதுரை வசந்தன்,
02. வசந்தன் சுமதி,
இருவரும் மட்டுவில் வடக்கு, சந்திரபுரம்,
சாவகச்சேரி.

-எதிராளிகள்.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளிகள் மட்டுவில் வடக்கில் எழுந்தருளியிருக்கும் நரசிங்க வைரவர் கோவிலின் பரிபாலனம் தொடர்பாக பிரதிநிதித்துவ வழக்கிற்கு கோரிய நிவாரணங்களைப் பெறுவதற்கு மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிகளுக்கெதிராக இந்நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளனராகையால் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை பிரிவு 16 இன் கீழ் இந்த விடயத்தில் அக்கறையுள்ள சகலரையும் இந்த விடயத்தில் பங்குகொண்டு இப் பிணக்கை இம் மன்று தீர்த்து வைக்கக்கோரி மறுமொழி ஏதேனும் இருப்பின் 2016ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21ம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் இந் நீதிமன்றத்தில் தோற்றும்படி இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி
2016ம் ஆண்டு ஐப்பசி மாதம் 13ம் திகதி

ஒப்பமிடப்பட்டுள்ளது
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
சாவகச்சேரி.

ஒப்பமிடப்பட்டுள்ளது
வரைவு:-
வழக்காளிகளின் சட்டத்தரணி


**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா:31 செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BBA Specialist Accounting
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: B/6302

பிறப்பு: 1985இந்து
நட்சத்திரம்:பரணி 4
கி.பா: 56 செவ் 9 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:மின்மானி வாசிப்பாளர்
எதிர்பார்ப்பு: அரசு வேலை/ வேலையற்ற பெண்
தொ.இ: B/6303

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 2
கி.பா: 83 செவ் 1 இல்
உயரம்:5 3/4
தகைமை/தொழில்: A/L பல்பொருள் விற்பனையாளர்
தொ.இ: B/6304

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம் பூசம் 3
கி.பா: 39
உயரம்: 172 cm
தகைமை/தொழில்: Bsc Teacher
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/6306

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1985இந்து
நட்சத்திரம்:ரோகினி
கி.பா: 39 செவ் 3 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: உள்நாடு/வெளிநாடு
தொ.இ: G/6301

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்:பரணி1
கி.பா:53 1/2 செவ் 7 இல்
உயரம்: 156 cm
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: அரச தொழில்/வெளிநாடு
தொ.இ: G/6305

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சுவாதி 1
கி.பா: 35செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Soft Engineer
எதிர்பார்ப்பு:அரச,தனியார் தொழில்
தொ.இ: G/6311

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்:திருவோணம் 1
கி.பா: 47 செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L ஆசிரியர்
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6312

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai jaffna@gmail.com
021 720 1005, 021 221 5434

# தோட்டக்கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு

## வவுனியாவில் சம்பவம்





வவுனியா, தச்சன்குளம் பகுதியில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து ஒரு தொகுதி வெடிபொருட்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, தச்சன்குளம் பகுதியில் உள்ள தோட்ட கிணறு ஒன்றை அதன் உரிமையாளர் நீர் இறைத்து துப்புரவு செய்த போது கிணற்றுக்குள் இருந்து இரு தகரப் பெட்டிகளை மீட்டுள்ளார். குறித்த தகரப் பெட்டிகளில் வெடிபொருட்கள் இருப்பதைக் கண்டு வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து குறித்த வெடிபொருட்களை வவுனியா பொலிஸார் மீட்டுள்ளனர். ஜே.எம்.மோ கிளைமோர்- 01, மிதிவெடிகள்- 08, பரா வெளிச்சக்குண்டு- 04, டிக்னேற்றர்- 50 என்பன இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

கிணற்றுக்குள் மேலும் பல வெடிபொருட்களை அவதானித்த பொலிஸார் அதனை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். குறித்த தோட்டம் வவுனியா பிரதான இராணுவ முகாமாகிய ஜோசப் முகாம் அருகில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## 20 இலட்சத்து 36 ஆயிரம் ரூபா

# 2 ஆயிரத்து 781 வயோதிபர்களுக்கு மாதாந்த உதவித்தொகைக்கு பகிர்ந்தளிப்பு

### கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(முல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழுள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் இடப்பெயர்வின் பின்னர் மீள்குடியேறியுள்ள மக்களில் உள்ள 2 ஆயிரத்து 781 வயோதிபர்களுக்கு மத்திய அரசின்சமூகசேவைஅமைச்சின் ஊடாகவும் மற்றும் வடக்கு மாகாண சபையின் கீழுள்ள சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாகவும் மாதாந்தம் 20 இலட்சத்து 36 ஆயிரத்து 400 ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வயோதிபர்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டங்களின் கீழ் பல்வேறு உதவிகள், சேவைகள் வழங்கி வரும் நிலையில் மத்திய அரசின் கீழுள்ள சமூக சேவைகள் அமைச்சினால் 70 வயதிற்கு மேற்பட்ட 748 வயோதிபர்களுக்கு தலா ஆயிரத்து 900 ரூபா வீதம் மாதாந்தம் 14 இலட்சத்து 21 ஆயிரத்து 200 ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை வடக்கு மாகாண சபையின்கீழுள்ளசமூகசேவைகள் திணைக்களத்தின் ஊடாக மாதாந்தம் 796 வயோதிபர்களுக்கு தலா 250 ரூபா வீதம் ஒரு இலட்சத்து 99 ஆயிரம் ரூபாவும் 648 வயோதிபர்களுக்கு தலா 300 ரூபா வீதம் ஒரு இலட்சத்து 94 ஆயிரத்து 400 ரூபாவும் 324 வயோதிபர்களுக்கு தலா 350 ரூபா வீதம் ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 400 ரூபாவும் 167 வயோதிபர்களுக்கு தலா 400 ரூபா வீதம் 66 ஆயிரத்து 800 ரூபாவும் 74 வயோதிபர்களுக்கு தலா 450 ரூபா வீதம் 29 ஆயிரத்து 600 ரூபாவும் 24 வயோதிபர்களுக்கு தலா 500 ரூபா வீதம் 12 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 2 ஆயிரத்து 33 வயோதிபர்களுக்கு 6 இலட்சத்து 15 ஆயிரத்து 200 ரூபாவும் வழங்கப்பட்டுவருவதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# கேப்பாப்பிலவு மக்களை நவம்பரில் சந்திப்பார் வடமாகாண முதலமைச்சர்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு - கேப்பாபிலவு மக்கள் தமது சொந்த நிலங்களில் தம்மை மீள்குடியேற்றுமாறு வலியுறுத்தியுள்ளதுடன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை நேரில் சென்று சந்திக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், முல்லைத்தீவு - கேப்பாபிலவு மக்களை எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நேரில் சென்று சந்திப்பார் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கூறியுள்ளார்.

கேப்பாப்பிலவு, சூரிபுரம், பிலவுக்குடியிருப்பு ஆகிய கிராமங்களில் 259 குடும்பங்களை சேர்ந்த மக்கள் போருக்கு பின்னரான காலப பகுதிகளில் சொந்த நிலங்களில் மீள்குடியேற அனுமதிக்கப்படாது தற்காலிகமாக பல்வேறு பிரதேசங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இருப்பினும அந்த மக்களின் சொந்த நிலங்களை அரச படையினர் அபகரித்து தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

இவ்வாறான சூழலில் தமது சொந்த கிராமத்தில் தம்மை மீள்குடியேற்றுமாறு வலியுறுத்தி முல்லைத்தீவு - கேப்பாபிலவு மக்கள் கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை போராட்டத்தை கைவிடுமாறு வலியுறுத்திய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், கேப்பாப்பிலவு மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் உடனடியாக நிபுணர் குழு ஒன்றை நியமித்து ஆராயப்படும் என உறுதியளித்திருந்தார்.

முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு அமைவாக கேப்பாப்பிலவு மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்ட நிலையில், ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்கள் தலைமையில் குழு ஒன்றை நியமித்து கடந்த ஏப்ரல் மாதம் குறித்த குழுவினரால் முதலமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

நிபுணர் குழுவின் அறிக்கை கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் கேட்ட கால அவகாசம் நிறைவடைந்துள்ளதாக தெரிவித்துள்ள கேப்பாப்பிலவு மக்கள், ஜனநாயக வழியிலான கவனயீர்ப்பு போராட்டங்களை மீண்டும் நடத்துவதற்கு முயற்சித்த நிலையில், எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்மந்தனின் வாக்குறுதிக்கு அமைவாக அந்த போராட்டமும் மீண்டுமொரு முறை கைவிடப்பட்டது.

எனினும் முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு மக்களை எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி சந்திக்கவுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் படையினரால் அபகரிக்கப்பட்ட மக்களின் சொந்த நிலங்களையும் பார்வையிடுவார் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார். (2-281)

# சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் கிளிநொச்சியில் இன்று அனுஷ்டிப்பு

கிளிநொச்சியில் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச வெண்பிரம்பு தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

சர்வதேச வெண்பிரம்பு தினத்தை முன்னிட்டு வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விழிப்புணர்வு நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் ச.ரூபராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு கிளிநொச்சி டிப்போச்சந்தியில் விழிப்புலனற்றோருக்கான அடிப்படை உரிமைகள் தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் வழங்குதலை அடுத்து தொடர்ந்து டிப்போச்சந்தியில் இருந்து விழிப்புணர்வு பேரணியாகச் சென்று கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தை சென்றடைந்து நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி உதவி மாவட்ட செயலர் ரீ. பிருந்தாகரன் கலந்து கொள்ளவுள்ளார். (2-15)

# முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு தினப் போட்டி முடிவுகள்

(முல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுசபையினால் 94 ஆவது ஆண்டு சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட கவிதை, கட்டுரை, பேச்சு, விநாடி வினா ஆகிய போட்டிகளில் முதல்மூன்றுஇடங்களைபெற்று வெற்றியீட்டியுள்ள மாணவர்களின் பெயர் விபரங்களை முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு சபையின் செயலாளர் பாலசிங்கம் ஜெயந்தன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்றுள்ள மாணவர்களுக்கான பரிசளிப்பு , சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மு/கற்சிலைமடு அ.த.க பாடசாலையில் நடைபெறவுள்ள 94 ஆவது ஆண்டு சர்வதேச கூட்டுறவு தினவிழாவில் வைத்து வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

கட்டுரைப் போட்டி

பிரிவு- -1

1ம் இடம்–சி. டிலக்ஷி -மு/புதுக்குடியிருப்பு ம.க, 2ம் இடம்– த.கயானா–மு/மல்லாவி ம.க, 2ம் இடம் த.கஜானி–மு/மல்லாவி ம.க

பிரிவு 02

1ம்இடம்–சிசாதுரி -மு/ வித்தியானந்தா கல்லூரி , 2ம் இடம்–தெ. யதுரசியன்–மு/ வித்தியா ந்தா கல்லூரி , 2ம் இடம் ம. யதுர்ஷா -மு/ யோகபுரம் த. ம.வி

பிரிவு 03

1ம் இடம் ர.பிரைவானி , மு/யோகபுரம் த.ம.வி, 2ம் இடம் அ.லிவேதிகா–மு/புதுக்குடியிருப்பு ம.க., 3ம் இடம் ப.சங்கவி–மு/நாட்டாங்கண்டல் ம.வி

பிரிவு 04

1ம் இடம் ஞா.சிந்துஜா - மு/கற்சிலைமடு அ.த.க.பா, 2ம் இடம் மு. துலக்ஷன் -மு/ பாலிநகர் ம.வி , 3ம் இடம் - செ.மோரிசாளினி -மு/முல்லைத்தீவு ம.வி

பேச்சுப் போட்டி

பிரிவு 01

1ம் இடம் அ.விநோதா - மு/ அளம்பில் றோ.க.வி, 2ம் இடம்–த.ஜெனிஷ்வரி -மு/கற்சிலைமடு அ.த.ம.வி, 3ம் இடம் -அ.அருட்கவி–மு/பாலிநகர்மவி

பிரிவு 02

1ம் இடம் -கெ.மதுமிளன் -மு/கலைமகள் வித்தியாலயம் , 2ம் இடம் –இ. நர்மதா – மு/பாலிநகர் ம.வி, 3ம் இடம் –சூ.தனுஷியா -மு/சிலாவத்தை த.ம.வி , 3ம் இடம் – அ. டோமினிஷா–மு. விக்கினேஸ்வரா வி.

பிரிவு 03

1ம் இடம் வ. பிரியங்கன்– மு/ யோகபுரம் த.ம.வி , 2ம் இடம் பு.தக்ஷனா -மு/முல்லைத்தீவு ம.வி , 3ம் இடம் த.தாரணிகா–மு/ வள்ளிபுனம் ம.வி

பிரிவு 04

1ம் இடம் பு.பிரவீனா --மு/ முல்லைத்தீவு ம.வி , 2ம் இடம் ப.சஜீவன் --மு/வித்தியாந்தாக் கல்லூரி , 3ம் இடம் கே.ஷாளினி–மு/.உடையார் கட்டு ம.வி , 3ம் இடம் து.குபேந்தினி --மு/ஒட்டுசுட்டான் ம.வி

கவிதைப் போட்டி

பிரிவு 01

1ம் இடம் வி. சானுஜா– மு/ கல்விளான் அ.த.க.பா , 2ம் இடம் க.கஜீவா–மு/சிலாவத்தை த.ம.வி , 2ம் இடம் - அ.விநோதா -மு/அளம்பில் றோ.க.வி

பிரிவு 02

1ம் இடம் ர.நிருத்திகா -மு/ விக்கினேஸ்வரா வித்தியாலயம், 2ம் இடம் க.லுக்ஷிகா–மு/ யோகபுரம் த. ம.வி , 2ம் இடம் -மதியழகன் டிலக்ஷன் – மு. கலைமகள் வித்தியாலயம்

பிரிவு–03

1ம் இடம்–ஜ.கிருசிகா–மு/ யோகபுரம் த.ம.வி , 2ம் இடம் -க. கம்சாயினி -மு/கலைமகள் வித்தியாலயம் , 3ம் இடம் அ.சோபிதா -மு/புதுக்குடியிருப்பு ம.க

பிரிவு 04

1ம் இடம் அ.பௌசிகா - மு/புதுக்குடியிருப்பும.க, 2ம் இடம் வி.நிரோஜனா–மு/பாண்டியன்குளம் ம.வி , 2ம் இடம் ர.கஜன்–மு/முல்லைதீவும.வி

விநாடிவினாப் போட்டி

1ம் இடம்

மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

2ம் இடம்


மு/ பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்

3ம் இடம்

மு/ யோகபுரம் மகாவித்தியாலயம். (2-15)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை கோரி வவுனியாவில் கையெழுத்து வேட்டை

## நேற்று முன்னெடுக்கப்பட்டது



(குருமன்காடு)


தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான இயக்கம் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நாட்டின் பல பகுதிகளிலும் கையெழுத்து வேட்டையை ஆரம்பித்துள்ளது.

அதன் ஒரு கட்டமாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா, இலுப்பையடியில் தமிழ் அரசியல் கைதிகளினை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி கையெழுத்துப் பெறும் நடவடிக்கை நேற்றுக் காலை இடம்பெற்றது.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் செயலாளர் டொன்பொஸ்கோ தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர்.(2-250)

# நிதி சேகரிப்பதற்கான நடைபயணம் மதவாச்சி நோக்கி நேற்று நகர்வு





(குருமன்காடு)

கராப்பிட்டியவில் சிறுவர் புற்று நோய் வைத்தியசாலை அமைப்பதற்கு நிதி சேகரிப்பதற்கான 10 ஆவது நாள் நடைபயணம்நேற்றுக் காலை வவுனியாவில் இருந்து மதவாச்சி நோக்கி நகர்ந்தது.

புளியங்குளத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வவுனியா வந்தடைந்த இந் நடைபயணம் நேற்றுக் காலை 5.30 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற மத வழிபாடுகளை அடுத்து நடைபயணம் மதவாச்சி நோக்கி ஆரம்பமானது.

பிரபல கிரிக்கெட் வீரரான மஹேல ஜெயவர்த்தனவுடன் இந் நடை பயணத்திற்கு வித்திட்ட நாதன் சிவகணநாதன், சரிந்தா உடம்புவே ஆகியோருடன் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இவர்களை வவுனியா நகர எல்லையில் வைத்து மதவாச்சி நோக்கிய பயணத்திற்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் கைதட்டி வழியனுப்பி வைத்திருந்தனர். (2-250-281)

# முல்லைத்தீவு மாவட்ட மட்ட கூட்டுறவு தினவிழா இன்று

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சபையினால் 94 ஆவது ஆண்டு சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட மட்டத்திலான விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மு/ கற்சிலைமடு அ.த.க.பாடசாலையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபையின் தலைவர் விச்வானந்தராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் து.ரவிகரன், க.சிவநேசன், வை.ஜவாகீர்ஜெநோபர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்ராஜ், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்க பதிவாளருமாகிய திருமதி மதுமதி வசந்தகுமார், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உ.சுபசிங்கா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2-15)

# பாலைப்பாணி கிராமத்திற்கு மின்சாரம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாலைப்பாணி கிராமத்திற்கான மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மாங்குளம் மின் அத்தியட்சகர் செந்தில்செல்வன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இதுவரைகாலமும் மின்னிணைப்பே இல்லாதிருந்த பிரதான வீதியிலிருந்து ஏறத்தாழ பத்து கிலோமீற்றர் காட்டுப்பிரதேசத்தை கடந்து உள்ள இக்கிராமத்திற்கான மின்னிணைப்பே வழங்கப்பட்டுள்ளது

இந்தப்பகுதி மக்கள் பலகாலமாக தமது பகுதிக்கு மின்னிணைப்பை பெற்றுத் தருமாறு கோரிவந்த நிலையில் இச்செயற்பாடு இருளில் இருந்த மக்களுக்கு வெளிச்சத்தை கொடுத்துள்ளது. (2-281)

# உதவிகளை சரியான முறையில் பயன்படுத்த தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் தெரிவிப்பு

**(கிளிநொச்சி)**

**உதவிகளை சரியான முறையில் பயன்படுத்த தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஜெ.நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி.அதிகார சபையால் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திஉதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் எமது திட்டத்தில் ஒரு பகுதியாக வீடுகளை அழகுபடுத்துவதற்காக ஒரு குடும்பத்துக்கு சீமெந்து பைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வருடம் குறித்த திட்டத்தின் கீழ் கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள 492 பேருக்கு தலா 10 சீமெந்து பைகளும் 10 பேருக்கு 5 சீமெந்து பைகளும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள 201 பேருக்கு தலா 10 சீமெந்துப் பைகளும் பளை பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள 145 குடும்பங்களுக்கு தலா 10 சீமெந்து பைகளும் 110 பேருக்கு தலா 5 சீமெந்து பைகளும் பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கழுள்ள 102 பேருக்கு தலா 10 சீமெந்து பைகளுமாக இந்த வருடம் முதலாம் கட்டக் கொடுப்பனவில் மொத்தம் 940 பேருக்கு தலா 10 சீமெந்து பைகளும் 120 பேருக்கு தலா 5 சீமெந்து பைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் வழங்கப்பட்டுள்ள உதவிகளை பலர் சரியான முறையில் பயன்படுத்தவில்லை என்பதை நாம் அறிந்துள்ளோம்.




மேலும் இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டி இருப்புதால் சரியான முறையில் உதவிகளை பயன்படுத்தினால் மட்டுமே அடுத்த கட்ட கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் என தலைமைக் காரியாலயத்தால் எமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தமக்குரிய வேலைத்திட்டங்களை உரிய முறையில் பூர்த்தி செய்ய முடியாதவர்கள் எமது அலுவலகத்தில் தாம் பெற்றுக் கொண்ட உதவிகளை மீளகையளிக்க முடியும்.

அதை விடுத்து தாம் பெற்றுக் கொண்ட உதவிகளை அடுத்தவருக்கு கைமாறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-9)

# முழுநிலவுக் கலை விழா

(கிளிநொச்சி)

பண்டிதர் பரந்தாமன் கவின்கலைக் கல்லூரியும்யோகர் சுவாமிகள் நற்பணி மன்றமும் காவேரி கலாமன்றமும் இணைந்து நடத்தும் மாதாந்த முழுநிலவுக் கலைவிழா இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

கல்லூரி தபேலா வாத்தியக்கலைஞர் செ.சாந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக கிளிநொச்சி திருநெறிக்கழக செயலாளர் அ.சிவஞானசுந்தரம், இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனச் செயலாளர் மு.சிவமோகன், கலாலயம் நாடகக் குழுவின் இயக்குநர் பொ.உமாகாந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.




நிகழ்வின் இறுதியில் 'நிலாவின் முற்றம் பாகம்-05' இறுவெட்டு வெளியீடு, 'தேடல் நிகழ்வு' விநாடி வினாப்போட்டி, கலைஞர்கள், சாதனையாளர்கள் மதிப்பளித்தல்,கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.(2-7)







மு/மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்ற ''விபத்துக்கு எதிராக எழுந்து நிற்போம்'' எனும் விழிப்புணர்வு அண்மையில் நடைபெற்றபோது...

வடமராட்சி துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. பெருமளவு பக்தர்கள் தேர்த்திருவிழாவில் திரண்டிருந்தனர். (படங்கள்:மகாலிங்கம்)








பொலிஸ் திணைக்களத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பொலிஸாரின் நிகழ்வுகள் நேற்றைய தினம் யாழ்.கோட்டைக்கு அருகில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர கலந்து கொண்டிருந்தார். யாழ்.இந்திய துணைத்தூதர் ஆ.நடராஜன், வடக்கு மாகாண பேரவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், நீதிபதிகள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வில் புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் 3 ஆம் இடம்பெற்ற மாணவி, சிறந்த முறையில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர். (படங்கள் - உ. சாளின்)




யாழ். நல்லூர் ஸ்ரீ சீரடி சாயி மந்திர் ஆலயத்தில் சப்பறத்திருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை வெகு விமரிசையாக இடம்பெற்றது. ஏராளமான பக்தர்கள் இந்நிகழவில் பங்கேற்றனர். (படங்கள் :-ஐ. சிவசாந்தன்)




புனர்வாழ்வு அதிகார சபையின் சுயதொழில் கடன் திட்ட உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும் மலிவு விற்பனையும் அண்மையில் நல்லூர் சங்கிலியன் தோப்பில் நடைபெற்றது.






2016 ஆம் ஆண்டுக்கான வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து மானிப்பாய் சோதிவேம்படி பாடசாலைக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நிழற்படப்பிரதி இயந்திரம் ஒன்றை வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் வழங்கி வைத்தார். அண்மையில் பாடசாலையில் இடம்பெற்ற ஆசிரியர்தின நிகழ்வில் பாடசாலையின் அதிபரிடம் மேற்படி இயந்திரம் கையளிக்கப்பட்டது. வடமாகாணசபை உறுப்பினருடன், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.(படங்கள்:கிஷோர்)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—92

# நுண்ணங்கியெதிர்ப்புக்கெதிரான நுண்ணங்கிகள் உருவாக்கம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நாம் வாழும் உலக இயக்கத்திற்கு நுண்ணங்கிகள் பெரிதும் பங்களிக்கின்றன. இவையின்றி எதுவுமில்லை என்பதாகியிருக்கின்றது. நுண்ணங்கிகளில் நன்மை தருவன, தீமைதருவன, உற்பத்தியாக்கத்திற்கு உதவுவன என வகைகள் உண்டு. இவற்றின் மொத்த இயக்கமே நம்மை வாழவைத்துக் கொண்டிருக்கின்றது என்றால் மிகையாகாது. ஆனாலும் இவற்றில் நடைபெறும் மாறுதல்கள், குறிப்பாக தீமைதரும் நுண்ணங்கிகளில் நடைபெறும் மாற்றங்கள் மிக முக்கியமானவையாகும். அவற்றிலொன்றுதான் நுண்ணங்கிகளுக்கெதிரான எதிர்ப்புருவாக்கம் (Antibiotic Resistance). இது ஒரு உலகளாவிய பிரச்சனையாக தற்போது உருவாகியிருக்கின்றது. இதனது சாதக பாதக நிலைகளைக் கருத்தில் கொண்டால் பாதக நிலைகளே அதிகமாகவும் எமக்கு சவாலாகவும் அமைந்துவிடும் காலத்தை நாம் நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். இது தான் என்னவோ நாம் தொடர்ச்சியாக ஒரே மருந்தை பயன்படுத்தும் போது அவை அந்த நுண்ணங்கிகளைக் கட்டுப்படுத்தாது போவதும் அதனால் நோய் குணமடையாதிருப்பதும் அவதானிக்கமுடிகின்றது. இதற்கெல்லாம் காரணமான நுண்ணங்கிகளைப் பற்றிய அறிவு அனைவருக்கும் தேவை என்பதனை மையப்படுத்தியே இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

நுண்ணங்கிகளில் நோயை ஏற்படுத்துவன தாவரங்களில் பாதிப்பை ஏற்படுத்துவன என்பதற்கப்பால் எமது சுகாதாரத்தை நேரடியாக பாதிப்பனவாக இருக்கின்றன. நோய் ஏற்படும்போது இவ்வாறான நுண்ணங்கிகளின் விருத்தியை கட்டுப்படுத்த அல்லது அவற்றை இல்லாதொழிக்க நுண்ணங்கிகளை கட்டுப்படுத்தும் குறிப்பிட்ட மருந்து வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. அநேகமாக பக்றீரியாக்களை கட்டுப்படுத்த பக்றீரியா எதிர்ப்பு மருந்துகள் (Antibiotics) பயன்படுத்தப்படுகின்றன. பூஞ்சணங்களை கட்டுப்படுத்த பூஞ்சண நாசினிகள் (Fungicides) பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக நுண்ணங்கிகள் அவற்றைக் கட்டுப்படுத்தும் இரசாயனங்களுக்கு எதிர்ப்புத்தன்மையை கொண்டிருப்பதனால் பாதிப்பை ஏற்படுத்தும் நுண்ணங்கிகளை கட்டுப்படுத்த முடியாதனவாகி விடுகின்றன. இந்தநிலைமை பொதுவாக பயிர்களில் வரும் பீடைகளையும் நோய்களையும் கட்டுப்படுத்துவதற்கு விசிறப்படும் இரசாயனங்களினால் ஏற்படுவது இயல்பு. தொடர்ச்சியாக பயன்படுத்தப்படும் இரசாயனங்களுக்கு நுண்ணங்கிகள் இயைவாக்கமடைவதும் அதனால் அவற்றை கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடுவதும் பரவலாக நடைபெறுகின்றது. இங்கே தொடர்ச்சியாகவும் தேவையற்றும் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்களிற்கு தீமை தரும் நுண்ணங்கிகள் சிறிது சிறிதாக இயைவாக்கமடைவதால் இறுதியில் அந்த இரசாயனங்களை பயன்படுத்தினாலும் கட்டுப்படாத தன்மையை தமக்குள் உருவாக்கி விடுகின்றன. இதனால் விவசாய செய்கையில் குறிப்பிட்ட ஒரு இரசாயனத்தை அதாவது பீடை நாசினியை தொடர்ந்து பயன்படுத்தக் கூடாதென ப்புத் தன்மை என்பது பல்வேறு வழிகளில் எமக்கு பாதகத்தை ஏற்படு த்தும் என அறிய முடிகின்றது. இவ்வாறான நுண்ணங்கியெதிருக்கான எதிர்ப்பு என்பது தொற்றுதலினை ஏற்படுத்தும் நுண்ணங்கிகளான பூஞ்சணம், பக்றீரியா மற்றும் வைரசுக்கள் என்பவற்றில் அதிகரித்த அளவில் உருவாவதனால் சிறந்த நோய்த் தடுப்பு மற்றும் பாதுகாப்பினை மக்களுக்கு குறிப்பிட்ட நோய்களுக்கு கொடுக்க முடியாமல் போகலாம் என அறிய முடிகின்றது. இன்னும் இந்த எதிர்ப்பு தன்மைக்கு காரணமான பரம்பரையலகு குறிப்பிட்ட நுண்ணங்கிகளில் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு வந்து சேர்வதும் இங்குள்ள பிரச்சினையாகும். இந்த நுண்ணங்கியெதிர்ப்பின் இழப்பானது பரந்துபட்டஅளவில் உலகளாவிய ரீதியில் உருவாகி வருவதாகவும் கண்டறியப்பட்டுள்ளதுடன் அவற்றுடன் தவிர நாளுக்குநாள் நோயையுருவாக்கும் நுண்ணங்கிகளில் புதிய எதிர்ப்புத்தன்மை பெருகி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. 2012ஆம் ஆண்டு எச்.ஐ.விக்கு எதிரான படுத்தாமையும்

2) மக்களிடையே இவ்வாறான மருந்துகளைப் பயன்படுத்துவது பற்றியதெளிவின்மை அல்லது அவை பற்றிய அறிவு போதாமை

3) விலங்குகளில் இவ்வாறான நுண்ணங்கியெதிர்ப்பு மருந்துகளை கட்டுப்படுத்துவது என்னும் தேவைக்கப்பால் விலங்கு வளர்ச்சி ஊக்கியாக பயன்படுத்தப்படுவது

4) இணையத் தளங்களின் ஊடாக மற்றும் பல்வேறு வழிகளில் நுண்ணங்கியெதிர்ப்பு மருந்துகள் இலகுவாக தாராளமாக கிடைக்கக் கூடியதாக இருப்பது என்பன இனங் காணப்பட்டுள்ளன.

சுகவீனமாக உணரும் போது பயன்படுத்தும் மருந்துகள் முறையே மருத்துவருடன் கலந்தாலோசித்த பின்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 109

பற்றி உலக உணவுதாபனம் (Food and Agriculture Organization) தற்போது உலகமக்களை விழிப்படையச் செய்திருக்கின்றது.

தீமைதரும் நுண்ணங்கிகளை முகாமைத்துவப்படுத்துவதற்காக நுண்ணங்கியெதிர்ப்பு பொறிமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறாக நுண்ணங்கிகளுக்கெதிரான பொறிமுறையில் இரசாயனங்களும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அவற்றுள் பொதுவாக விவசாயத்தில் கால்நடை பராமரிப்பில் பயன்படுத்தப்பட்ட பூஞ்சண எதிர்ப்பு மற்றும் பக்றீரியா எதிர்ப்பு இரசாயனங்கள் முக்கியமானவை. தாவரங்களில் நோயை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் பங்கசுநாசினிகள் (Fungicides) மற்றும் கால்நடைகளில் பக்றீரியா மற்றும் பங்கசு எதிர்ப்பு நாசினிகள் இங்கு குறிப்பிடத்தக்கவை. எமது முறையற்ற பயன்பாட்டினால் இவ்வாறானஎதிர்ப்பு இரசாயனங்களுக்கெதிராக நுண்ணங்கிகள் தம்மை இயைவாக்கிக் கொள்வதும் இவற்றுக்கெதிரான பொறிமுறையை தமக்குள்ளே விருத்தி செய்வதும் கண்டறியப்பட்டுள்ளது. இதனால்



பயன்படுத்தும் நுண்ணங்கிகளை கட்டுப்படுத்தும் இரசாயனப் பதார்த்தங்களை நுண்ணங்கிக்கெதிரானவை (Antimicrobial) என அழைப்பர். இந்த எதிர்ப்புத்தன்மை நலிவடைவதற்கு இரசாயனங்கள் முறையற்று பயன்படுத்தப்படுவதும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுவதும் காரணமாக அமைகின்றன. மேலும் ஒரேவகையான இரசாயனங்கள் பரிகரிக்கப்பட்ட அளவுக்கு குறைவாக பயன்படுத்துவதனாலும் அவை பழக்கப்பட்டுப் போவதும் நுண்ணங்கிகளிடையே எதிர்ப்பு தன்மை உருவாவதற்கு காரணமாக அமைகின்றது. இதனை விட இவ்வாறு அறிவுறுத்தப்படுகின்றது. மாற்றிமாற்றி பயன்படுத்துவதனால் இவ்வாறான எதிர்ப்புத் தன்மை உருவாவதனை தவிர்க்க முடியும். அதிலும் நாம் முறையாக தேவைக்கேற்ப பயன்படுத்துவது வலியுறுத்தப்படுகின்றது.

விவசாயத்தில் ஏற்பட்டுள்ள நிலை போலமனிதனில் நோயை உருவாக்கும் நுண்ணங்கிகளும் இவ்வாறு இயைவாக்கமடைவதும் நுண்ணங்கியெதிர்ப்புக்கு எதிராக செயற்படமுனைவதையும் ஆய்வு மூலம் கண்டறிந்துள்ளார்கள். இது நமக்கெல்லாம் முக்கியமானதொரு செய்தியாகும். இவ்வாறான நுண்ணங்கியெதிர்ப்புக்கு எதிர் எதிர்ப்புத் தன்மை நலிவடைந்து வருவதாகவும் இன்னும் அந்த நலிவுறும் தன்மை எதிர்காலத்தில் அதிகரிக்க வாய்ப்புக்கள் அதிகமெனவும் அறியமுடிகின்றது. 2013இல் பன்முக மருந்து எதிர்ப்புள்ள காசநோய் இனங்காணப்பட்டது. இதனால் நோயெதிர்ப்பு தன்மையின் வீரியம் காரணமாக மருந்துகளில் எதிர்ப்பு தன்மை அதிகரிப்பதும் அதனால் மருந்துகளை பயன்படுத்தும் போது தேவை கருதி பயன்படுத்தவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இதில் தனிமனித சுகாதாரம் என்பது பலமாக எடுத்துரைக்கப்படும். உணவினை சுத்தமாக தயாரிக்காமை, உணவருந்த முன் கைகளைக் கழுவாமை, நோயுற்றவர்களுடன் நெருக்கமாக இருத்தல் மற்றும் முறையான தற்காப்பின்றி உறவு கொள்ளுதல் என்பனவும் பக்றீரியா மற்றும் வைரசு நோய்களை இலகுவில் மனிதனில் தொற்றச் செய்கின்றது. இவ்வாறான செயன்முறைகளில் மிகவும் அவதானமாக செயற்படுமாறு மக்களை அறிவுறுத்த வேண்டும். இங்கே குறிப்பிடத்தக்கதான காரணங்களாக

1) சரியான சட்ட திட்டங்கள் நுண்ணங்கியெதிர்ப்பு மருந்துகளை பயன்படுத்துவதில் இல்லாதிருப்பதும் அல்லது சரியாக அதனை நடைமுறைப்

அதற்கான பரிசோதனைகளை செய்த பின்பு மருத்துவரின் பரிந்துரைக்கேற்ப பயன்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் தமக்கேற்றாற்போல வெறுமனே கேட்டதை வைத்துக்கொண்டு பரிகரிக்க முனையக்கூடாது. குறிப்பாக உயிரெதிரிகளை (antibiotics/antimicrobials) பயன்படுத்தும் போதுமிகவும் அவதானமாக இருக்க வேண்டும். முறையற்ற, தேவையற்ற மருந்துப் பிரயோகம் பிரச்சினையை அதிகரித்து விடும் என்பதனை கவனிக்குக. எமது தவறான செயன்முறையினால் நோயெதிர்ப்பு தன்மையை நாமே இழந்துவிடும் அபாயம் எம்முன்னே இருக்கின்றதென்பதை உணர்ந்து கொண்டு மனித சுகாதாரத்திலும் சரி விவசாய செய்கையிலும் சரி பயன்படுத்தும் இரசாயனங்களை குறிப்பாக நுண்ணங்கி யெதிர்ப்பு மருந்துகளைசரியான அளவிலும் தேவைக்கேற்பவும் பயன்படுத்தவேண்டும். நுண்ணங்கியெதிருக்கான எதிர்ப்புத்தன்மை தீமைதரும் நுண்ணங்கிகளில் பெருகி விடும் போது அவற்றினால் எமக்கேற்படும் ஆபத்தை நாம் தவிர்க்கமுடியாது போய்விடும் என்பதோடு அதனால் இறப்புக்களும் அழிவுகளும் அதிகரிக்கும் என்பதனையும் உணர்க.

# சிரியா-துருக்கி எல்லையருகே கார்க் குண்டுத் தாக்குதல்

## 20 பேர் உயிரிழப்பு

***சிரியா மற்றும் துருக்கி நாடுகளுக்கு இடையிலான எல்லைப்பகுதியின் அருகே நடந்த கார்க் குண்டுத் தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர்.***



சிரியா மற்றும் துருக்கி நாடுகளுக்கு இடையிலான எல்லைப்பகுதியில் அஸாஸ் நகரம் சிரியாவைச் சேர்ந்த ஷாமியா என்ற போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

பாப் அல்சலாமா நகருக்கு செல்பவர்கள் இப்பகுதியை கடந்துதான் போக வேண்டும்.

உள்ளூரில் செல்வாக்குப் படைத்த ஷாமியா போராளிக் குழுவினர் இங்கு சோதனைச்சாவடி ஒன்றை அமைத்து இப்பகுதியைக் கடந்து செல்லும் வாகனங்களை சோதனையிட்டு கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்த சோதனைச் சாவடி அருகே நேற்றுக்காலை வெடிகுண்டுகளுடன் வந்த ஒருகார் வெடித்து சிதறியதில் 20இற்கும் அதிகமானோர் உடல் சிதறி, பலியாகினர்.

பலர் காயமடைந்தனர், பலியானவர்களில் பலர் ஷாமியா குழுவைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

சுமார் 30 பேர் படுகாயங்களுடன் அஸாஸ் நகரில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த தற்கொலைப்படை தாக்குதலுக்கு யாரும் பொறுப்பேற்காத நிலையில், இந்த தாக்குதலும் அண்மையில் இப்பகுதியில் இதுபோன்ற தாக்குதல்களை நடத்திய ஐ.எஸ். தீவிரவாதிகளின் சதிவேலையாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (இ-7)

# ஜனாதிபதிக்கு எதிராக கிளர்ந்த பொலிவிய மக்கள்



முதற்தடவையாக ஜனாதிபதிக்கு எதிராக கிளர்ந்த பொலிவிய மக்கள் ஜனாதிபதிக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று பொலிவிய மக்களால் முதன்முறையாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டம் கடந்த புதன்கிழமை எல் ஆல்டோ நகரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய மயமாக்கல் திட்டங்களை மேற்கொள்ளவில்லை, அபிவிருத்தி தொடர்பில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை போன்ற காரணங்களை வலியுறுத்தி, இடதுசாரி கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி ஏவோ மொராலஸிற்கு எதிராக கோஷமெழுப்பிய மக்கள் தேசிய மயமாக்கல் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டமானது ஜனாதிபதி மீதான அதிருப்தியை வெளிப்படுத்தியதுடன் மாத்திரம் நிற்காது நகர முதல்வர் பதவிவிலக வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளையும் முன்வைத்து நடத்தப்பட்டது.

நகரின் வீதி விளக்குகள் முறையாக இல்லை என்பது தொடக்கம் பல்பொருள் அங்காடியின் தேவைப்பாடு வரை பல்வேறு நிறைவேற்றப்படாத பணிகளை சுட்டிக்காட்டிய மக்கள், அபிவிருத்தியில் தமது நகரம் பின்தள்ளப்பட்டுள்ளதை குறிப்பிட்டு உரியநபர்கள் பதவிவிலக வேண்டும் என்ற கோரிக்கையினையும் முன்வைத்தனர்.

இதேவேளை, கடந்த ஒரு தசாப்தத்தில் ஆட்சி புரியும் ஏவோ மொராலஸின் நிர்வாகம் மீது அந்நாட்டு மக்கள் முதல் முறையாக அதிருப்தி அடைந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச ஊடகங்கள் மக்களின் குறித்த போராட்டம் தொடர்பில் ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருவதாக தெரிவித்துள்ளன. (இ-7)

## கொமன்வெல்த் அமைப்பிலிருந்து மாலைதீவு விலகுவதாக அறிவிப்பு



கொமன்வெல்த் அமைப்பிலிருந்து விலகுவதாக மாலைதீவு அறிவித்துள்ளது.

தெற்காசிய நாடான மாலைதீவில், ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாக, முகமது நஷீத் இருந்தார். 2012இல், முகமது நஷீத்தின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, அப்துல்லா யாமீன், ஜனாதிபதியாக பதவியேற்றார். "நஷீத்தின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது, ஜனநாயக படுகொலை" என, சர்வதேச நாடுகள் குற்றம் சாட்டின. மாலைதீவில், மனித உரிமை மீறல்கள் அதிகம் நடப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. இதுகுறித்து விளக்கம் கேட்டு, மாலைதீவு அரசுக்கு கொமன்வெல்த் அமைப்பு சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

கடந்த 2012 இல் மாலைதீவு ஜனாதிபதி நஷீத் ஊழலில் ஈடுபட்டு பதவி விலகியதைத் தொடர்ந்து அதிகாரத்தை மாற்றம் செய்வது சட்டப்படி நடைபெறவில்லை என தெரிவிக்கப்பட்டது. இதனால், ஜனநாயகம் என்ற பெயரில் அநீதி இழைக்கப்படுவதாக குற்றஞ்சாட்டிய மாலைதீவு, நேற்று கொமன்வெல்த் அமைப்பில் இருந்து வெளியேறுவதாக அறிவித்தது.


இந்நிலையில், மாலைதீவு வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, முகமது நஷீத்தின் ஆட்சி நீக்கப்பட்டதிலிருந்தே மாலைதீவை, கொமன்வெல்த் அமைப்பு அவமானப்படுத்தி வருகிறது. மாலைதீவில் ஜனநாயகம் இல்லை என்பது போன்ற பொய்ப் பிரசாரத்தை செய்து வருகிறது. கொமன்வெல்த் அமைப்பில் தொடர்ந்து நீடிப்பது நல்லதல்ல என்பதால், அதிலிருந்து விலக முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# மன்னர் மரணம் மக்கள் துக்கம்!









(பாங்கொக்)

70 ஆண்டுகள் பதவியில் இருந்த தாய்லாந்து நாட்டின் மன்னர் பூமிபால் அதுல்யதேஜ் மரணம் அடைந்தார். அவருடைய மறைவுக்கு ஒரு வருடம் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து நாட்டின் மன்னர் பூமிபால் அதுல்யதேஜ் (வயது 88). தனது 18 வயதில், 1946-ம் ஆணடு, மன்னர் ஆனார். 70 ஆண்டு காலம் மன்னராக இருந்து, மக்களின் ஏகோபித்த அபிமானத்தையும், அன்பையும் ஒரு சேரப்பெற்றவர். கடவுளின் அவதாரமாக அவரைப் பார்த்த மக்கள், நாட்டை ஒற்றுமைப்படுத்தும் சக்தியாக அவரை நம்பினர். சாக்ரி வம்சத்தை சேர்ந்த அவர் ஒன்பதாம் ராமர் என அறியப்பட்டிருந்தார்.

கடந்த சில ஆண்டுகளாக அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தார். பொது நிகழ்ச்சிகளில் தோன்றாமல் இருந்து வந்தார். உடல் நலக்குறைவால் கடந்த 2014-ம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி பாங்கொக்கில் உள்ள சிறிராஜ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உடல்நிலை மோசமானது. அவரது உடல் நிலை ஸ்திரமற்று இருப்பதாக அரண்மனை தெரிவித்தது. அப்போதுமுதல் மக்கள் அவர் அனுமதிக்கப்பட்டிருந்த வைத்தியசாலை முன்பாக கூடி கண்ணீரோடு பிரார்த்தனை செய்து வந்தனர்.

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மன்னர் பூமிபால் அதுல்யதேஜ் நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி மாலை 3.52 மணிக்கு (இந்திய நேரப்படி பிற்பகல் 2.22 மணி) மரணம் அடைந்தார். அப்போது பட்டத்து இளவரசர் மகா வஜிர லோங்கோன், இளவரசி மகாசாக்ரி சிறிந்தோன், இளவரசி சோம் சவாலி, இளவரசி சுலாபோன் ஆகியோர் உடன் இருந்தனர்.

உலகிலேயே நீண்ட நெடுங்காலம் மன்னராக இருந்தவர், தாய்லாந்து மன்னர்தான் என்பது குறிப்பிடத்தக்கது. மன்னர் பூமிபால் அதுல்யதேஜ் மறைவு, மக்களை மீளாத்துயரத்தில் ஆழ்த்தி உள்ளது. மன்னரது படங்களை கையில் ஏந்தி, மக்கள் கதறி அழுதனர்.

மன்னரின் மறைவுக்கு ஒரு வருட காலம் துக்கம் கடைப்பிடிக்கும் என பிரதமர் பிரயுத் சான் ஓச்சா அறிவித்தார். இதுபற்றி அறிவித்த அவர், "மன்னர் இப்போது சொர்க்கத்தில் இருக்கிறார். அவர் அங்கிருந்தவாறு தாய்லாந்து மக்களை பார்த்துக்கொள்வார்" என கூறினார்.


63 வயதான பட்டத்து இளவரசர் மகா வஜிரலோங்கோன், நாட்டின் புதிய மன்னர் ஆவார் என பிரதமர் பிரயுத் சான் ஓச்சா தெரிவித்தார்.

ராணி சிரிகிட் 2012-ம் ஆண்டு உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டார். அதில் இருந்து அவர் பொது நிகழ்ச்சிகளில் தோன்றுவதில்லை.

மன்னர் பூமிபால் அதுல்யதேஜ்-சிரிகிட் தம்பதியருக்கு ஒரு மகன், 3 மகள்கள் உள்ளனர். (இ-7-10)

## தாய்லாந்து மன்னர் மறைவுக்கு இந்திய பிரதமர் மோடி இரங்கல்

தாய்லாந்து நாட்டின் மன்னர் பூமிபால் அதுல்யதேஜ் நேற்று மரணம் அடைந்தார். அவரது மறைவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.



தனது 'டுவிட்டர்' பக்கத்தில், "நம் காலத்தில் உலகின் உயர்ந்த தலைவர்களில் ஒருவராக திகழ்ந்து வந்தவர், தாய்லாந்து மன்னர் பூமிபால் அதுல்யதேஜ். அவரது மறைவால் வாடும் தாய்லாந்து மக்களுடன், இந்திய மக்களும், நானும் சேர்ந்து நிற்கிறோம். மன்னர் பூமிபால் அதுல்யதேஜ், தன் நாட்டு மக்கள் பலராலும் வழிபடப்பட்டவர். என் எண்ணங்கள், அவருடைய எண்ணற்ற நலம் விரும்பிகளோடும், குடும்பத்தினரோடும் இணைந்திருக்கிறது" என குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று உலக தலைவர்கள் பலரும் தாய்லாந்து மன்னரின் மறைவுக்கு இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளனர். (இ-7-10)

## மாட்சிமை தங்கிய தாய்லாந்து மன்னருக்கு பான் கீ மூன் இரங்கல்



(பாங்கொக்)

தாய்லாந்து மன்னர் பூமிபோல் அதுல்யதேஜின் மறைவுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் மன்னரின் நீண்ட அர்ப்பணிப்பு மற்றும் ஒருங்கிணைக்கும் தேசிய தலைவராக அவருடைய மரபுரிமையை மதிப்பதாக பான் கீ மூன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் இடம்பெற்ற கூட்டத்தொடரில் இரங்கல் செய்தியை வாசித்த பான் கீ மூன், 'எங்களுடைய நிகழ்ச்சி நிரலை ஆரம்பிப்பதற்கு முன்னர் மாட்சிமை தங்கிய தாய்லாந்தின் மன்னர் மறைவுக்கு அரச குடும்பம், தாய்லாந்து அரசு மற்றும் தாய்லாந்து மக்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்க விரும்புகின்றேன்.

மன்னர் அதுல்யதேஜ் நாட்டை ஒருங்கிணைத்த தேசிய தலைவர் என்று தாய்லாந்து மக்களால் மதிக்கப்படுபவர். மரியாதைக்குரிய நபர்.' என்று தெரிவித்துள்ளார்.

மேலும், உலகளாவிய மதிப்புக்கள் மற்றும் மனிதவுரிமைகளுக்கு மதிப்பளிக்கும் மன்னரின் பாரம்பரியத்திற்கு தாய்லாந்து தொடர்ந்து மதிப்பளிக்கும் என்றும் பான் கீ மூன் தெரிவித்தார்.

மறைந்த மன்னர் பூமி போல் அதுல்யதேஜ், கடந்த 2006 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் வாழ்நாள் சாதனையாளர் விருதினை பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பாகிஸ்தானுடனான உறவை முறித்து கொள்ள நிர்ப்பந்தம்

### பங்களாதேஷ் பிரதமர் சுட்டிக்காட்டு



பாகிஸ்தானுடனான உறவுகளை முறித்துக் கொள்வதற்கான நிர்ப்பந்தங்கள் தங்கள் நாட்டின் மீது விதிக்கப்படுவதாக பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினா வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

கோவாவில் இன்றும் நாளையும் 'பிரிக்ஸ்' நாடுகளின் மாநாடு நடைபெறவுள்ள நிலையில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த பங்களா தேஷ் பிரதமர் ஷேக் ஹசினா கூறியதாவது,

பாகிஸ்தானில் நடைபெறவிருந்த 'சார்க்' உச்சி மாநாட்டை இதில் இடம்பெற்றிருந்த மற்ற நாடுகள் புறக்கணித்ததைப்போலவே, இந்த மாநாட்டை நடத்தும் சூழல் பாகிஸ்தானில் இல்லை என்பதால் பங்களாதேஷும் இந்த மாநாட்டை புறக்கணித்தது.

எங்கள் நாட்டில் தீவிரவாதம் காலூன்றுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்பதை கடந்த 2008ஆம் ஆண்டில் இருந்து எங்கள் அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் தெளிவாக உணர்த்தும். அதற்கு முன்னர் ஆயுதங்களை கடத்தும் பாதையாக பங்களாதேஷ் இருந்து வந்தது. எல்லைப்பகுதியில் தினந்தோறும் குண்டு வெடிப்பு, தீவிரவாத தாக்குதல் மற்றும் வன்முறை நிலவி வந்தது. இப்போது, அவை எல்லாம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், எங்கள் உள்நாட்டு விவகாரத்தில் மூக்கை நுழைக்கும் பாகிஸ்தானின் முயற்சிகள் எங்களுக்கு ஏற்புடையதாக இல்லை. அந்நாட்டுடனான இராஜாங்கரீதியான உறவுகளை முறித்துக் கொள்வதற்கான நிர்ப்பந்தங்கள் எங்கள் அரசுக்கு பெருகி வருகிறது என்று அவர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிரபல பாடசாலைகளில் அனுமதி வழங்கும் நடைமுறையை இரத்துச் செய்ய அரசு கவனம்

(கொழும்பு)

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் பிரபல பாடசாலைகளில் அனுமதி வழங்கும் நடைமுறையை இரத்து செய்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

எதிர்வரும் காலங்களில் புலமைப்பரிசில் பரீட்சையானது உதவு தொகை வழங்குவதற்காக மட்டும் நடத்தும் ஓர் பரீட்சையாக மாற்றியமைக்கப்படும் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நுகவெல மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரபல பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கான ஓர் பரீட்சையாக தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையை நடத்தாது மாணவர் உதவு தொகை வழங்குவதற்கான பரீட்சையாக மட்டும் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஓர் போட்டிப் பரீட்சையாக மாறியுள்ளது.

சிறுவர்களின் பிள்ளைப் பருவம் பறிக்கப்பட்டு இந்தப் பரீட்சை தாய்மாருக்கான பரீட்சையாக மாற்றமடைந்துள்ளது.

இந்த நிலையை உடனடியாக நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)




# ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணை

## ஐ.தே.க. எம்.பிக்கள் போர்க்கொடி

(கொழும்பு)

**ஊழல், மோசடிகள் தொடர்பான விசாரணைகளிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப உறுப்பினர்களை பாதுகாக்கும் நோக்கில் சட்டம் ஒழுங்கு அமைச்சை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்தால் அவருக்கு எதிராக அரசியல் குற்றவியல் பிரேரணையொன்றை முன்வைக்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர்.**

அதனால் இந்த விடயம் தொடர்பில் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவுபடுத்தவும், இராணுவம் உட்பட முப்படையினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் மோதல்களை ஏற்படுத்தவும், சீ.ஐ.டி, எப்.சீ.ஐ.டி ஊடாக ஐக்கிய தேசியக் கட்சியினர் பாரிய சதித்திட்டமொன்றை முன்னெடுத்துள்ளதாக உளவுத்துறையினர் ஜனாதிபதியை எச்சரித்துள்ளதாகவும், இதனால் சட்டம் ஒழுங்கு அமைச்சை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் வெளிப்பாடாகவே கடந்த 12 ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் படைத்தளபதிகளுக்கு எதிராக மேற் கொள்ளப்பட்டு வரும் ஊழல் மோசடி விசாரணைகளை கடுமையாக சாடியிருந்தார்.

இந்த உரையின் போது சீ.ஐ.டி, எப்.சீ.ஐ.டி மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினர் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய செயற்படுவதாகவும் ஜனாதிபதி குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# கோடிக்கணக்கான வரி செலுத்தாமல் 70 சொகுசு வாகனங்கள் இறக்குமதி

தீர்வை வரி இன்றி சொகுசு வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிக்கமைய இதுவரை 70 பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு வாகனங்களை இறக்குமதி செய்துள்ளதாக சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கொண்டுவரப்பட்டுள்ள ஒரு வாகனத்திற்கான தீர்வை வரி மட்டும் 33.5 மில்லியன் ரூபா என அவர் கூறியுள்ளார். கொண்டுவரப்பட்ட வாகனங்கள் சில விற்பனை நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அரசாங்கத்தின் வரிக் கொள்கையை மீறி இவ்வாறு வாகனங்கள் கொண்டு வரப்படுவதனால், அரசாங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு 40 மில்லியன் ரூபாவை இழக்க நேரிடுவதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க கடந்த நவம்பர் 20 ஆம் திகதி வரவு செலவு திட்ட உரையின் போது கூறியிருந்த போதிலும் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் போயுள்ளதாகவும், முன்னர் போன்ற இந்நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தீர்வை வரி செலுத்தாமல் வரப்பிரசாதங்களை பயன்படுத்தி வாகனங்களை கொள்வனவு செய்வதனால் ஒரு வாகனத்தின் மூலம் மாத்திரம் அரசாங்கத்திற்கு 33.5 மில்லியன் ரூபா வருமானம் இல்லாமல் போவதாகவும், இந்த அனுமதிப்பத்திரத்தை வாகன விற்பனையாளர்களுக்கு வழங்குவதன் மூலம் அந்தப்பணத்தில் 25 மில்லியன் ரூபாவை பாராளுமன்ற உறுப்பினரும் மீதி 8.5 மில்லியன் ரூபாவை வாகன விற்பனையாளரும் பெற்றுக்கொள்வதனால் அரசாங்கத்திற்கு 5 சதமேனும் வருமானம் கிடைப்பதில்லை என்று அவர் தெரிவித்தார்.

தீர்வை வரியின்றி வாகனங்களை கொண்டு வருவதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியில் இடம்பெறுகின்ற வரி மோசடிகளுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறி தான் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திடம் முறைப்பாடு செய்த போதிலும், அரசாங்கத்தின் கொள்கைப்படி இவை மேற்கொள்ளப்படுவதால் அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற வருமான இழப்பு சம்பந்தமாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தலையீடு செய்ய முடியாதென்று அவர் தனக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் ஊழல் சட்டத்தின் 4ஆவது பிரிவின் கீழ் நம்பகரமான மற்றும் முறையான விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு பொறுப்பு இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வரப்பிரசாதங்களை பயன்படுத்தி தமது பெயர்களில் வாகனங்களை கொண்டு வந்து விற்பனை செய்வது ஊழல் சட்டத்தின் 70 ஆவது பிரிவின் கீழ் பாரிய குற்றம் என்றும், அவ்வாறு விற்பனை செய்வதாயின் முழுமையான வரி செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தவறாக இந்த அனுமதிப்பத்திரத்தை விற்பனை செய்வதன் மூலம் பெருந்தொகை பணத்தைப் பெற்றுக் கொள்வதுடன், வாகன வர்த்தகர்களும் மில்லியன் கணக்கில் பணத்தை பெற்றுக் கொள்வதாகவும் இதன் மூலம் வரிப் பணமாக அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கோடிக்கணக்கான பணம் இல்லாமல் போவதாகவும் சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)



தெல்லிப்பழை பகுதியில் தாய்மாரினால் நடத்தப்படும் "மானிடம் இயற்கை சுவையகம்" கடந்த 11 ஆம் திகதி விஜயதசமி நாளன்று யாழ்ப்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.நந்தகுமாரினால் திறந்துவைக்கப்பட்டுள்ளது. மானிடம் அறக்கட்டளையும் தெல்லிப்பழை தாய்மார் கழக இணையமும் இணைந்து தெல்லிப்பழை வைத்தியசாலை முன்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த சுவையகமானது முற்றிலும் தாய்மார்களால் நடத்தப்படவுள்ளதுடன் இவ் உணவகத்தில் இயற்கையான பழப் பானம், மோர், இலைக் கஞ்சி, கூழ், குரக்கன் ரொட்டி, சத்துமா உருண்டை, எள்ளுப் பாகு, மோதகம் என பாரம்பரிய இயற்கை உணவு வகைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் இயற்கை வேளாண் பண்ணையில் உற்பத்தியாகும் மரக்கறிகளை கொண்டு இரசாயன தாக்கமற்ற உணவு வகைகளையும் இங்கு பொதுமக்கள் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (படங்கள்.-பொ.சோபிகா)

# வடபகுதி புறக்கணிப்பு; ஆயுதம் ஏந்தக்காரணம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**இந்த நாட்டை ஆட்சி செய்தவர்கள் வடபகுதியை புறக்கணித்ததன் காரணத்தினாலேயே அவர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை ஏற்பட்டது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது அனைத்து மாவட்டங்களையும் சரிசமமாக கவனிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் பாரபட்சம் காட்டியதன் காரணமாகவே சில மாவட்டங்களில் அபிவிருத்திகள் பாதிக்கப்பட்டன.

அந்த நிலை எமது நல்லாட்சிக் காலத்தில் இடம்பெறாது என நான் உறுதியளிக்கின்றேன்.

நான் அண்மையில் யாழ்.சென்றபோது வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், எந்த அரசாங்க காலத்திலும் கிடைக்காத நிதி இம்முறை கல்வி அபிவிருத்திக்கு வடமாகாணத்திற்கு கிடைத்துள்ளதாக மிக சந்தோசத்துடன் கூறினார். இதனையே வடமத்திய மாகாண முதலமைச்சரும் தெரிவிக்கின்றார்.

வடமத்திய மாகாண குறைகளை நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் போது அப்போதிருந்த ஜனாதிபதிகள் இருவருக்கும் எடுத்துக்கூறினேன். கடுமையான தொனியிலும் சொல்லிப் பார்த்தேன். ஆனால் உரிய பலன் கிடைக்கவில்லை.

தற்போதைய நல்லாட்சியில் மாகாண ரீதியில் வேறுபட்ட அபிவிருத்தியின்றி அனைத்து மாகாணங்களுக்கும் சமமான அளவு நிதி வழங்கப்படுகின்றது.

வடக்குக்கு நாம் செய்த அசாதாரணங்கள் அவர்களை ஆயுதம் தூக்கச் செய்தது. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் வடக்குக்கு எத்தனை அமைச்சுப் பதவிகளை வழங்கினோம்? அவர்களை எவ்வாறு கவனித்தோம்? இவற்றை நாம் சிந்திக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# புகையிரதம் முன் பிள்ளைகளுடன் பாய்ந்து தற்கொலைக்கு முயற்சித்த குடும்பப்பெண்

கணவனின் தொந்தரவை சகிக்க முடியாது இரண்டு பிள்ளைகளுடன் தற்கொலை செய்ய முயற்சித்த தாய் ஒருவரை அநுராதபுரம் குற்றப் பிரிவுப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் காப்பாற்றியுள்ளனர்.

பொலிஸ் சார்ஜன்டான எஸ்.விஜயசிங்கவுக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் குழந்தைகளின் உயிரையும், தாயின் உயிரையும் காப்பாற்றியுள்ளனர். 33 வயதுடைய தாயும், ஏழு வயது மற்றும் 10 மாதங்களைக் கொண்ட குழந்தைகளுமே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளனர். வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிக்கும் நகர்களுக்கிடையிலான கடுகதி புகையிரதம் முன் பாய்ந்து தற்கொலை செய்வதற்காக தஹியகம பகுதியில் காத்திருந்தபோதே இவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

தகவல் கிடைத்த பொலிஸ் அதிகாரி விஜயசிங்க சக பொலிஸாருடன் சென்று அவர்களைக் காப்பாற்றியதுடன், குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்கள் பிரிவு பொலிஸாரிடம் அவர்களை ஒப்படைத்தனர்.

தனக்கு 10 மற்றும் 16 வயதுடைய மேலும் இரண்டு பிள்ளைகள் இருப்பதாகத் தாய் பொலிஸாருக்குக் கூறியிருப்பதுடன், மதுபோதைக்கு அடிமையான தனது கணவர் பல வருடங்களாக உழைத்த பணத்தை வீண் விரயம் செய்துவிட்டு, தினமும் தம்மை தொந்தரவுக்கு உட்படுத்துவதாகக் கூறியுள்ளார். தொந்தரவு தாங்க முடியாது தனது இரண்டு பிள்ளைகளுடன் தற்கொலை செய்யத் தீர்மானித்ததாக அப்பெண் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இது தொடர்பில் காப்பாற்றப்பட்ட பெண்ணின் கணவருக்கு அறிவிக்கப்பட்ட போதும் அவர்களைப் பொறுப்பேற்பதற்கு அவர் வருகை தந்திருக்கவில்லை. இந்த நிலையில் மீட்கப்பட்ட பெண்ணின் தாயார் அவர்களைப் பொறுப்பேற்றார். மருமகன் மதுவுக்கு அடிமையானதால் தனது மகளும், அவளுடைய குழந்தைகளும் தற்கொலைக்கு முயற்சித்திருப்பதாகத் தாயார் கூறினார்.

தற்கொலை செய்துகொள்வோமா? என தாய் கேட்ட போது அதற்கு தாம் ஒப்புக் கொண்டதாக காப்பாற்றப்பட்ட ஏழு வயது குழந்தை பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளது. (இ-7-10)

# புலிகளுக்கு ஏவுகணைகளை வாங்க முயன்ற மூவருக்கான சிறைத்தண்டனை குறைப்பு!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்வனவு செய்ய முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டில், 25 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட மூன்று ஈழத் தமிழர்களின் தண்டனைக் காலத்தை புரூக்லின் நீதிமன்றம் குறைத்துள்ளது.

2006 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகளை வாங்க முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டில், கனேடியத் தமிழர்களான சதாஜன் சராசந்திரன், சகிலால் சபாரத்தினம், திருத்தணிகன் தணிகாசலம் ஆகிய மூவருக்கும் கடந்த 2011ஆம் ஆண்டு அமெரிக்க நீதிமன்றம் 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

இதையடுத்து, மூவரும் தமது தண்டனையைக் குறைக்கக் கோரி, புரூக்லின் நீதிமன்றத்தில் 2012ஆம் ஆண்டு மனுத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கில் புரூக்லின் சட்டமா அதிபர் பணியகமும், மனுதாரர்களின் சட்டவாளர்களும் இணக்கப்பாடு ஒன்றுக்கு வந்தனர்.

இதற்கமைய, மூவர் மீதான ஆயுத பேரக் குற்றச்சாட்டு கைவிடப்பட்டது.

எனினும் தீவிரவாத அமைப்பு ஒன்றுக்கு பொருள் உதவி வழங்கிய குற்றச்சாட்டில், 15 ஆண்டு சிறைத்தண்டனையை அனுபவிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதற்கமைய, புரூக்லின் நீதிமன்றம், மூவருக்கும் எதிரான 25 ஆண்டு சிறைத் தண்டனையை 10 ஆண்டுகளால் குறைத்துள்ளது.

இந்த தண்டனைக் காலம் முடிந்த பின்னர், மூவரும் கனடாவுக்கு நாடு கடத்தப்படுவார்கள். (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### குற்றம் கண்டுபிடிப்பவர்களைச் சமாளிப்பது எப்படி?

நம்மீது தவறு என்றால் அதை ஏற்க வேண்டியது தான். அதன் விளைவுகளைச் சந்தித்துத் தான் ஆக வேண்டும். ஆனால் எதைச் செய்தாலும் நம்மீது தவறு இருப்பதாகக் கண்டுபிடிப்பவர்கள் என்று நம்மைச் சுற்றி ஒரு கூட்டம் உண்டு. இவர்கள் நண்பர்களாகவோ தெரிந்தவர்களாகவோ இருந்துவிட்டால் அதிகம் பொருட்படுத்த வேண்டியதில்லை. மாறாக நம்மை ஆளும் (கையாளும்) ஆசாமிகளாக இருந்துவிட்டால் வாழ்க்கையில் அல்லது அந்தக் குறிப்பிட்ட கால கட்டத்தில் மன அமைதியே போய்விடும்.

பொதுவாக குற்றம் கண்டுபிடிக்கிறவர்கள் மூன்று பெரும் பிரிவினராக இருப்பார்கள்.

முதலாமவர்கள், பர்பெக்ஷனிஸ்டுகள் என்று சொல்லப்படும் நியாயவாதிகள், இரண்டாமவர்கள், எந்த வகையிலும் திருப்தி செய்யப்பட முடியாதவர்கள். மூன்றாவது வகையினர், நம்மிடம் பிரியமோ பிடிப்போ, நன்மதிப்போ இல்லாதவர்கள்.

இந்த மூவருள் நியாயவாதிகள் நம்மை ஆள்பவர்களாக அமைந்துவிட்டால் அது நமக்கு ஒருவகையில் கஷ்டம் என்றாலும் பலவகையில் நல்லது. எப்படி? நாமும் கொஞ்சமாவது அவர்களைப் போல மிகச் சரியாக நடக்க வேண்டிய உந்துதல் ஏற்படும். இது, கசப்பு மருந்தைச் சாப்பிட்டு உடல் நலம் பெறுவதைப் போன்றது.

இத்தகையவர்களைச் சமாளிப்பது என்பது இவர்களோடு ஒத்துப் போவதில் தான் இருக்கிறது. இது நம் வருங்காலத்திற்கு நல்லதும் கூட, அவருக்குக் கீழ்ப்படிந்து வேலை பார்த்தேன்; இன்றைக்கு நான் நல்லா இருக்கிறதுக்குக் காரணம் அவர் தான் ! என்று நாம் அவரைப் பாராட்டும் காலமும் வரும்.

இரண்டாவது வகையினர் இருக்கிறார்களே, இவர்களோடு காலம் தள்ளுவது தான் ரொம்ப கஷ்டம்.

இவர்களைப் பொறுத்த மட்டில் நாம் களைப்போ சலிப்போ அடைந்துவிடாமல் இருக்க வேண்டும். அதாவது இவருக்கிட்டே நல்ல பேர் வாங்கவே முடியாதுப்பா! என்று விரக்தியடைந்து பேசாமல் ,இவர் கொஞ்சமாவது பாராட்டும் மனிதர்களில் நான் முதலாவது இடத்தைப் பெறுகிறேனா? இல்லையா? பாருங்கள்! என்று முனைய வேண்டும்.

நாம் செய்தது தவறு இல்லை என்பது உறுதி என்றால் இவர்களிடம், எதிர்வாதம் போல் செய்யாமல் அழகாக எடுத்துச் சொல்லலாம். சிலர் எதிர்த்தால் தான் அடங்குவார்கள். ஆனால், இதைக் கடைசிப் பாணமாக வைத்துக் கொள்ள வேண்டும். என்னிடமிருந்து நீங்கள் மிக அதிகமாக எதிர்பார்க்கிறீர்கள் என்பதாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

பிரியமில்லாதவர்களைப் பொறுத்தவரை அத்தகைய சூழ்நிலை ஏன் உருவானது என்பதை ஆராய வேண்டும். பழைய சம்பவங்களினால் படிந்த வெறுப்புப் படிவுகளை புதுச் சம்பவங்களினால் புதுப்பிக்காமல், அவற்றைக் குறைக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். தன்னை மதிப்பதில்லை என்றும், இவருக்கு மண்டைக் கனம் அதிகம் என்றும், நம்மைப் பற்றி இவர்களுக்கு ஓர் அபிப்பிராயம் உருவாகாத படி பார்த்துக் கொள்வதும் முக்கியம், எல்லாவற்றுக்கும் மேலாக, நம்மைக் குறை கூறுகிறவர்களை இந்த மூன்று வகையினரில் எந்த வகையினர் என்று நாம் பிரிக்கு முன்னர்-நம்மீது உண்மையில் தவறு உண்டா என்பதைச் சுய பரிசோதனை செய்து கொள்வது மிக முக்கியம்.

**லேனா தமிழ்வாணன்**




# நாங்களும் நல்லவர்களே!

நரிகள் என்றாலே ஏமாற்றுப் பேர்வழிகள் என்று பெயர் ஏற்பட்டிருந்தது.

அதனால் அந்தக் காட்டுக்குள் நரிகளைக் கண்டாலே எல்லா விலங்குகளும் கடித்து விரட்டின. எனவே நரிகள் அந்தக் காட்டை காலி செய்து கொண்டு அடுத்த காட்டிற்குச் சென்றுவிட்டன.

இரண்டு தலைமுறைகள் கடந்துவிட்டன. மூன்றாவது தலைமுறையில் பரதன் என்ற இளம் நரி இருந்தது. அதற்கு தனது மூதாதையார் கதையைக் கேட்டதும் அவமானமாக இருந்தது. இந்த அவமானத்தை துடைத்து திரும்பவும் சொந்த காட்டில் வாழ வேண்டும். நம் இனத்தையும் சொந்த காட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என எண்ணியது.

அதற்காக பழைய காட்டிற்குச் சென்று அனைத்து விலங்குகளையும் சந்தித்து பேசுவது என்று முடிவெடுத்த பரதன் பயணத்தை தொடங்கியது.

பரதனைக் கண்ட மற்ற விலங்குகள், 'புதியவன் யாரோ வருகிறான்' என்று கலங்கின. வயதான விலங்குகளோ நரியை அடையாளம் கண்டு கொண்டு, 'இவன் இங்கு எங்கே வந்தான்' என்று முறைத்தன. 'அவனிடம் யாரும் பேச வேண்டாம்' என்று இளைய தலைமுறைக்கு உத்தரவிட்டன.

"எங்கள் இனத்தை சகுனி குணம் படைத்தவர்கள், கூட இருந்தே குழி பறிப்பவர்கள். தந்திரசாலிகள் என்று யாரோ கட்டிவிட்ட கதையை நம்பலாமா? நாங்கள் மட்டும்தான் கெட்டவர்களா? மலர்களில் எல்லாமே மணமிக்கதா? மணமற்றவையும் கலந்துதான் உள்ளன. எங்களிலும் நல்லவர்களும் உண்டு" என்று வாதம் செய்து விலங்குகளிடம் நியாயம் கேட்டது.



ஆனால் எல்லா விலங்குகளும் அதை ஏற்பதாக இல்லை. 'நீ இங்கிருந்து ஓடிப் போய்விடு' என்று விரட்டின. மனம் உடைந்த நரி, மலை மீதேறி கிழே விழுந்து உயிரை விட்டுவிட முடிவெடுத்தது.

அப்போது அங்கிருந்த குயில், "நரி அண்ணே உங்கள் இனத்தின் அவப்பெயரை துடைக்க தானே புறப்பட்டு வந்தீர்? ஒரு லட்சியத்தை சுலபமாக அடைய முடியாது. விலங்குகள் போற்றும்படி செய்து அவைகளின் நம்பிக்கையைப் பெற்றால் உங்கள் குறிக்கோள் வெற்றி பெறும். மயற்சி செய்யுங்கள்" என்றது.

நீ சொல்வதும் சரிதான் என்ற நரி தற்கொலை முடிவை கைவிட்டது. புத்திசாலித்தனமாக செயல்பட முடிவெடுத்தது.

வேடர்கள் வலை விரித்திருந்ததைக் கூறி பறவைகளிடம் நன்மதிப்பைப் பெற்றது நரி. அதேபோல காலுடைந்த முயலை பத்திரமாக அதன் இருப்பிடத்திற்கு அழைத்து வந்து விட் டது. ஒரு மரத்தில் இருந்து தவறி விழுந்த குருவிக் குஞ்சை, அதன் கூட்டில் எடுத்து வைத்தது. இதைக் கண்ட தாய்ப்பறவை நரியை வாழ்த்தியது.

இப்படியே சின்னச் சின்ன உதவிகளைச் செய்து நரி கொஞ்சம் கொஞ்சமாக நற்பேர் பெற்று வந்தது.

ஒரு நாள் வேட்டைக்காரர்கள், பெரிய பள்ளம் வெட்டி இலை தழைகளால் மூடி வைப்பதை நரி பார்த்தது. அந்தப் பக்கமாக வந்த யானைக் கூட்டத்தை எச்சரிக்கை செய்து அவற்றை காப்பாற்றியது.

யானைக்கூட்டம் காட்டுக்கு ராஜாவான சிங்கத்திடம் நரி செய்த உதவியை சொல்லின. அதேபோல முயல், புறாக்கள், பறவைகளும் தங்களுக்கு நரி செய்த நன்மையைக் கூறின. இதனால் சிங்கராஜா, நரிகளை தங்கள் காட்டில் சேர்த்துக் கொள்வதாக முடிவெடுத்தது. மற்ற மிருகங்களும் அதை ஆமோதித்தன.

பரதன் சந்தோஷமாக தங்கள் வசிப்பிடத்திற்குச் சென்றது. தங்கள் குழுவினருடன் தங்கள் சொந்த காட்டுக்கு திரும்பி வந்து வாழத் தொடங்கியது.

## 10.2016 15 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1582 - கிரெகொரியின் நாட்காட்டியை பாப்பரசர் பதின்மூன்றாம் கிரெகொரி அறிமுகப்படுத்தினார்.
- 1655 - போலந்தின் லூம்லின் நகரில் இருந்த யூதர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர்.
- 1815 - பிரான்சின் நெப்போலியன் பொனபார்ட் அத்திலாந்திக் பெருங்கடலில் உள்ள புனித ஹெலெனா தீவுக்கு நாடு கடத்தப்பட்டான்.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: முதற்தடவையாக நீர்மூழ்கிக் கப்பல் (ஹன்லி) ஒன்று கப்பல் ஒன்றை மூழ்கடித்தது.
- 1878 - தோமஸ் எடிசன் தனது மின்குமிழ் தயாரிக்கும் கம்பனியை ஆரம்பித்தார்.
- 1932 - டாட்டா விமான நிறுவனம் (பின்னர் இது ஏர் இந்தியா எனப் பெயரிடப்பட்டது) தனது முதலாவது வானூர்தி சேவையை ஆரம்பித்தது.
- 1951 - மெக்சிக்கோவின் லூயி மிரமோண்டெஸ் முதற்தடவையாக கருத்தடை மாத்திரையை அறிமுகப்படுத்தினார்.
- 1970 - மெல்பேர்ண் நகரில் வெஸ்ட் கேட் பாலம் உடைந்து வீழ்ந்ததில் 35 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 1970 - அன்வர் சதாத் எகிப்தின் அதிபரானார்.
- 1987 - பிரான்ஸ், மற்றும் இங்கிலாந்தில் பெரும புயல் கிளம்பியதில் 23 பேர் கொல்லப்பட்டனர்.
- 1990 பனிப்போரைத் தணிக்க உதவியமைக்காக சோவியத் தலைவர் மிக்கைல் கொர்பச்சோவ் நோபல் பரிசு பெற்றார்.
- 1997 - நாசாவின் ஹியூஜென்ஸ் விண்ணுளவி சனி கோளை நோக்கி ஏவப்பட்டது.
- 2001 - நாசாவின் கலிலியோ விண்கலம் ஜூப்பிட்டரின் சந்திரனுக்குக் கிட்டவாக 112 மைல் தூரம் சென்றது.
- 2003 - மக்கள் சீனக் குடியரசு முதற்தடவையாக சென்ஷோ 5 விண்கலத்தில் விண்வெளி வீரர்களை அனுப்பியது.

### பிறப்புகள்

- கிமு 70 - வேர்ஜில், உரோமைப் புலவர். (இ.கிமு19)
- 1542 - ஒக்டோபர், முகலாய மன்னன் (இ. 1605)
- 1844 - பிரீட்ரிக் நீட்சே, செருமானிய மெய்யியலாளர் . (இ. 1900)
- 1881 - பி. ஜி. வுட்ஹவுஸ், ஆங்கிலேய-அமெரிக்க எழுத்தாளர் . (இ. 1975)
- 1897 - முடிகொண்டான் வெங்கடராம ஐயர், கருநாடக இசைக் கலைஞர். (செப்டம்பர் 13 1975)
- 1926 - மிஷேல் ஃபூக்கோ, பிரெஞ்சு சிந்தனையாளர் . (இ. 1984)
- 1931 - அப்துல் கலாம், இந்தியக் குடியரசுத் தலைவர்.
- 1931 - வீரமணி ஐயர், ஈழத்துக் கவிஞர். (இ.2003)
- 1934 - என். ரமணி, இந்தியப் புல்லாங்குழல் இசைக்கலைஞர் . (இ. 2015)
- 1957 - மீரா நாயர், இந்திய-அமெரிக்க நடிகை
- 1988 - மெசுத் ஓசில், செருமானிய காற்பந்தாட்ட வீரர்.

### இறப்புகள்

- 1389 - ஆறாம் அர்பன் (திருத்தந்தை). (பி.1318)
- 1917 - மாட்ட ஹரி, டச்சு நடன மாது. (பி. 1876)
- 1918 - சீரடி சாயி பாபா, இந்திய குரு .(பி. 1838)
- 1946 - எர்மன் கோரிங், செருமானிய அரசியல்வாதி. (பி. 1893)
- 1961 - சூர்யகாந்த் திரிபாதி, இந்திய எழுத்தாளர் . (பி. 1896)
- 1987 - தோமசு சங்காரா, புர்க்கினா பாசோ அரசுத்தலைவர். (பி. 1949)
- 2009 - தருமபுரம் ப. சுவாமிநாதன், திருமுறை ஓதுவார். (பி. 1923)
- 2009 - தெ. நித்தியகீர்த்தி, ஈழத்து, தமிழ் ஆத்திரேலிய எழுத்தாளர். (பி. 1946)
- 2012 - நொரடோம் சீயனூக், கம்போடியாவின் முதலாவது பிரதமர். (பி. 1922)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 60 | 50 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 70 | 120 | 70 | 120 | 100 |
| தக்காளி | 60 | 100 | 65 | 70 | 80 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 60 | 60 | 70 | 80 | 60 |
| கோவா | 80 | 100 | 70 | 80 | 80 | 100 | 80 |
| கரட் | 60 | 100 | 90 | 80-160 | 120 | 160 | 80 |
| பூசணி | 30 | 40 | 20 | 30 | 20 | 40 | 30 |
| புடோல் | 60 | 60 | 30 | 50 | 50 | 80 | 50 |
| வாழைக்காய் | 80 | 50 | 40 | 50 | 70 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 80 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 65 | 70 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 200 | 110 | 240 | 120 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 70 | 120 | 60 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 160 | 90 | 100 | 120 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 50 | 80 | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 200 | 90 | 120-160 | 100 | 160 | 120 |
| பீற்றூட் | 50 | 60 | 40 | 50 | 60 | 80 | 40 |
| கறிமிளகாய் | 100 | 200 | 100 | 160 | 200 | 140 | 100 |
| முருங்கைக்காய் | 80 | 200 | 80 | 100 | 100 | 80 | 120 |
| போஞ்சி | 180 | 200 | 150 | 180 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்பளா | 40 | 20 | 30 | 50 | 50 | 60 | 60 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 25 | 30 | 50 | 40 | 10 |
| தேசிக்காய் | 500 | 600 | 500 | 500 | 500 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-35 | 50 | 35 | 30-40 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | 170 |
| வெங்காயப்பூ | 150 | — | — | 160 | — | 160 | 180 |
| முள்ளங்கி | 60 | — | 30 | 60 | 50 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 40 | 40 | 15 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | — | 50 | — | — | — | — | — |

# 10வது அகவையில் யாழ். பல்கலை. இணைமருத்துவ விஞ்ஞான பிரிவு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடத்தின் கீழ் இயங்கி வருகின்ற இணை மருத்துவ விஞ்ஞான கற்கைகள் பிரிவு கடந்த 2006ஆம் ஓகஸ்ட் மாதம ஏழாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 10 மாணவர்களுடன்ஆரம்பிக்கப்பட்ட இப்பிரிவு தற்போது 264 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது. இவர்களில் 85 தாதியியல் மாணவர்களும் 77 மருந்தாக்கவியல் மாணவர்களும் 102 மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான மாணவர்களும் உள்ளடங்குகின்றனர்.

இணை மருத்துவ விஞ்ஞான பிரிவு, பத்தாவது அகவையில் பத்தாவது மாணவ அணியினர் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். இது வரை 56 மாணவர்கள் தங்களது பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளனர். இவர்களில் பலர் அரச வைத்தியசாலைகளிலும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு மருத்துவத் துறைசார்ந்த நிறுவனாங்களிலும் பணிபுரிகின்றனர். அத்துடன் மேற்படிப்புகளை பூர்த்தி செய்து பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும் பணியாற்றுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இணை மருத்துவ விஞ்ஞான பிரிவானது தனது பத்தாவது வருடப் பூர்த்தியை இவ்வருடம் வெகு விமர்சையாக கொண்டாடத் தீர்மானித்துள்ளது. அதன்படி பல்வேறு சமூகசேவை நிகழ்வுகளும், மாணவர் கற்றல் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறைகளும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

இந்நிகழ்வுகள் இம்மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகின. இதன் முதலாவது அங்கமாக 03,04 ஆம் திகதிகளில் தாதியியல் மற்றும் மருந்தாக்கவியல் மாணவர்களுக்கும், 10ஆம் திகதி மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான மாணவர்களுக்கும் கல்விசார் பயிற்சிப்பட்டறைகள் (Workshop) நடைபெற்றன.

அடுத்ததாக முல்லைத் தீவு விசுவமடு பிரதேச மக்களின் மருத்துவ நலன் கருதி இணைமருத்துவ விஞ்ஞான மாணவர்கள் நிறைவாழ்வு மையத்துடன் (Center for Holistic Healing) இணைந்து இன்று இலவச மருத்துவ முகாமொன்றையும் ஏற்பாடு செய்துள்ளனர்.



அடுத்த நிகழ்வாக யாழ்ப்பாண பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களுக்குமிடையிலான துடுப்பாட்ட போட்டித் தொடரொன்று இன்று தொடக்கம் 18ஆம் திகதி வரை இணை மருத்துவ விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தினால் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

சம்பிரதாயபூர்வ தொடக்க நிகழ்வுகளாக நாளை மறுதினம் இணை மருத்துவ விஞ்ஞான பிரிவு வளாகத்தில் பலூன் பறக்க விடுதல், மரநடுகை ஆகிய நிகழ்வுகளும். யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து உடற்பயிற்சியை ஊக்குவிக்கும் முகமாக சுமாா 250 இணை மருத்துவ விஞ்ஞான மாணவர்கள் 30 கி.மீ மிதிவண்டிப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர். இவர்கள் இறுதி நிகழ்வாக சுகாதார மேம்படுத்தல் நிகழ்ச்சியை பி.ப. 5 மணிக்கு யாழ் பண்ணை கடற்கரையில் நடத்தவுள்ளனர்.

இதில் வீதி நாடகம் மற்றும் சுகாதாரம் சார்ந்த உரையாடல்களும் பொது மக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதன்போது வைத்தியர் யசிதரன், பேராசிரியர் சிவபாலன், யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரத்தினம், பொது வைத்திய நிபுணர் சிவன்சுதன் ஆகியோர் பங்கேற்க இருக்கின்றனர்.

10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பத்து இடங்களில் இரத்ததான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன. குருதிக் கொடை நிகழ்வுகள் எதிர்வரும் 18 தொடக்கம் 21 ஆம் திகதி வரை யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் பல்வேறு பொது இடங்களில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இறுதி நாள் நிகழ்வுகளாக நாளை கலை, கலாசார நிகழ்ச்சிகளும், பத்தாவது ஆண்டு மலர் வெளியீடும், விரிவுரையாளர்களுக்கான கௌரவித்தல் நிகழ்வுகளும் மருத்துவபீட ஹூவர் அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இணை மருத்துவ விஞ்ஞான பிரிவின் தலைவர் திருமதி தெய்வி தபோதரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின உதவித்தலைவர் (UGC Vice Chairman), கௌரவ விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரத்தினம், மருத்துவ பீடாதிபதி சத்திரசிகிச்சை நிபுணர் எஸ்.ரவிராஜ் மற்றும் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பழைய மாணவர்கள் போன்றோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இணை மருத்துவ விஞ்ஞான மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 869

### பிக் பாபுல்





### மொனா




### பத்மராஜி





### ராஜி




### கனிஷ்டா




### றஜனிகா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையின் இனத்துவமீள் இணக்கப்பாட்டிற்கு இனத்துவேசம் களையப்பட வேண்டும்

இலங்கையில் கிட்டத்தட்ட 30 வருடங்கள் நீடித்து நடைபெற்ற பயங்கரவாதப் போர் எனப்படும் இனப்போர் முடிவடைந்து 7 வருடங்களுக்கு மேல் கடந்து விட்டது. போரினால் ஏற்பட்ட பாரிய அழிவுகளுக்கு மத்தியில் தமது சொந்த பந்தங்கள், உயிர் உடைமைகளை இழந்தும், தோட்டம் துரவுகள் வாழிடங்களை தொலைத்து, அலைந்து திரிந்து அல்லற்பட்டு நலிந்து போன தமிழ் சமூகம் தனது வேதனைகளின் விளிம்பினை எட்டிவிட்ட நிலையில் சோர்வினால் பெரிதும் களைத்துப் போய் மௌனித்திருந்தது. போருக்குப் பிற்பட்ட காலத்தில் பெரும்பாலும் தனது சொந்த சக்தியிலேயே இயல்பு நிலைக்குத் திரும்பும் பெரு முயற்சியிலேயே அது ஈடுபட்டு வருகிறது.


இம்முயற்சியின் விளைவாக கடந்த வாரமே அது தனது மனத்துயரங்களைக் களைந்து தான் ஏற்கனவே இழந்து போனதும் பெறவேண்டியதுமான உரிமைகளை பெற்றுக் கொள்ளு முகமாக தனது கோரிக்கைகளை எழுப்பும் விதத்தில் வடக்கு மாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் சபை (TPC)யினால் ஒழுங்கமைக்கப்பட்ட Ï ò ¾Ã«è BVi "எழுக தமிழ்" என்ற சுலோகத்தின் கீழ் அணிவகுத்து உரத்த குரலில் உரிமைக் குரல் எழுப்பி அரசுக்கு தனது தணியாத தாகத்தை வெளிப்படுத்திக் காட்டியிருந்தது. இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராகவுமிருக்கும் ஆர். சம்பந்தனின் தலைமையில் வழிநடத்தப்படும் பிரதானமான தமிழ் கட்சியாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து தனித்துவமான ஓர் குழுவாக இயங்கும் ஓர் பிரிவுதான் இந்த "தமிழ் மக்கள் சபை" ஆகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உட்கட்சிகளாக இணைந்திருக்கும் கட்சிகளில் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளனைத்தும் இந்த TPC குழுவின் ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்குபற்றியிருந்தன.

கொடிய போரின் நீண்டகால தாக்கங்களுக்கு தொடர்ந்து முகங்கொடுத்தபடி குண்டு வீச்சுக்களில் தேய்ந்து சொல்லொணா அத்தனை வேதனைகளையும் சுமந்தபடி போருக்குப் பிந்திய சோதனை-சவால்களில் அமுழ்ந்தி மௌனித்திருந்த எந்தவொரு சமூகமும் அடக்கு முறை அமுழ்த்தங்களிலிருந்து வெளிவந்து தமது வாழும் உரிமைகளுக்காக குரலெழுப்புவ தென்பது இயல்பான ஒன்றுமட்டுமேயாகும்.



தோற்கடிக்கவே முடியாத ஒரு ஆட்சியாக கருதப்பட்டு வந்த மகிந்த ராஜபக்ஷ ஆட்சியை முறியடித்து வெற்றி கொள்வதற்கு மைத்திரிபாலசிறிசேன- ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் முடிந்ததென்றால் அதற்கான பகுதிக் காரணம் வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழ் மக்களும் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களும் தமது வாக்குகளை அவர்களுக்கு பெருமளவில் அள்ளி வழங்கியதேயாகும். இந்த விதத்தில் தமிழர்கள் எவரும் எந்தவொரு அரச தலைவர்களையும் அறிந்தவர்களாக இல்லாவிடினும் அவர்களை அணுகி தமக்கான தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி வேண்டுகோள் விடுத்திருந்தாலும் அது அவர்களுக்கு வியப்பாகவோ அதிர்ச்சியாகவோ இருந்திருக்க முடியாது.

இவ்விதமாக "எழுக தமிழ்" பேரணி மூலம் தமிழ் மக்கள் சபையானது அரசாங்கத்திடம் பகிரங்கமாக முன்வைத்திருந்த அக்கோரிக்கைகள் ஜனநாயக ரீதியானவையும் நியாயபூர்வமானவையு மேயாகும். இக்கோரிக்கைகளுள் பிரதானமானது: இனப்பிரச்சினைகளுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதேயாகும். ஏனையவை வடக்கையும் கிழக்கையும் இணைத்து ஒரே நிர்வாக அலகாக இயக்குவது, பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் PTA பல வருடங்களாகவே தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழரசியல் கைதிகளை விடுவிப்பது, போரின் போது பாதுகாப்புப் படையினரால் கையகப்படுத்தப்பட்ட பொது மக்களது காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் மீள ஒப்படைப்பதுடன் பௌத்த மக்களே இல்லாததும் தமிழ் மக்களின் வாழிடங்களுமான இடங்களிலெல்லாம் பௌத்த விகாரைகளை கட்டி யெழுப்புவது, சிலை பிரதிஷ்டை செய்யப்படுவது போன்ற செயற்பாடுகளனைத்தையும் முடிவுக்கு கொண்டு வருவது போன்றவை. இந்தக் கோரிக்கையில் அநேகமானவை மட்டிலான அரசாங்கத்தின் பிர திபலிப்பு பல்வேறு வழிகளிலும் ஆக்கபூர்வமானதாகவே இருக்கிறது.



வடக்கிலும் கிழக்கிலும் இருக்கும் அனைத்து ஆயுதப் படைகளையும் விலக்கிக்கொள்ளும்படி விடுக்கப்பட்டிருந்த கோரிக்கை கிட்டிய எதிர்காலத்தில் நிறைவேற்றப்படும் சாத்தியமில்லாதபோதிலும் குறிப்பிட்ட ஒரு கால வரையறைக்குள் பாதுகாப்பு நிலைமைகளுக்கேற்ப அவற்றின் எண்ணிக்கையானது படிப்படியாக குறைத்துக் கொள்ளப்படலாம். உண்மையில் பாதுகாப்புப் படையினர் வடக்கிலும் கிழக்கிலும் நிரந்தரமாக அமர்ந்து கொண்டுவிட முடியாது என்பதே யதார்த்தம். பாதுகாப்புப் படையினரால் கையகப்படுத்திக் கொள்ளப்பட்ட பொதுமக்களது காணிகள் அவற்றுக்கான உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டு வருவதுடன் பாதுகாப்பு தேவைகளின் நிமித்தம் அப்படிதிரும்பவும் கையளிக்கப்படுவது சாத்தியமாகாதவிடத்து அதற்குரிய நியாயமான பெறுமதி அதன் உரிமையாளருக்கு நட்டஈடாக வழங்கப்படும்.

நீண்ட வருடகாலமாக விசாரணைகள் எதுவுமின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமென்ற பலகோரிக்கைகள், உண்ணாவிரதங்கள் போன்ற அஹிம்சைப் போராட்டங்களின் பின்னரும் தொடர்ந்தும் இழுபறி நிலையிலேயே இருந்து வருவது நாட்டின் நீதியியல் நடைமுறைச் சட்ட ஒழுங்கில் படிந்துள்ள குறையொன்றாக மட்டுமல்லாது இலங்கையின் ஒட்டுமொத்த ஜனநாயகம் மட்டில் நாட்டின் பின்னடைவையும் காட்டுவதாகவேயுள்ளது.

தமிழ் மக்கள் மீது ஆதிக்க அதிகாரம் செலுத்தும் உரிமையை மட்டுமே நிர்ப்பந்தமாக வரித்துக் கொண்டவர்களுக்கெதிராக காலம் காலமாக சுய உரிமைக் குரல் எழுப்பிவரும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டதோடு அவர்களது குரல் மேலோங்கி உரிமைப் போராட்டங்களாகி, வேகம் பெற்று, தீவிரமாகி இறுதியில் பயங்கரவாதமாக உருவெடுப்பதற்கு முன்னரே அவர்களது இக்கோரிக்கைகள் ஏற்கனவே முன்வைக்கப்பட்டவைதான். அவர்களது இத்தகைய கோரிக்கைகள் கடந்த நீண்ட காலங்களாகவே எழுந்த போதெல்லாம் அரசியல்வாதிகள் சிலருக்கு குலைநடுக்கம் ஏற்பட்டு ஒரே விதமான இனவாத உருவேறுதலும் உதறலும் கூடவே ஏற்படுவது வழக்கமாகிப் போயிருப்பதே எமது நாட்டின் துரதிர்ஷ்டமாக இருந்து வருகிறது. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனது கோரிக்கைகள் சிலவற்றுக்கு தனது எதிர்ப்பினை வெளிக்காட்டிய அமைச்சரவை அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவருமான நிமால் சிறிபால டி சில்வா அவைமட்டிலான அவரது கூற்றுக்களை விலக்கிக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க..)

# வெள்ளைப்பிரம்பும் பிரெய்ல் எழுத்துமுறையும் விழிப்புலனற்றோர்களுக்கு ஒருவரப்பிரசாதம்

விழிப்புலனற்றவர்கள் தாம் நடந்து செல்வதற்கு முற்காலத்தில் மூங்கில் தடியை அல்லது மரத்தின் சிறு தடியை உபயோகித்தனர். இதனால் பாதையில் எதிர்ப்படும் தடைகளை அவர்களால் உணரக் கூடியதாக இருந்தது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தினைமுடிவுக்குகொண்டு வருவதற்கு அமெரிக்கா ஜப்பானில் ஹிரோஷிமாவிலும், நாகசாகியிலும்அணுகுண்டை வீசியது உலக வரலாற்றில் மறக்கமுடியாத ஒருகறை படிந்த நிகழ்வாகும். இன்றும் கூட இப்பகுதிகளில் பிறக்கின்ற குழந்தைகள் பல குறைபாடுகளுடனேயே பிறப்பதை நாம் செய்திகள் மூலம் அறிகின்றோம். அவற்றுள் முக்கியமான ஒன்றாக விழிப்புலன் அற்றோரின் நிலையினையும் காண்கின்றோம்.

பார்வை இழக்கவே அதற்கான சிகிச்சையினை பெற்றுக்கொள்வதற்காக ஜப்பானில் பிரபல்யமாக இருந்த வைத்தியர் Heyit மக்கள் நாடினர். தம்மை நாடி வந்தோரில் கூடியளவிலானோரின் பார்வையை வைத்தியரால் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. வைத்தியர் Hey, மனிதர்கள்என்ற வகையில் அவர்களையும் சமூகத்தில் நடமாட வைப்பதற்கு வழி தேடினார். அதன் பிரதிபலனாக உருவானதே வெள்ளைப் பிரம்பாகும். Hey யின் சிந்தனையில் விசையும் திசையும் உதித்தது. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஆபத்து ஏற்படாத வண்ணம் நகர்வதற்கு பயன்படுத்தக் கூடிய முறையில் வெள்ளைப் பிரம்பு மகத்துவம் பெற்றது.வெள்ளைப் பிரம்பைப் பயன்படுத்துவோர் விழிப்புலனற்றோர் ஆவர். ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நகரும் போது அல்லது நடமாடும் போது அவர்களுக்கு பக்கத்துணையாக தாம் நகரும் இலக்கை நோக்கிய பயணத்திற்கும் வெள்ளைப் பிரம்பைப் பயன்படுத்துகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, விழிப்புணர்வு உள்ளோர் வெள்ளைப் பிரம்பினை பயன்படுத்தி வரும் ஒருவரை விழிப்புலனற்ற ஒருவர் என்று இனம் கண்டுகொள்ளவும், அவர்களுக்கு உதவுவதற்கும் வெள்ளைப்பிரம்பு உதவுகின்றது. இந்த இயந்திர யுகத்தில் தங்களுக்கென ஒரு துணை யாக இவ்வெள்ளைப் பிரம்பை உருவாக்கி அதனை விழிப்புலனற்றோரினது கையிலேயே துணையாகத் தந்து எவரது உதவியுமின்றி தாமாகவே நகருவதற்கு இவ்வெள்ளைப் பிரம்பு ஒரு மனிதனாகவே உதவுவது விழிப்புனைற்றோருக்குக் கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமாகும். அண்மையில் அமெரிக்காவில் நவீன இலத்திரனியல் பிரம்பு கண்டுபிடிக்கப்பட்டமையானதும் குறிப்பிடத்தக்கதாகும்.

விழிப்புலனற்றோரை கௌரவிக்கவும், அவர்கள் பற்றிய உணர்வுகளை ஏற்படுத்தவும் அத்தகையோருக்கு உதவிகளை வழங்குவதற்கும் இன்று சர்வதேச விழிப்புலனற்றோர் தினம் வெள்ளை பிரம்பு தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

உலக சுகாதார ஒழுங்கமைப்பின் புள்ளி விபர தகவலின்படி உலகில் ஏறத்தாழ 39 மில்லியன் பேர் பார்வையற்றவர்களாக இருக்கின்றனர். இதில் 82 சதவீதமானோர் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்கள். 18 சதவீதமானோர் ஐம்பது வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள். எனினும் பிறவியிலேயே குருடர்களாக பிறப்பவர்கள் மிகச் சிலரே. எனினும் பலர் தம் குழந்தை பருவத்தில் தவிர்க்கப்படக் கூடிய காரணிகளால் பார்வையை இழக்கின்றனர். பிள்ளைகளில் போசணைக் குறைபாடே பார்வைக் குறைபாட்டிற்கான பிரதான காரணியாக இருக்கின்றது. வளர்ந்தவர்களில் நீரிழிவு நோய். உயர் குருதியமுக்கம், விழித்திரை மையத்தின் சிதைவு என்பன குருட்டுத்தன்மையை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளாகும்.

முன்பொரு காலத்தில் பார்வை இழந்தவர்கள் வாழத் தகுதியற்றவர்கள் என்று கருதப்பட்டனர். அந்தக் காலம் போய்விட்டது. கண்பார்வை இழந்தவர்கள் பிரெய்ல் முறையின் மூலம் இப்போது எல்லோரையும் போல படிக்க முடியும். இதைக் கண்டுபிடித்தவர் லூயிஸ் பிரெய்ல். பிரான்ஸ் நாட்டை சேர்ந்த லூயிஸ் பிரெய்ல் நான்கு வயது சிறுவனாக இருந்த போது செருப்பு தைக்கும் தனது தந்தையின் பெரிய ஊசியை வைத்து விளையாடிக் கொண்டிருந்த போது அந்த ஊசி கண்ணை குத்தி விட்டது.அந்தக் கண்ணில் ஏற்பட்ட தொற்று சில மாதங்கள் கழிந்து அடுத்த கண்ணிற்கு பரவி முழுப் பார்வையையும் இழந்து விட்டார். அவருக்கு பார்வை போய் விட்டாலும் படிக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. கண்பார்வை இழந்தவர்கள் படிக்க ஏதாவதொரு வழியைக்கண்டுபிடிக்க வேண்டும் என்று யோசித்தார். ஒருநாள் போர்வீரர் ஒருவரிடம் பேசியபோது ஒரு தகவல் கிடைத்தது.

போரின்போது தகவல்களை பரிமாற்றம் செய்யும் முறை பற்றி அவர் விளக்கினார். அந்த போர் வீரர் விளக்கொளியை ஏற்றினால் எதிரிகள் இருப்பிடத்தை அறிந்து விடுவர். இருட்டில் தொட்டுப் பார்த்து படித்தறியும் முறையில் குறி யீட்டு எழுத்துகளை அனுப்பு வோம் என்று அந்த போர் வீரர் கூறியதை கேட்ட லூயிஸ் பிரெய்ல் யோசிக்கலானார். அவருக்கு எந்த ஊசி தன் கண்ணை குத்தியதோ அதே ஊசியைப் பயன்படுத்தி ஒரு தாளை எடுத்து அதன் மீது தாளில் துளைகளைப் போட ஆரம்பித்தார்.

நெருக்கமாக ஆறு துளைகளை இட்டார். இன்னொரு விதமாக தொட்டு பார்த்தார். கடதாசித்தாளில் ஆறு துளையிட்டு மறுபக்க மாக தடவிப் பார்த்தார்.

பின் புறத்திலிருந்து ஊசி போன்ற எழுதுகருவியினால் குத்துவதன் மூலம் குத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. எதிர்த் திசையிலிருந்தே எழுத்துக்கள் குத்தப்படுகின்றன. இந்த அமைப்பில் புள்ளிகளை வெவ்வேறு விதமாக துளையிடுவதன் மூலம் ஆங்கில எழுத்துகளையும் அடிக்கடி பயன்படுத்தும் வார்த்தைகளையும் உண்டாக்கினார்.

1929 இல் விழிப்புலனற்றோருக்கான எழுத்து முறையொன்றை லூயிஸ் பிரெய்ல் கண்டுபிடித்தார். பிரெயில் எழுத்தானது விழிப்புனைற்றோருக்கு கல்வியை தொடர்வதற்கு வரப் பிரசாதமாக அமைகிறது.

விழிப்புனைற்றோர் பிரெயில் என்ற எழுத்து முறை மூலம் இலட்சக்கணக்கான விழிப்புலனற்றோர் படித்து பட்டதாரிகளாகவும் கலாநிதிகளாகவும் பேராசிரியர்களாகவும் மேதைகளாகவும் நாவலாசிரியர்களாகவும் இசையமைப்பாளர்களாகவும் முன்னேறியுள்ளனர்.

இயற்கையாகவோ அன்றேல் விபத்துக்கள், கவனயீனங்கள், அறியாமைகள் காரணமாகவோ ஏற்படக் கூடிய பார்வை குறைபாட்டை மனிதன் என்ற வகையில் எம்மால் குறைவான நிலையில் மதிப்பிடுவது தவறாகும். விழிப்புலனற்றோர்களும் மனிதப் பிறவிகளே. அவர்களுக்கும் சமூகத்தில் சமவுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே மனிதாபிமானம்.

சமூகத்தில் அவர்களாலும் உயர்ந்த நிலைக்கு வரமுடியும். சமூகத்தில் அவர்கள் குறை பிறவிகள் அல்லர் போன்ற எண்ணக் கருக்களை விதைப்பது தொடர்பாக தேசிய, சர்வதேச ரீதியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்காக வேண்டிய பல நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதையும் அவதானிக்கிறோம்.

விழிப்புலனில் ஏற்படக் கூடிய குறைபாடு காரணமாக பார்வையை இழந்துள்ளோரை கௌரவிக்கவும் அவர்கள் பற்றிய உணர்வுகளை ஏற்படுத்தவும் அத்தகை யோருக்கு உதவிகளை வழங்குவதற்கும் வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

கண்பார்வையற்ற விழிப்புலனற்ற மானிடர்பால் எமது கவனம் ஈர்க்கப்பட வேண்டிய நல்லதோர் வாய்ப்பினை உலகுக்கு துலாம்பரமாக வெளிச்சமிட்டு காட்டுவதற்காகவே இவ்வெள்ளைப் பிரம்பு தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது. இதன் தாற்பரியத்தை உணராதிருப்பது சற்றுக் கவலைக்குரியதாயினும் இன்றைய நிலையில் வெள்ளைப் பிரம்பு தினம் சமூக ரீதி யில் மேலெடுக்கப்பட்டு அனைவரினதும் கவனத்தை ஈர்த்து வருவதும் அவதானிக்கத்தக்கதொன்றாகும்.

ஒவ்வொரு நாட்டிலும் அரசு மட்டுமின்றியும் அரச சார்பற்ற நிறுவனங்களும் விழிப்புலனற்றோர்களின் நலனில் அக்கறை காட்டி வருகின்றன. போக்குவரத்து வசதிகள், சலுகைகள், விழிப்புனைற்றோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு, புனர்வாழ்வு, கல்வியில் சமவாய்ப்பு, தொழில் வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும்.

விழிப்புலன் அற்றோர்கள் விஞ்ஞானிகளாகவும் அரசியல்வாதிகளாகவும் மேதைகளாகவும் இருந்துள்ளனர்.

விழிப்புனைற்றோர்களை சமுதாயத்தினர் ஏனையவர்களைப் போன்று அங்கீகரித்து சமத்துவம் கொடுப்பதன் மூலம் விழிப்புலனற்றோர்களிடத்தில் தன்னம்பிக்கையையும் தனித்திறன்களையும் வளர்க்க முடியும் என்பதை சமுதாயம் உணர வேண்டும்.

அல்ஹாஜ்
எம்.எப்.எம்.இக்பால்
(ஜே.பி)
யாழ்ப்பாணம்



# செய்தித்துளிகள்

## சமாதான நீதவானாக நியமனம்

சிவப்பிரகாசம் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன் அகில இலங்கை சமாதான நீதவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப் பட்டுள்ளார். அண்மையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

அம்பாறைமாவட்ட தமிழ்மன்றம், இந்து இளைஞர் பேரவை ஆகியவற்றின் தலைவராகவும் திருகோணமலை மாவட்ட திவ்விஜ ஜீவன சங்கம், சைவ அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் பதவி வகித்தவர்.ஓய்வுநிலை கமத்தொழில் சேவைப்பெரும்பாக உத்தியோகத்தராவார். தற்போது பனை அபிவிருத்திச் சபையின் இயக்குநர் சபை பணிப்பாளராக பதவி வகித்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

## நினைவு நாளும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மகாஜனக் கல்லூரியின் நவமகாஜன சிற்பி ஐயரத்தினம் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் இடம்பெறும். (இ-7)

## அறிவுத் திருக்கோவில் இரண்டாம் நாள்

(யாழ்ப்பாணம்)

யாழ். அறிவுலக சங்கமத்தின் அறிவுத் திருக்கோவில் திறப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு நாளை 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இல. 81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## நிறுவுநர் நினைவு நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் கு.விமலன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## புரட்டாதி மாத நடேசர் அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து சமயப் பேரவை நடத்தும் ஸ்ரீசிவகாம சுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜர் கோயில்,புரட்டாதி மாத நடேசர் அபிஷேக விஞ்ஞாபனம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறும்.

பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை பண்ணிசைக் கச்சேரியும் நடைபெறும். (இ-7)

## உளவியல் கண்காட்சி

"உள முதலுதவி மூலம் உளநலமான உலகம்" எனும் கருப்பொருளில் இவ்வருட உளநல தின உளவியல் கண்காட்சி எதிர்வரும் 18,19 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை யாழ்.பல்கலைக்கழக புதிய கலைப்பீட கட்டடத் தொகுதியில் இடம்பெறும். (இ-7)

## புத்தகப் பூங்கா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகமும் அன்றா புத்தகசாலையும் இணைந்து நடத்தும் புத்தகப் பூங்கா நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை கொக்குவில் பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபை செயலாளர் திருமதி. தி.அன்னலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம், யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் ஆ.நித்திலவர்ணன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி லதா உமாசங்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## இலவச நடன வகுப்புக்கள் கோப்பாயில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இலவச நடன வகுப்புக்கள் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் வாரத்தில் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணிவரை நடைபெற்று வருகின்றது என கலாசார உத்தியோகத்தர் எஸ். ஜோன்சன் அறிவித்துள்ளார்.

இப் பயிற்சியில் சேர விரும்பும் மாணவர்கள், கலைஞர்கள் ஆகியோரை கோப்பாய் பிரதேச கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பயிற்சியில் இணைந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10-134)

# இலங்கையின் இனத்துவமீள் இனக்கப்பாட்டிற்கு...

முதலமைச்சர் என்ற ரீதியில் அவருக்கு மக்களால் வழங்கப்பட்ட தேர்தல் ஆணை வரையறைகளையுங் கடந்து இன ரீதியான பதற்றங்களை தூண்டும் விதத்திலும் வடக்கிலும் தெற்கிலுமுள்ள தீவிரவாதிகளுக்கு ஊக்கமளித்து உசுப்பேற்றுவதாகவுமே அவரது கூற்றுக்கள் அமைந்திருப்பதாக அவர் கூறுகிறார்.

இந்த அணுகு முறையானது தமிழர், சிங்களவர்கள் மத்தியில் மீள் இணக்கப்பாட்டினை ஏற்படுத்தாது என்ற விதத்தில் இது தவறான ஒன்றென்பது நிச்சயம். விக்னேஸ்வரனும் ஏனையோரும் என்ன கூறுகிறார்கள் என்பதை நேர்மையாகவும் உண்மையாகவும் நன்கு ஆராய்ந்து பார்ப்பதுடன் அவை சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்களும் முதிர்ச்சியான கண்ணோட்டத்தில் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். அடக்குமுறைக்குட்பட்ட விதமாக நீண்ட நெடுங்காலம் அடக்கி வைக்கப்பட்ட மக்களது மனித உணர்வுகளின் கொந்தளிப்பான வாய்மூல வெளிப்பாடு கருத்திற் கொள்ளப்படுவதுடன் ஆற அமர சிந்தித்து கருத்துப் பரிமாற அனுமதிக்கவும் வேண்டும். அனைத்தும் அந்தந்தப்படியேதான் நடை முறைப்படுத்த வேண்டு மென்பதல்ல.

அவசியமான இக்கோரிக்கைகளையும் புலிப் பயங்கரவாதிகளது தனி நாட்டுக் கோரிக்கையாகவே தெற்கிலுள்ள சிங்களத் தீவிரவாதிகள் தமது சொந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தக் கூடும் என்ற விதமான ஓர் அச்ச உணர்வே அநேகமாக அமைச்சர்

> இந்த கண்ணியவான்களின் சரியான செயற்பாடு எமது நாட்டை நிச்சயம் சரியான பாதையில் கொண்டு செலுத்தும் என்று எதிர்பார்ப்போமாக!

சில்வாவுக்கு இருந்திருக்கக்கூடும். தீவிரவாதிகள் இப்படித்தான் செயற்படுவார்கள் என்பதிலும் சந்தேகத்திற்கு இடமில்லை என்பதுடன் சில்வா போன்ற அரசியல்வாதிகளுக்கு தீவிரவாதிகளின் போக்கு பிழையானதென மக்களுக்குப் புரியவைப்பது மிகவும் சவாலான ஒருவிடயமேயாகும்.

தேசாபிமானிகள்-தேசபக்தர்கள்போன்று வேடம் தரித்த இந்த மனநோய் கொண்ட போலிகளின் செயற்பாடுகள் காரணமாக பொருளாதார அழிவை நோக்கிய படுகுழியின் பக்கமாக சாய்ந்து கொண்டிருக்கும் நாட்டினை சரியான பாதையில் நிறுத்தி நிலைப்படுத்தும் அரசினது சவாலான முயற்சிகளின் மத்தியிலும் மக்களிடையே பிரபல்யமான சிரேஷ்ட அரசியல்வாதிகளே கூட நாட்டின் நலன்களைப் புறக்கணித்து தமது சொந்த நலன்களையே முன்னிலைப்படுத்தும் விதத்தில் இனக்கலவர அச்சுறுத்தல்கள் மூலம் அரசாங்கங்களை மிரட்டி பணியவைக்கும் முயற்சிகள் மேற்கொள்வது காலம் காலமாக நடந்து வருபவைதான். இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கட்டமொன்றை எட்டும் போதெல்லாம் இதுவே இடம்பெற்று நாட்டிற்கும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தி வருகின்றது. அதாவது "நாய் தனது வாலை ஆட்டாமல் வாலே நாயை நினைத்தவாறெல்லாம் ஆட்டுவது" போன்ற நிலையே இதுவாகும். முரண்பாடான இந்த நிலை தொடர்ந்தும்



நீடிக்குமானால் பாதிப்புக்குள்ளாகிக் கொண்டேயிருக்கும் மக்கள் மத்தியில் மற்றுமொரு "சூரியதெய்வம்" உருவாவது தவிர்க்கமுடியாததாகி விடும் என்பதுடன் நாம் எதிர்பாராத நேரத்தில் அதனது துப்பாக்கி முனை எமது தலைகளையே நோக்கி உசாராகிவிடவும் கூடும்.

இலங்கையின் பிரதான இனங்கள் இரண்டிற்கும் இடையில் மீள் இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்கும் சிநேகபூர்வ உறவுகளை வளர்த்தெடுப்பதற்குமான பரிந்துரைகள் பலவும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இது சம்பந்தமாக இருக்கக்கூடிய சட்ட திட்டங்கள் அனைத்தையும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டியது அரசியல் தலைவர்களது கடமை என்பதுடன் அவ்விதம் செயற்படுவதற்கான துணிச்சல் அல்லது கடப்பாட்டுணர்வு அவர்களிடம் இல்லையெனில் இதுமட்டில் இயற்றப்பட்ட அத்தனை சட்ட ஒழுங்குகளும் அச்சேற்றப்பட்ட தாள்களின் வெறும் கடதாசிப் பெறுமதிக்குக்கூட நிகராகிவிடமுடியாது. அதிகாரப் பசி- வெறி கொண்ட அரசியல்வாதிகள் பலரும் இனக்குரோத உணர்வுகளை ஊட்டுவதன்மூலம் மக்களிடையே இனவாதத்தை ஊக்குவித்து அதனைத் தமது சொந்த நலன்களுக்கு பயன்படுத்துவதுடன் தமது அரசியல் வெற்றிக்கான துருப்புச் சீட்டாகவும் பயன்படுத்துவதற்குமென ஆவேசமாக செயற்பட்டுக் கொண்டுமிருக்கின்றனர். அப்படிப்பட்ட வெறுக்கத்தக்க நபர்கள் எம்முடன் கூடவே இருந்து கொண்டிருப்பதுடன் எதிர்காலத்திலும் கூட இருந்துகொண்டே தானிருப்பர். இப்படிப்பட்ட மோசடி அரசியல் கும்பல்களிலும் பார்க்க எண்ணிக்கையில் எப்போதுமே கூடுதல் பெரும்பான்மையாக உள்ள கண்ணியமான மதிப்புமிக்க அரசியல்வாதிகளிலேயே எமது நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது! எப்போதும் சரியானபடி சிந்தித்து சரியானதையே செய்பவர்கள் இவர்களே!

இந்தக் கண்ணியவான்களின் சரியான செயற்பாடு எமது நாட்டை நிச்சயம் சரியான பாதையில் கொண்டு செலுத்தும் என்று எதிர்பார்ப்போமாக.

தமிழில்: யோகர்

# தமிழ் சினிமா வரலாறு

## வாள் வீச்சில் புகழ் பெற்ற ரஞ்சன் 275

சந்திரலோக படத்தில் வரும் கத்திச்சண்டைக் காட்சியில் பிரமாதமாக நடித்த ரஞ்சன் அகில இந்தியப் புகழ் பெற்றார். இந்திப்பட உலகில் புகுந்து வீரதீரச் செயல்கள் நிறைந்த படங்களில் நடித்து சாதனை படைத்தார்.

**முதல் படம்**

ரஞ்சனின் சொந்த ஊர் திருச்சியை அடுத்த ஸ்ரீரங்கம். இயற்பெயர் வெங்கட ரமணசர்மா.

1941ஆம் ஆண்டு வெளிவந்த ரிஷ்ய சிருங்கர் என்ற படத்தின் மூலம் ரஞ்சன் திரை உலகுக்கு அறிமுகம் ஆனார். அந்தப் படத்தில் ரஞ்சனின் ஜோடியாக நடித்தவர் வைஜயந்திமாலாவின் தாயார் வசுந்தராதேவி.

**மங்கம்மா சபதம்**

1943இல் ஜெமினி எஸ். எஸ். வாசன் தயாரித்த மங்கம்மா சபதம் படத்தின் மூலம் ரஞ்சன் பிரபலமானார். இதில் அவருக்குஇரட்டை வேடம்.

ரஞ்சனின் ஜோடி வசுந்தராதேவி. என்.எஸ். கிருஷ்ணன், டி.ஏ.மதுரம் ஆகியோரும் நடித்தனர். படம் சுப்பர்ஹிட்.

எம்.ஜி.ஆருடன் 1945இல் சாலிவாகனன் படத்தில் ரஞ்சன் கதாநாயகனாகவும் எம்.ஜி.ஆர். வில்லனாகவும் நடித்தனர். எம்.ஜி.ஆர். சிறிய வேடங்களில் நடித்து வந்த கால கட்டம் அது. கதைப்படி விக்ரமாதித்தனுக்கும் (எம்.ஜி.ஆர்.), சாலிவாகனனுக்கும் (ரஞ்சன்) கத்திச் சண்டை நடக்கும். அதில் விக்ரமாதித்தன் கொல்லப்படுவார்.

உண்மையாகவே எம்.ஜி.ஆரும் ரஞ்சனும் கத்திச்சண்டையில் வல்லவர்கள். படப்பிடிப்பின் போது இருவரும் ஆக்ரோஷமாக கத்திச் சண்டைசெய்தார்கள்.

வேண்டும் என்றே என்னை ராமச்சந்திரன் தாக்குகிறார் என்று ரஞ்சன் புகார் செய்ய அதே புகாரை எம்.ஜி.ஆரும் கூறினார்.

டைரக்டரும் மற்றவர்களும் தலையிட்டு சமாதானம் செய்தார்கள். அந்தப்படத்தின் கதாநாயகி கே.எல்.வி. வசந்தா.

**சந்திரலேகா**

1948இல் வெளிவந்த ஜெமினியின் பிரமாண்ட தயாரிப்பான சந்திரலேகாவில் உம்.கே. ராதாவுடன் இணைந்து நடித்தார் ரஞ்சன். கதாநாயகனுக்கு நிகரான முக்கிய வேடம் ரஞ்சனுக்கு. அவர் பிரமாதமாக நடித்தார்.

படத்தின் இறுதிக் காட்சியில் ரஞ்சனுக்கும் எம்.கே. ராதாவுக்கும் நடக்கும் கத்திச்சண்டை மெய்சிலிர்க்கச் செய்வதாகும்.

**நிஷான்**

இதையடுத்து ஜெமினி தயாரித்த அபூர்வ சகோதரர்கள் படத்தில் எம்.கே.ராதா இரட்டை வேடத்தில் நடித்தார். இந்தப்படம் நிஷான் என்ற பெயரில் இந்தியில் தயாரிக்கப்பட்டது.

தமிழில் ராதா நடித்த இரட்டை வேடத்தில் இந்தியில் ரஞ்சன் நடித்தார். படம் சுப்பர்ஹிட். இதே சமயத்தில் சந்திரலேகா இந்தியில் வெளியிடப்பட்டது. அந்தப் படமும் மகத்தான வெற்றி பெற்றது. ரஞ்சனின் கத்திச் சண்டை, வடநாட்டு ரசிகர்களை கவர்ந்ததால் ரஞ்சன் பம்பாயில் (இன்றைய மும்பை) குடியேறி இந்திப்படங்களில் நடித்தார்.



"மங்களா" (இந்தி மங்கம்மா சபதம்) படத்தில் பானுமதியுடன்.

பிறகு சின்னப்பதேவர் தயாரித்த நீல மலைத் திருடன் படத்திலும் வேறு சில தமிழ்ப்படங்களிலும் நடித்தார். அவர் கடைசியாக நடித்த படம் சுப்டன் ரஞ்சன்.

**பைலட்**

ரஞ்சன் விமானம் ஓட்டக் கற்றவர். இசை, நடனம் ஆகிய கலைகளில் படித்து பட்டம் பெற்றவர். தமிழில் நாட்டியம் என்ற பத்திரிகையை நடத்தியவர்.

**அமெரிக்காவில்...**

ரஞ்சனின் மனைவி ஒரு வைத்தியர். இவர்களுக்கு குழந்தைகள் இல்லை.ரஞ்சன் தனது மனைவியுடன் அமெரிக்காவுக்கு சென்று அங்கேயே நிரந்தரமாக குடியேறினார்.1983 ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் திகதி ரஞ்சன் நியு ஜெர்சி நகரில் உள்ள ஒரு கோட்டலில் தங்கி இருந்த போது அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. கோட்டலிலேயே அவர் மரணம் அடைந்தார். அப்போது அவருக்கு வயது 65.

(தொடரும்)

சிறிய விடயத்தில் நியாயம் தவறுபவன் பெரிய விடயத்திலும் தொடருவான்.

– இயேசுநாதர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தானாடா விட்டாலும் தசையாடும் என்பார்களே அதுதான் இதுவோ?

பாண்டவர்கள் மீது மனதளவில் ஆதரவு இருந்தாலும் துரியோதனன் பக்கமே பீஷ்மரின் விருப்பம் இருந்தது என்பதை முற்றுமுழுதாக மறுதலித்து விட முடியாது. கௌரவர் ஆட்சியில் படைத் தளபதியாக இருந்ததால்தான் அத்தகையதொரு நிலைப்பாடு என்று நினைப்பது தவறு.

ஏனெனில் பாண்டுவின் ஆட்சியிலும் பீஷ்மர் தான் படைத் தளபதி. எனவே கௌரவர் ஆட்சியில் இருந்தபடியால் அவர்கள் பக்கம் நின்று போர் புரிவது தர்மம் எனக் கூறுவதெல்லாம் ஒரு சாட்டுப்போக்குத்தான்.

இதற்கு கிருஷ்ண பரமாத்மா நல்ல உதாரணம் குருசேத்திரப் போருக்கு முன்னதாக கிருஷ்ண பரமாத்மாவிடம் துரியோதனனும் அருச்சுனனும் உதவி கேட்டுச் செல்கின்றனர். இருவருக்கும் கண்ண பரமாத்மாவை தம் பக்கம் இழுப்பதுதான் நோக்கம்.

இருந்தும் பார்த்தனுக்கு தான் சாரதியாக இருந்தால் மட்டுமே போர் வெற்றி. பாண்டவர்களைக்காக்க முடியும் என்பதால் கிருஷ்ணன் தன்னை பாண்டவர்களுக்கும் தன் ஆயுதங்களை கௌரவ சேனைகளுக்குமாக ஆக்கினான்.

பீஷ்மரும் கௌரவர் பக்கம் நின்றதன் அடிப்படையில் கௌரவத் தலைவனான துரியோதனன் மீது பீஷ்மருக்கு பாசம் இருந்தது என்பது தவிர்க்க முடியாத உண்மை.

இதை நாம் சொல்லும் போது பலர் அதை மறுக்கவும் கூடும். சரி இதற்குத்தான் நீங்கள் உடன்பாடு இல்லை என்றால் துரியோதனன் தந்தை திருதிராட்டினன் மீது பீஷ்மர் கொண்ட இரக்கம் காரணமாகக்கூட துரியோதனன் பக்கம் நின்றார் என்று கூறிக்கொள்ளலாம்.

சரி இப்போது துரியோதனன் பக்கம் நின்ற பீஷ்மர் பற்றிய விடயங்கள் எல்லாம் எதற்கென்று நீங்கள் முணுமுணுப்பதில் நியாயம் இருக்கவே செய்கிறது.

எனினும் இதைச் சொல்வதற்கு சில காரணங்கள் உண்டென்பதை மட்டும் இப்பேது கூறிக்கொள்ள முடியும். பீஷ்மர் தர்மம் புரிந்தவர்; பிதாமகர் என்று போற்றப்படுபவர். இருந்தும் அவர் கூட அதர்மத்தின் பக்கம் நின்று அதர்மத்தை வெல்ல வைப்பதற்காக போராடினார் என்பதும் உண்மை.

இங்குதான் நல்லவர்கள்கூட அதர்மத்தின் பக்கம் நிற்கின்ற சந்தர்ப்பங்கள் உண்டென்ற தத்துவம் தெரிய வருகின்றது.

ஆம் நம் நாட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் நல்லவர் என்பது ஏற்புடையது. அதனால்தான் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதி ஆக்கினர்.

தமிழ் மக்கள் வாக்களிக்காமல் இருந்திருந்தால் அவரின் கதை என்னவாக இருந்திருக்கும் என்பதை மைத்திரிபாலசிறிசேனவேதன்வாயால்கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் தோற்றிருந்தால் பேராபத்தை சந்தித்திருக்கக்கூடிய மைத்திரிபால சிறிசேனவை காப்பாற்றியவர்கள் தமிழ் மக்கள் என்றால், அந்த மக்கள் தங்கள் உரிமைசார் விடயத்தில் எவ்வளவு எதிர்பார்ப்புகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கொண்டிருப்பார்கள் என்பது வெளிப்படையானது.

இருந்தும் முன்னைய ஆட்சியில் நடந்த ஊழல் தொடர்பில் நடைபெறும் விசாரணைகள்; அந்த விசாரணைகளின் அடிப்படையில் இடம்பெறும் கைதுகள் தமக்கு மனவருத்தத்தை தருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கிறார் எனில் அவரும் பீஷ்மராகவே இருக்கிறார் என்பது தெரிகிறதல்லவா?

ஊழல் விசாரணைகளின் பொருட்டு இடம்பெறும் கைதுகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு துன்பத்தை கொடுக்குமாக இருந்தால்; இந்த நாட்டில் நீதி நிலைநாட்டப்படும் என்பது கேள்விக்குரியதாகி உள்ளது.

அதிலும் குறிப்பாக போர்க்குற்ற விசாரணை என்ற விடயத்தில் தமிழ் மக்களுக்கு நீதி அறவே கிடைக்க மாட்டாது என்பது சர்வநிச்சயமாகி விட்டது.

சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறிவரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்நாட்டு விசாரணையே இடம்பெறும் எனத் தெரிவித்து வருகிறார்.

அப்படியானால் உள்நாட்டு விசாரணையில் யாரையேனும் கைது செய்து விசாரிப்பது என்ற நடைமுறைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இம்மியும் அனுமதிதர மாட்டார் என்பது உண்மை.

அவ்வாறு கைது செய்யப்பட்டால் அது கடுமையாக பாதிக்கும் அல்லவா? ஆகையால் போர்க்குற்றம் தொடர்பில் உள்நாட்டு விசாரணை நடைபெறும். ஆனால் கைதுகளோ தண்டனைகளோ எதுவும் நடக்கமாட்டாது என்பது தெரிகிறது.

அட! தானாடா விட்டாலும் தன் தசையாடும் என்பார்களே அதுதான் இதுவோ? எதுவாக இருந்தாலும் வன்னிப் போரில் அரசு வெற்றிச் செய்தியை பெற்றுக் கொள்ளும் போது பதில் பாதுகாப்பு அமைச்சர் இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பதை நாம் மறந்து போனாலும் அவர் மறக்கமுடியாதல்லவா? அது தான் இப்படியா?

# அரசியல் கைதிகளை விடுதலை செய்!

வடக்கு மாகாண இணைப்பாளர்களுக்கான விசேட கூட்டம் அண்மையில் நல்லூர் செட்டித்தெருவிலுள்ள சங்கத்தின் யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் இணைப்பாளர் ஆர்.ராகவனின் அலுவலக மண்டபத்தில் தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

நல்லாட்சி அரசிற்கு நாம் வழங்கி வரும் ஆதரவினை மீள் பரிசீலனை செய்தல், வடக்கு மாகாணசபையின் தற்போதைய அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். வட மாகாண முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் மிக விரைவாக மேற்கொள்ள வேண்டும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் கோரிக்கைகளை நிராகரிக்கும் உயர் அதிகாரிகளை இடமாற்றம் செய்தல் வேண்டும்.

ஆளுநரின் தேவையற்ற மாகாணசபை நிர்வாக செயற்பாட்டிற்கு கண்டனம் தெரிவித்தல் வடமாகாணத்தில் ஊழலில் ஈடுபடும் அதிகாரிகளை மிகவும் கண்டித்தலும் உடனடி இடமாற்றம் செய்யப்பட வேண்டும்.

முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது உள்ளக வாரியாகத் தெரிவு செய்யும் அலுவலர்களுக்கு தடை காண் பரீட்சையை இரத்துச் செய்தல். பலவருடகாலமாக சிறையில் வாழும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு கோரல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் அறிவித்துள்ளார். (இ

# தாய்லாந்து மன்னருக்கு ஜனாதிபதி அனுதாபம்

தாய்லாந்து மன்னர் பூமிபால் அதுல்ய தேஜ் மறைவையறிந்து ஆழ்ந்த கவலையடைகிறேன். இந்த கவலையான சந்தர்ப்பத்தில் என்னுடைய அரசாங்கத்தினதும் இலங்கை மக்களினதும் அனுதாபங்களை தாய்லாந்து அரசாங்க த்திற்கும் மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தமது நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் பல தசாப்தங்களாக அவர் மேற்கொண்ட தன்னலமற்ற பணிகளுக்காக மன்னர் அதுல்ய தேஜ் என்றும் நினைவுகூரப்படுவார்.

மன்னர் அதுல்ய தேஜ் தூரநோக்குடைய தன்னிறைவுபொருளாதாரக்கொள்கை தாய்லாந்தை உலகப் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய இடத்திற்குக் கொண்டுவந்ததுடன், வறுமையை ஒழித்துக்கட்டுவதற்கும் பாரிய பங்களிப்புச் செய்தது. இது பொருளாதார சுபீட்சத்தை நோக்கி நாட்டைக் கொண்டு செல்வதற்கான ஒரு தலைவரின் அர்ப்பணிப்புமிக்க முயற்சியாகும்.

இலங்கைக்கும் தாய்லாந்துக்குமிடையிலான இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்துவதற்கு தாய்லாந்து மன்னர் வழங்கிய பெறுமதியான பங்களிப்பை நான் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

தாய்லாந்து மக்களினதும் தேசத்தினதும் நன்மைக்காக பரோபகார சிந்தனையுடன் தமது வாழ்வை அர்ப்பணித்த மன்னரின் மறைவு குறித்த தாய்லாந்து மக்களின் கவலைகளில் இலங்கையர்களான நாமும் இணைந்து கொள்கிறோம்.

மன்னர் அதுல்யதேஜ் தனது நாட்டிலும் பிராந்தியத்திலும் சர்வதேச ரீதியாகவும் சமாதானம், ஸ்திரத்தன்மை மற்றும் ஐக்கியத்தின் சின்னமாகத் திகழ்ந்தார். அவருடைய ஆத்மா சாந்தியடைய எனது பிரார்த்தனைகள் என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## விண்ணப்பப்படிவங்கள் மீளப் பெறவுள்ளன

2016/2017 பெரும் போகத்திற்கான உரமானிய பணத்தை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் சில மாதங்களாக வழங்கப்பட்டு வந்தன. அவ் விண்ணப்பப்படிவங்களை மீளப் பெறுவதற்கான இறுதித் திகதியாக 15 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே கரவெட்டி கமநல சேவை நிலையப் பிரிவுக்குட்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (இ-60)

## முன்னெச்சரிக்கையும் ஒத்திகைப் பயிற்சியும்

கோப்பாய் பிரதேச செயலக பிரிவிலுள்ள கிராம சேவையாளர் பிரிவில் (ஜே/283 இடைக்காடு பகுதியில்) நாளை மறுதினம் பிற்பகல் 2.30 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும். இது தொடர்பில் பொது மக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ

## தாலப்புதுமை அறிய வருக

தாலத்தின் மூலமதை தரணிக்கு எடுத்தியம்பும்
ஞாலத்தில் புதுமை புகும் தாலம் அதன் புகழினை
இருபது முதல் இருபத்தி மூன்றுவரை எடுத்தியம்பு
கண்காட்சி கருத்தரங்குடன் போட்டிகள் பலவுக்கும்
யாழ். மத்திய கல்லூரி வளாகத்தை வந்தடையுங்கள்

பூமியில் பனையின் பயன்படு வித்தக புத்தெழில் நிறை
காவியங்கள் கூறும் பனைக் கருவறை பொக்கிசங்கள்
ஓவியங்களாகவும், உருப்பெறு பொருட்கள் நிறையவும்
ஊட்டச் சத்துமிகு உணவுகள் பழைமையில் புதுமைபுகுத்தி
மேவிடும் காட்சிக் கூடங்கள் பார்க்க ஒன்றாய் கூடுங்கள்

வரம் இன்று எமது மூல வளமாகி திறன்மிகு உற்பத்தியாய்
மக்கள் உடல்நலம் உறுதியாய் நோயின்றி திகழ்ந்திட
ஆய்வரங்கில் அமர்ந்து அறிவுசால் கருத்துக்கள் செவியேற்றி
பார்வைக்கு பனையின் படைப்புக்களை கண்ணுற்றபின்
ஓய்வாய் உட்கார்ந்து பனையுணவை சுவைத்து மகிழுங்கள்

பள்ளியில் பாடமாய் பயிலும் மாணவரே வருக வருக
தள்ளி நிற்காமல் தாலத்தின் பெருமை அறிய வருக
பனையில் புதுமைப் படைப்பினை பார்த்து ஏகிட
அனைத்து பெரு மக்கள்களும் திரண்டு வருக
அழைக்கின்றோம் ஆதரவு அளித்து அறிந்து மகிழ்க

திருமதி. த. பவானி,
முகாமைத்துவ உதவியாளர்,
விரிவாக்கற்பகுதி,
பனை அபிவிருத்திச் சபை

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து 6மணி வரை யாழ். பிரதேசத்தில தெல்லிப்பழை, மாதனை, விலலூன்றி கேணியடி, நாவாந்துறை ஒருபகுதி, முத்தமிழ் வீதி, மீனாட்சி அம்மன் கோவிலடி, இளவாலை, வித்தகபுரம், பெரியவிளான், அளவெட்டியின் ஒரு பகுதி, சேந்தாங்குளம், யாழ். சிறைச்சாலை, யாழ் பொலிஸ் நிலையம், யாழ். துரையப்பா விளையாட்டரங்கு, யாழ் பல்கலைக்கழக கலைப்பீடம் குஞ்சர்கடையிலிருந்து மந்திகை வரைக்கும், மந்திகை ஆதார வைத்தியசாலை, கரவெட்டி இலங்கை தொலைத் தொடர்பு கோபுரம், நெல்லியடி கார்கில்ஸ் பூட்சிற்றி, சுப்பர்மடம் ஐஸ் தொழிற்சாலை, நெல்லியடி இலங்கை வங்கி, நெல்லியடி றூபின்ஸ் (பிறைவேற் லிமிற்ரட்) வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில உமணகிரி, வன்னிச்சியங்குளம், நறுவிலிக் குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ உயர்ந்த பீடத்தில் நின்று உனது கையில் ஐந்து காசுகளை எடுத்துக்கொண்டு "ஏழையே இதை வாங்கிக் கொள்" என்று கூறாதே. அவனுக்குக் கொடுப்பதால் உனக்கு நீயே உதவி புரிய முடிந்ததெனக் கருதி அந்த ஏழை கொடுப்பவனே பேறு பெற்றவன் பெறுபவனல்ல.

❖ பெருமை கொள். தியாகமின்றிப் பெரும்பணிகள் எதையும் செய்ய இயலாது. பெரியோர் தாமே இவ்வுலகை படைப்பதற்காகத் தம்மையே தியாகம் செய்தனர். உனது சுக சாதனங்களையும் உனது பெயரையும் புகழையும் மதிப்பையும் உனது வாழ்வையும் கீழே வைத்துவிடு. மக்களைச் சங்கிலிகளாகக் கொண்டு ஒரு பாலத்தை அமைத்திடுக. அதன்மீது கோடிக்கணக்கான மக்கள் நடந்து சென்று இப்பிறவிக்கடலைத் தாண்டட்டும்.

❖ நன்மையை நாடும் படைகளையெல்லாம் ஒருங்கிணைக்க வேண்டும். எந்தக் கொடியைப் பிடித்துச் செல்கின்றாய் என்பதைப் பொருளாகக் கொள்ளாதே. உனக்குக் கிடைக்கும் நிறம் பச்சையே நீலமோ சிவப்போ என்பதைப்பொருட்படுத்தாதே. எல்லா வண்ணங்களையும் ஒன்றாகக் குழைத்து அன்பின் வண்ணமாகிய வெண்மையெனும் பெருஞ்சோதியை உண்டாக்கு. செயல்புரிவதே நமக்குரியது. பயன்கள் தம்மைத் தாமே கவனித்துக் கொள்ளட்டும்.

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.

இதில் பங்குபெறும் கழகங்கள் தமது பதிவுகளை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பதிவுகளை மேற்கொள்ளும் கழகங்கள் மாத்திரமே போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

தொடர்புக்கு ம.ரகுவரன்-077 112 9329, ச.தர்சன்-077 224 7578, ரி.தினோஜன்-077 247 9483. (கு)

# தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி பதக்கங்களை சுவீகரித்தது மகாஜனா



பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் மகாஜனக்கல்லூரி இரண்டு பதக்கங்களை ஆரம்ப நாளில் சுவீகரித்துக் கொண்டது.

கண்டி போகம்பரை விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் போட்டி ஆரம்பித்தது. தொடர்ந்து எதிர்வரும் 18.10.2016 செவ்வாய்க்கிழமை வரை போட்டிகள் நடைபெறவுள்ளன.

நடைபெற்ற 19 வயது பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் மகாஜன மங்கை சி.டிலானி 2.80 மீற்றர் உயரத்தை தாண்டி வெள்ளிப்பதக்கத்தையும் 17 வயதுப் பெண்களுக்கான உயரம் பாய்தலில் மகாஜன மங்கை ஹெரினா 1.50 மீற்றர் உயரத்தை தாண்டி வெண்கலப்பதக்கத்தையும் பெற்று பெருமை சேர்ந்தனர். (கு)

## சென்.மேரிஸ் வெற்றி

யாழ்.லீக் அனுசரணையுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் பட்டத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டியில் சென்.மேரிஸ் வி.கழகத்தை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் மேதியது. இதில் 2:1 என்ற கோல் கணக்கில் சென்.மேரிஸ் அணி வெற்றி பெற்றது. (கு)

## வளர்மதி, கலைமதி வெற்றி பெற்றன

புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட போட்டியில் அண்மையில் நடைபெற்ற கால் இறுதிப்போட்டியில் (புத்தூர்) வளர்மதி விளையாட்டுக்கழகம் 25:20,25:15 என்ற செற்கணக்கில் (சண்டிலிப்பாய்) இந்து இளைஞர் வி.கழகத்தை வெற்றி கொண்டது.

நடைபெற்ற இரண்டாவது (புத்தூர்) கலைமதி வி.க. 25:17, 25:16, 25:17 என்ற செற்கணக்கில் மோகன் தாஸ்விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டது. (கு)

## இளம் பறவைகள் வி.க. உதைபந்தாட்ட முடிபுகள்

சிலாவத்தை இளம் பறவைகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற முதல் போட்டியில் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விண்ணொளி விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியை பதிவு செய்தது.

நடைபெற்ற 2 ஆவது போட்டியில் உதயம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஒற்றுமை வி.கழகம் மோதியது.

இப் போட்டியில் உதயம் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியை பதிவு செய்தது. நடைபெற்ற 3 ஆவது போட்டியில் சுப்பர்றாங் வி.கழகத்தை எதிர்த்து மன்னாகண்டல் வளர்மதி விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் வளர்மதி விளையாட்டுக் கழகம் தண்ட உதை மூலம் வெற்றியை பெற்றது. நடைபெற்ற 4 ஆவது போட்டியில் வவுனியா யுனிபைட் வி.கழக த்தை எதிர்த்து ஆனந்தா விளையாட்டுக்கழகம் மோதியது.

இப்போட்டியில் யுனிபைட் வி.க. 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியைப் பெற்றது. (கு)

## றோட்டரக்ற் கழக கிரிக்கெட்; சுழிபுரம் அணி இரண்டாமிடம்




கண்டி றோட்டரக்ற் கழகம் நடத்திய ரி.ஆர்.ஆர். ராஜன் ஞாபகார்த்த 14 ஆவது கிரிக்கெட் போட்டியில் சுழிபுரம் றோட்டரக்ற் கழகம் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டது.

5 பந்து பரிமாற்றம் 6 பேர் கொண்ட இப்போட்டியின் இறுதிப் போட்டி கண்டி அஸ்கிரிய சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

திருகோணமலை றோட்டரக்ற் கழகத்துக்கு சுழிபுரம் றோட்டறிக்கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை அணி 5 ஓவர் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் அணி 5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களை பெற்று இரண்டாம் இடத்தை பெற்றது.

துடுப்பாட்டத்தில் பிரசாந் 22 ஓட்டங்களையும் காத்திகேயன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். (கு)

## மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி (லவர் கேம்) நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் பங்குபற்றும் கழகங்கள் அன்றைய தினம் மாலை 6.30 மணிக்கு போட்டி அட்டவணை தயாரித்து போட்டிகள் தொடர்ந்து நடைபெறும். மறுநாள் திங்கட்கிழமை ஏனைய கழகங்களுக்கு மாலை 6.30 மணியளவில் போட்டிகள் ஆரம்பமாகும்.

அனைத்து கழகங்களும் உரிய நேரத்திற்கு சமுகம் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு ம.ரகுவரன்-077 112 9329, ச.பிரசாந்-077 933 3068, வ.மதிமிதன்-077 171 3599, கழகத்தலைவர் த.வேணுகானன்-077 788 5307. (கு)

# விடத்தல்தீவு ஐக்கியத்தை வீழ்த்தியது ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்



வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான வடக்கின் வல்லரசன் தொடரில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் மன்னார் விடத்தல்தீவு ஐக்கியம் மற்றும் ஊரெழு றோயல் அணிகள் மோதின.

ஆட்டத்தின் 4,8 ஆவது நிமிடங்களில் றோயல் வீரன் நிதர்சன் அற்புதமான இரு கோல்களை பெற்றுக்கொடுத்தார். தொடர்ந்து தனது கணக்கிற்கு கானுஜன் 15 ஆவது நிமிடத்தில் ஒரு கோலை பெற்றுக் கொடுக்க 3:0 என றோயல் முன்னிலை வகித்தது.

எனினும் சளைக்காமல் போராடிய விடத்தல்தீவு ஐக்கியம் ஜான்சன் மற்றும் டெலக்சன்ராஜ் ஆகியோரின் உதவியுடன் 17,19 ஆவது நிமிடங்களில் இரு கோல்களை பதிவு செய்தது.

இருப்பினும் றோயல்வீரன் கோபன் 24 ஆவது நிமிடத்தில் ஒரு கோலை பெற்றுக்கொடுக்க முதற்பாதியில் 4:2 என றோயல் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் மேலும் எழுச்சி கண்ட றோயல் அணிக்கு சயந்தன் 35,37 ஆவது நிமிடங்களிலும் கானுஜன் 40 ஆவது நிமிடத்திலும் கபில் 42 ஆவது நிமிடத்திலும் நிதர்சன் மேலும் ஒரு கோலை 46 ஆவது நிமிடத்திலும் பெற்றுக் கொடுக்க இறுதியில் றோயல் அணி 9:2 என்ற கணக்கில் வெற்றி பெற்றுக்கொண்டது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சயந்தன் தெரிவானார். (கு)

## வாசிப்பின் மகத்துவம் நாடகம் இன்று

(கொழும்புத்துறை)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் சமூக விழிப்புணர்வைத் தூண்டும் "வாசிப்பின் மகத்துவம்" எனும் நாடகம் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தில் மேடையேறவுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி நெடுந்தீவு மகிழகத்திலும் இந் நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

நூலகப்பணியாளர் ஜோ.ஜெஸ்ரின் எழுதி நெறியாக்கம் செய்துள்ள மேற்படி நாடகம் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியிலும் வேலணை மத்திய கல்லூரியிலும் மேடையேற்றப்பட்டுள்ளமையும் தொடர்ந்து பல இடங்களிலும் மேடையேறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு நாடக நிறைவிலும் நூலை நடமாடும் சேவையும் நூலகப் பணியாளர்களால் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-51)

## "லசந்தவை...

கேகாலை கரடுபன தெஹிபிடிய பகுதியை சேர்ந்த எதிரி சிங்க ஜயமான்ன (வயது 52) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே அவரது வீட்டில் நேற்று தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளதாக கேகாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த ஊடகவியலாளரின் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் இந்த தற்கொலை சம்பவம் இடம்பெற்றிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

மேற்படி அதிகாரி நேற்றைய தினம் ஒரு இடத்திற்கு செல்வதற்கென முச்சக்கர வண்டி சாரதியொருவரை அழைத்துள்ளார். சாரதி அங்கு சென்ற போது அவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

இந் நிலையில் அங்கு வரவழைக்கப்பட்ட பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையில், குறித்த நபரின் மனைவி வெளிநாட்டில் இருப்பதாகவும் சடலத்தின் இடுப்பில் சொருக்கப்பட்டிருந்த நிலையில், கடிதம் ஒன்று காணப்பட்டதாகவும் தெரிவித்ததுடன்.

அக் கடிதத்தில் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவை கொலை செய்தது தான் எனவும் குறித்த படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள புலனாய்வு அதிகாரி மிலிந்த உதலாகமவை விடுதலை செய்யுமாறும், தனது கடிதத்தை புலனாய்வுப் பிரிவுக்கு கையளிக்குமாறும் குறித்த கடிதத்தில் அவர் கோரிக்கை விடுத்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாராந்த ஆங்கில நாளிதழான சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அலுவலகத்திற்கு செல்லும் போது அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

குறித்த படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் இக் கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் ஆனந்த உதலாகம என்ற இராணுவ புலனாய்வுப் பிரிவின் சார்ஜன்ட் மேஜர் பிரேமானந்த உதலாகம விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன்,

லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பான புதிய விசாரணையின் ஒரு பகுதியாக அவரது சடலம் பொலிஸாரால் தோண்டி எடுக்கப்பட்டிருந்தது.

முரண்பாடான பிரேத பரிசோதனை அறிக்கைகள் காரணமாக லசந்த விக்ரமதுங்கவின் சடலத்தை தோண்டி எடுத்து, பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த பொலிஸாருக்கு நீதிமன்றம் இதற்கான அனுமதியை வழங்கியிருந்தது.

அத்துடன் லசந்த விக்ரமதுங்கவின் கொலைக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் உட்பட பலருக்கு தொடர்பு இருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்ற நிலையிலும் குறித்த வழக்கு விசாரணை முடிவடைந்து வரும் கட்டத்தில் விசாரணைகளை திசை திருப்பும் நோக்கில் இந்த புதிய சம்பவம் நடந்துள்ளதாக சட்டத்துறை சார்ந்தோர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த நபர் லசந்தவை உண்மையில் கொலை செய்திருந்தால், உண்மையை கூறி பொலிஸாரிடம் சரணடைந்திருக்கலாம். அதனை விடுத்து ஏன் தற்கொலை செய்து கொண்டார் என்பது கேள்வியை எழுப்பியுள்ளது.

இந் நிலையில் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் உண்மையான கொலையாளிகள் தப்பிப்பதற்காக மற்றுமொரு கொலை செய்யப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் நிலவும் நிலையில் உண்மை என்ன என்பதை கண்டறிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-9)

## ஜனாதிபதி...

இந்த பிரிஸ்ட் (BRICS) மாநாட்டின் தலைமை பொறுப்பும் உபசரிப்பு பொறுப்பும் இந்தியாவுக்கு கிடைத் துள்ளதுடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் விசேட அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த மாநாட்டில் கலந்துகொள்கிறார்.

இன்றும் நாளையும் இம்மாநாடு இந்தியாவின் கோவாவில் நடைபெறுகிறது.

இந்தியா. சீனா, ரஷ்யா, பிரேசில, தென்னாபிரிக்கா ஆகிய வளர்ச்சியடைந்து வரும் ஐம்பெரும் பொருளாதார நாடுகளும் பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகிய BIMSTEC நாடுகளும் உட்பட ஆப்கானிஸ்தான் மாலைத்தீவு ஆகிய நாடுகளின் தலைவர்களும் இம்மாநாட்டில் பங்குபற்றுகின்றனர்.

எல்லாவற்றையும் உள்ளடக்கிய, கூட்டுத் தீர்வுகளை கட்டியெழுப்புதல் என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறும் இம்மாநாட்டில் BIMSTEC அபிவிருத்தி வங்கி, சுகாதாரம், நிலைபேறான அபிவிருத்தி, தூய மற்றும் பசுமை மின்சக்தி ஆகிய துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட உள்ளது.

சீனா, இந்தியா, பிரேசில் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் இணைந்து 2009ஆம் ஆண்டு உருவாக்கிய பிரிக்ஸ் அமைப்பில் 2010ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவும் இணைந்துகொண்டது. அந்த நாடுகளின் ஆரம்ப எழுத்துக் களைப் பயன்படுத்தி BRICS என்ற பெயர் இந்த அமைப்புக்கு வழங்கப்படுகிறது.

பிரிக்ஸ் மாநாட்டில் பங்குபற்றும் ஜனாதிபதி மாநாட்டில் பங்குபற்றும் பல்வேறு நாடுகளின் அரச தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவுள்ளார். (செ-11)

## யாழ்.பல்கலையில் நேற்று போராட்டம்...

...யும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் பாரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டம் நேற்று பன்னிரண்டு மணியளவில் இடம்பெற்றதோடு, இதில் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டு தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்திருந்தனர்.

முன்னதாக பல்கலையின் கலைப்பீட வளாகத்தில் ஆரம்பித்த போராட்டம் பேரணியாக யாழ். பல்கலையின் பிரதான வாயில் பகுதிக்கு வந்து அங்கு கவனயீர்ப்பு போராட்டமாக நடத்தப்பட்டது.

தங்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற ஒரு நாள் சம்பளமான 620 ரூபாய் என்பதை 1000 ரூபாய் ஆக அதிகரிக்க கோரி கடந்த 22-ஆம் திகதியில் தொழிலாளர்களினால் பொகவந்தலாவவில் ஆரம்பிக்கப்பட்ட தொழிலாளர்களின் போராட்டம், தற்போது மலையகம் தழுவிய போராட்டமாக மாற்றமடைந்து தொடர்ச்சியாக கடந்த இருபது நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த போராட்டத்திற்கு ஆதரவாக கொழும்பில் மிகப்பெரிய போராட்டம் நடைபெற்றதோடு,

அதனை தொடர்ந்து நாட்டின் அனைத்து பாகங்களில் உள்ள மக்களும் குறித்த போராட்டங்களுக்கு ஆதரவாக போராடிவருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்திலும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையிலேயே யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மேற்படி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த மாணவ மாணவிகள், நாட்டின் வருமானத்தை உயர்த்துவோர்க்கு ஆயிரம் ரூபாய் போதுமா? மலையக மக்களின் கல்விக்கான மூலதனத்தை முடக்காதே, தோட்ட தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டுவதா நல்லாட்சி? சுரண்டுவோருக்கு சுக வாழ்வு உழைப்போர்க்கு வெறு வயிறு ஆயிரம் ரூபா நாள் சம்பள போராட்டம் நியாயமானது, நல்லாட்சி அரசே தொழிலாளர்களின் கோரிக்கைக்கு மதிப்பளி, கம்பனிகளே தொழிலாளர் வயிற்றில் அடிக்காதே, அந்நிய செலாவணியை அள்ளித் தருவோர்க்கு 1000 ம் மட்டுமா என எழுதப்பட்ட வாசகங்களை ஏந்தியிருந்தனர்.

வாரத்தில் ஆறு நாட்கள் வேலை வழங்கு பதினெட்டு மாத நிலுவை வழங்கு, என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்ததோடு, சுக போக வாழ்வு வாழ்பவர்களுக்கு தெரியுமா? தொழிலாளர்களின் கடின உழைப்பு?, நல்லாட்சி என்பது ஏழைகள் வாழ்வை அழிப்பதா? நிலத்தால் உயர்ந்த மலையகம் வாழ்வால் உயர வேண்டாமா? எனப்பல கோசங்களையும் அவர்கள் எழுப்பியிருந்தனர்.

தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும் வரை எமது போராட்டம் தொடர்ந்து நடைபெற்று கொண்டு இருக்கும் எனவும் ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர்கள் இதன் போது கருத்து தெரிவித்துள்ளனர்.

பாரிய போராட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், மற்றும் ஆசிரயர் சங்கம் என்பன ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

## இலங்கையின் முன்னேற்றத்...

...க்கு ஐரோப்பிய ஒன்றியம் முழு அளவில் உதவும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அவர் உறுதியளித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய தூதுவர் ராங் லாய் மாகி தனது நியமனக்கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து நேற்று கையளித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, ஜனநாயகம், நல்லிணக்கம், வர்த்தகம் மற்றும் முதலீடுகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவை மேலும் பலப்படுத்த புதிய தூதுவர் ஒத்துழைப்பு வழங்குவார் என நம்பிக்கை வெளியிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்குமிடையே நெருங்கிய பொருளாதார உறவுகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, மீன் ஏற்றுமதித் தடையை நீக்கியமைக்காக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு நன்றி தெரிவித்தார். இலங்கை தற்போது ஐரோப்பாவுக்கு அதிகளவில் மீன் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமையில் இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதிகளை குறிப்பாக ஆடைகள் ஏற்றுமதியை அதிகரிக்கக் கூடிய வகையில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கான ஜி.எஸ்.பி வரிச்சலுகையை மீண்டும் பெற்றுத்தரும் என்றும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற வர்த்தக கண்காட்சிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்ததாகக் கூறிய தூதுவர், ஏற்றுமதிச் சந்தைக்கு இலங்கை வழங்கிவரும் அதிக உற்பத்திகள் தொடர்பில் மகிழ்ச்சியடைவதாக குறிப்பிட்டார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தனது மனைவியுடன் விடுமுறையைக் கழிப்பதற்காக இங்கு வருகை தந்ததாகவும், இலங்கையை மிகவும் நேசிப்பதாகவும் குறிப்பிட்ட அவர், இந்த அழகிய தேசத்திற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குமிடையிலான உறவுகளை பலப்படுத்தும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவராக வரக்கிடைத்திருப்பதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன், மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எசல வீரக்கோன் ஆகியோரும் இச்சந்திப்பின் போது பிரசன்னமாகியிருந்தனர். (செ-5)

## கொடிகாமம் பொலிஸ் நிலை...

வரை சந்தேகத்தின் பேரில் கைது செய்திருந்தனர். பின்னர் குறித்த வாலிபர் பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பிச் சென்றுவிட்டதாக பொலிசார் அறிவித்திருந்த நிலையில், சிறிது நாட்களின் பின்னர் சந்தேக நபரின் சடலம் குளம் ஒன்றில் இருந்து மீட்கப்பட்டிருந்தது. பிரேத பரிசோதனையின் போது சந்தேக நபர் கடுமையாக தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்ட ஏனைய சந்தேக நபர்கள் குறித்த உண்மை சம்பவத்தை மல்லாகம் நீதிமன்றில் வெளிப்படுத்தியதனை அடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட நான்கு பேரை கைதுசெய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. எனினும் சந்தேக நபர்கள் தலைமறைவாகியிருந்த நிலையில் அவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய சார்ஜன்ட் ஒருவர் கடந்த வாரம் பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தில் சரணடைந்திருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார் இந்நிலையில், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி ஐ.எம்.பண்டார உட்பட நால்வரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நேற்றைய தினம் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையிலேயே நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதேவேளை சுன்னாகம்பொலிஸ நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி ஐ.எம்.பண்டார உட்பட நால்வருக்கும் எதிராக தொடரப்பட்டுள்ள மற்றுமொரு சித்திரவதை தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 19ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்றில் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், அன்றைய தினம் குறித்த நால்வரும் முன்னிலைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## மோ.சைக்கிள்...

வீதியின் வளைவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பல்சர் ரக மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி மின் கம்பத்துடன் மோதியதில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 3.45 மணியளவில் ஏ-9 வீதி யாழ். கச்சேரி பகுதிக்கும் மாம்பழம் சந்திக்கும் இடைப்பட்ட வளைவில் இடம்பெற்றுள்ளது.

இதில் நெடுந்தீவு கிழக்கு 5ஆம் வட்டாரத்தினை சேர்ந்த தாமரைலசிங்கம் பகீரதன் (வயது - 24) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

சடலமானது பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்று இரவு 8.30 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணையை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (செ-30)

## 130 கிலோ கேரள...

ள்ளதாக புலனாய்வுத்துறை பொலிஸாருக்கு இரகசிய தகவலொன்று கிடைத்துள்ளது. இதனையடுத்து யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சன்ஜீவ தர்மரட்ணவின் வழிகாட்டலின் கீழ் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் உருவாக்கப்பட்ட புலனாய்வுத்துறை பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

இக்குழு மாதகல் கடற்பரப்பில் விஷேட ரோந்து நடவடிக்கைகளுடன் கரையோரத்தில் விஷேட விசாரணை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் ஆரம்பித்திருந்தது. இந்நிலையில் இந்தியாவில் இருந்து யாழ்.மாதகல் கடற்பரப்பினூடாக வெளிமாவட்டமொன்றுக்கு விற்பனை செய்வதற்காக கடத்தி கொண்டுவந்திருந்த கடத்தல்காரர்கள் பொலிஸாரின் விசாரணை நடவடிக்கையால் கடலில் கஞ்சா பொதிகளை வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனால் கடலில் மிதந்து வந்த 35கஞ்சா பொதிகளையும் புலனாய்வுத்துறை பொலிஸார் கைபற்றியிருந்தனர். இதில் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த நிறை 130 கிலோ கிராம் எனவும் இவற்றின் மொத்த பெறுமதி ஒரு கோடியே 30இலட்சம் ரூபாய் எனவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் இக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யார் என்பது தொடர்பாகவும் இது யாழ்ப்பாணத்தில் யாருக்காக கடத்திவரப்பட்டது என்பது தொடர்பாகவும் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். அண்மை காலங்களாக யாழில் இவ்வாறான போதைப்பொருள் கடத்தல்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4)


உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்கள் பொதிகள் சேவை

❋ 220க்கு மேற்பட்ட நாடுகளுக்கான பொதிகள் சேவை.
❋ சகல நாடுகளுக்குமான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

| நாடுகள் | 5Kg மேற்பட்ட பொதிகளுக்கு | 11Kg மேற்பட்ட பொதிகளுக்கு |
|---|---|---|
| London | 900 | 550 |
| Germany | 900 | 650 |
| France | 900 | 700 |
| Italy | 900 | 800 |
| Denmark | 900 | 800 |

மற்றைய நாடுகளுக்கும் விசேடசலுகைகள் உண்டு . (நிபந்தனைக்குட்பட்டது)
உங்கள் வீடுகளில் பொறுப்பேற்கப்பட்டு குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிட்டெட்
271A கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
Hotline: 0212227835
கிளைகள்: திருநெல்வேலி, நெல்லியடி, சங்கானை.



2018-ம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா

50,000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்புக்கள்.
நீங்களும் அதிஸ்ரசாலிகளாகும் அரிய சந்தர்ப்பம்.
நழுவவிடாதீர்கள். 18 வயதிற்கு மேற்பட்டவர்கள்
குடும்பமாகவோ, தனிப்பட்ட முறையிலோ
விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள்
07.11.2016 வரை ஏற்றுக்கொள்ளப்படும்

திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிட்டெட்
271A கே.கே.எஸ் றோட் யாழ்ப்பாணம்.
Hotline: 0212227835
கிளைகள்: திருநெல்வேலி, நெல்லியடி, சங்கானை.



60 ஆவது அகவை கண்டு தன் ஆசிரிய சேவையில் இருந்து இன்று ஓய்வுபெறும்
இராசநாயகம் புஸ்பராணி
அவர்களை வாழ்த்துகிறோம்
(யா.வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)





அகவை அறுபது காணும் அன்பு உறவே
நீங்கள் அகத்தில் அமைதி பெற்று
அகலா புன்னகை செய்து சுகமாய்
சுபீட்சம் கண்டு சுந்தரச் சிரிப்பு தாங்கி
சுற்றத்தார் அன்பு வாங்கி சேவையில் ஓய்ந்து கொண்டாலும்
செழிப்போடு என்றும் வாழ சேர்ந்து
நாம் வாழ்த்துகின்றோம்.

இவ் வண்ணம்
கணவர் கு.இராசநாயகம் (ஓய்வுபெற்ற அதிபர்)
மகள்மார் திரு திருமதி அம்பிகை திலீப்குமார் (இலண்டன்)
செல்வி இ.சுபேதா நூலகப் பரிசோதகர் அளவெட்டி
உற்றார், உறவினர்கள்

குரும்பசிட்டி
தெல்லிப்பழை



EDISSAN ACADEMY
29th Anniversary Prize Day
Date
16.10.2016 Sunday 8.15 a.m
Venue
Raja Cream House Hall
Chief Guest
Mr. Sivagnanam Shritharan
Honorable Member of Parliament – Jaffna District
(Parent of Edissan Academy)



டிப்பர் ரக வாகனங்கள் தேவை

கொழும்பில் உள்ள கட்டட வேலை ஒப்பந்தத்திற்கு மூன்று கீப் டிப்பர் ரக வாகனங்கள் தேவை. கிலோ மீற்றருக்கு 140/- வழங்கப்படும்.
ஒப்பந்த காலம் : குறைந்தது ஆறு மாதங்கள் கூடியது ஐந்து வருடங்கள்.
தொடர்புகளுக்கு :
0777554528



SIKARAM ACADEMY, School of Hospitality இன்
ஆயுசு 100
உணவே மருந்து
யாழ்ப்பாண பாரம்பரிய ஆரோக்கிய உணவுகள்
இன்றைய ஸ்பெஷல் ஒடியல் கூழ் மற்றும்
இலைக்கஞ்சி, காலை, மதிய & இரவு உணவுகள்
பழரசம், ஆரோக்கிய கோப்பி
யாழ் நகர எல்லைக்குள் FREE DELIVERY
021 300 8060
#175,முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி),யாழ்ப்பாணம்.


## இ.போ.ச...

முன்னே சென்ற இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துடன் மோட்டார் சைக்கிளில் சென்றவர் பின்பக்கமாக மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

படுகாயமடைந்தவர் உடனடியாக கோப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் . போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந் நிலையில் இவ் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)


FALC FRENCH LANGUAGE CENTRE
FOR THE BEST FRENCH FOREVER
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy இல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM
விரிவுரையாளர் : France இல் ஆசிரியப் பயிற்சி - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவர்.
DELF A1, A2,B1பரீட்சைகளில் 100 % சித்தி. 1145 மாணவர்கள் French கற்றுள்ளனர்
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 22.10.16 சனி 8 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம் 24.10.16 Mon @ 3.30pm
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre



அமெரிக்க லொத்தர் விசா
2018ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
பதிவுகள் 04-10-2016 தொடக்கம் 07-11-2016 வரை 0768226230
VISA இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா
எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்
V2 TRAVELS
#49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0768226241
A9 வீதி கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892
பருத்தித்துறை 0768226230
வல்வெட்டித்துறை 0776697960



அன்னை முத்துமாரி பஸ்சேவை Annai Muthumari

புதியபாதை: பருத்தித்துறை, நெல்லியடி, அச்சுவேலி, கோப்பாய், உரும்பிராய், மருதனார்மடம், மானிப்பாய், ஆறுகால்மடம் ஊடாக யாழ்ப்பாணம் சென்றடைந்து பின் கொழும்பு சென்றடையும்.

| இரவு | (புறப்படும் நேரம்) | | இரவு | (புறப்படும் நேரம்) | |
|---|---|---|---|---|---|
| பருத்தித்துறை | 7.00 | am | பருத்தித்துறை | 7.00 | pm |
| யாழ்ப்பாணம் | 8.00 | am | யாழ்ப்பாணம் | 8.00 | pm |
| வெள்ளவத்தை | 7.30 | am | வெள்ளவத்தை | 7.00 | pm |
| கொட்டாஞ்சேனை | 8.30 | am | கொட்டாஞ்சேனை | 8.00 | pm |

133, (A9) கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல : - 021 221 0773 / 077 544 8503

யாழ்ப்பாணம் 077 544 8503
கொழும்பு 077 544 9251
வல்வெட்டித்துறை 077 544 7359
நெல்லியடி 077 285 0285
பருத்தித்துறை : 0775552973
வீட்டில் இருந்தவாறே பயணச்சீட்டை பெற்றுக் கொள்ளலாம்.
சகல நாடுகளுக்கான விமான பயணச் சீட்டுக்களை நியாய விலையில் எமது சகல கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள், பொதிகள் துரித கதியில் அனுப்பிட இன்றே நாடுங்கள்.
208 A, காலிவீதி. (றோயல் பேக்கரி அருகாமை) வெள்ளவத்தை.
தொ.பே.இல : - 011 236 1766 / 077 544 925
www.annaimuthumari.com


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.